விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2048 மார்கழி 06 வியாழக்கிழமை (21.12.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 002

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுன் வீதி,
யாழ்ப்பாணம்.
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

## உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்புமனுதாக்கல் இன்று நண்பகலுடன் முடிவடையவுள்ள நிலையில்

# யாழ். மாவட்ட செயலகத்தில் பாதுகாப்பு அதிகரிப்பு

### யாழ்.மாவட்ட அரச அதிபர் வேதநாயகன் தெரிவிப்பு

*(யாழ்ப்பாணம்)*

*உள்ளூராட்சி தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யும் கால எல்லையானது இன்றையதினம் நண்பகலுடன் முடிவடையவுள்ள நிலையில் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அரச அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான நாகலிங்கம் வேதநாயகன் தெரிவித்துள்ளார்.*

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்றையதினம் மாலை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

குறிப்பாக இம்முறை யாழ்ப்பாணத்திலுள்ள பிரதேச சபைகள் நகர சபைகளில் அதிகள 03





## யாழில் 243 வட்டாரங்களில் 468,476 பேர் வாக்களிக்க தகுதி!

(யாழ்ப்பாணம்)

பெப்ரவரி 10ஆம் திகதி இடம்பெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் 243 வட்டாரங்களில் 468,476 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளதாக யாழ் மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் என்.அகிலன் தெரிவித்தார். தெரிவு செய்யப்பட வேண்டிய மொத்த உறுப்பினர்களின்எண்ணிக்கை 453 பேர்கள். இதில் வேட்பு மனுப்பத்திரத்தில் இருக்க வேண்டிய பெண்களின் எண்ணிக்கை 133 ஆகும்.

யாழ். மாநகர சபைக்கு 27 வட்டாரங்களில் 56,182 வாக்காளர்களும், வல்வெட்டித்துறை நகர சபைக்கு 09 வட்டாரங்களில் 6, 055 வாக்காளர்களும், பருத்தித்துறை நகர சபைக்கு 09 வட்டாரங்களில் 7,864 வாக்காளர்களும், சாவகச்சேரி நகர சபைக்கு 11 வட்டாரங்களில் 12,490 வாக்காளர் 03

## வேட்பு மனுவில் கையெழுத்திட்டால் தீவைத்து கொளுத்துவோம்

### பெண் வேட்பாளருக்கு புதுக்குடியிருப்பில் அச்சுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார் பில் உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடுவதற்காக வேட்பு மனுவில் கையெழுத்திடச் சென்ற பெண் ஒருவரை கட்சி அலுவலகத்தில் நின்ற சிலர் தீவைத்துக் கொளுத்துவோம் என அச்சுறுத்தியதால் அப் பெண் வேட்பு மனுவில் கையெழுத்திடாமல் திரும்பி சென்ற சம்பவம் நேற்று புதுக்குடியிருப்பில் இடம்பெற்றுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் உள்ளூராட்சி தேர்தலில் வன்னிமாவட்டத்தில் போட்டியிடுவதற்காக தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் வேட்பு மனுவில் கையெழுத்திடுவதற்காக புதுக்குடியிருப்பு பாராளுமன்ற உறுப்பினர் சிவமோகனுடைய அலுவலகத்துக்கு நேற்றுக் காலை சென்றிருந்தனர். 03

நல்லிணக்க அலைவரிசை

## யாழில் புதிய தொலைக்காட்சி

(யாழ்ப்பாணம்)

நல்லிணக்கத்தின் அலைவரிசை என்ற பெயரில் புதிய தொலைக்காட்சி சேவையொன்றை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கிறது.

அதன் கலையகம் சாவகச்சேரி மீசாலையில் அமைக்கப்படவுள்ளது. அதற்கான காணி யாழ். அரச அதிபரால் ஒதுக்கப்பட்டுள்ளது. 03

## மாற்றத்திற்காக தலைமையை விட்டுக்கொடுக்கத் தயார்

### ஆனந்த சங்கரி தெரிவிப்பு

(கிளிநொச்சி)

தமிழ் மக்கள் ஒரு மாற்றத்தை விரும்புகின்றார்கள். எனவே அவர்களின் விருப்பத்திற்கு அமைவாக எல்லோரும் ஒற்றுமையாக வந்தால் நான் தலைமையையும் விட்டுக்கொடுக்கத் தயார் என வீ.ஆனந்த சங்கரி தெரிவித்துள்ளார். 23



யாழில் உள்ளூராட்சி சபை தேர்தலுக்காக

## 4 கட்சிகள், 3 சுயேட்சைக் குழுக்கள் நேற்று வேட்புமனுத்தாக்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளில் போட்டியிடுவதற்காக நேற்றையதினம் நான்கு கட்சிகளும் மூன்று சுயேட்சைக் குழுக்களும் வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ளதாக யாழ். மாவட்ட செயலக தேர்தல்கள் அலுவலகம் தெரிவித்துள்ளது. இதன்படி நேற்றைய தினம் மக்கள் விடுதலை முன்னணியானது நான்கு சபைகளிற்கும், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் இரண்டு சபைகளிலும், தமிழர் விடுதலைக் கூட்டணி இரண்டு சபைகளிலும் மற்றும் சோசலிஷ சமத்துவ கட்சி ஒரு சபையிலும் போட்டியிடுவதற்காக வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ளன.

இதேபோன்று நெடுந்தீவு பிரதேச சபையில் போட்டியிடுவதற் 03

## துன்னாலைப் பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையம் பொலிஸாரால் முற்றுகை



(கரணவாய்)

துன்னாலைப் பகுதியில் கசிப்பு நிலையம் ஒன்று முற்றுகையிடப்பட்டதில் பெருமளவான கோடா அழிக்கப்பட்டதுடன் உபகரணங்களையும் நெல்லியடிப் பொலிஸார் மீட்டனர். பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல் ஒன்றினையடுத்து நேற்று 23

## பங்காளிக் கட்சிகளை புறந்தள்ளி தமிழரசு தனித்து வேட்பு மனு

### கட்சி உறுப்பினர்கள் விசனம்

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி தேர்தலில் கிளிநொச்சி மாவட்டத்தில் போட்டியிடுவதற்கு, தமிழ் தேசியக் கூட்டமைப்பு பங்காளிக் கட்சிகளை புறந்தள்ளி தமிழரசுக்கட்சி தனித்து வேட்பு மனு தாக்கல் செய்த காரணத்தினால் த.தே.கூட்டமைப்பின் பங்காளிக் கட்சி உறுப்பினர்கள் ஏமாற்றம் அடைந்துள்ளதுடன் இது தொடர்பில் விசனம் தெரிவித்துள்ளனர்.

உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பு மனுத்தாக்கல் தற்போது அனைத்து மாவட்டங்களிலும் மும்முரமாக இடம்பெற்று வருகிறது. இந்த நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பூநகரி 03

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்கள்



## திருமதி பராசக்தி திருஞானசம்பந்தன்

கோவளம், காரைநகரைச் சேர்ந்தவரும், இல.31, மணல்தரை லேன், கந்தர் மடத்தை வதிவிடமாகவும் கொண்டவருமான திருமதி பராசக்தி திருஞானசம்பந்தன் அவர்கள் கடந்த *(19.12.2017)* செவ்வாய்க்கிழமை நடேசப்பெருமான் திருப்பாதங்களை சரண் புகுந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திருஞானசம்பந்தன் அவர்களின் பாசமிகு வாழ்க்கைத் துணைவியும், காரைநகர் வாரிவளவைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான E.S.பேரம்பலம் - மாணிக்கம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான கிளாக்கர் அம்பலவாணர் - ஆச்சிமுத்து தம்பதிகளின் பாசம்மிகுந்த மருமகளும், சண்முகநாதன் (ஜேர்மனி), காலஞ்சென்ற சண்முகராஜா, செல்வி ஞானேஸ்வரி (ஆசிரியை), சண்முகரட்ணம் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், கலாமதி (ஜேர்மனி), சுரேணுகா (அவுஸ்ரேலியா), ஆகியோரின் அன்பு மாமியாரும், வானதி, ஆரதி, சுவாதி (ஜேர்மனி), நிவேதன், கவிதன் (அவுஸ்ரேலியா) ஆகியோரின் பாசம் மிகுந்த அப்பம்மாவும், பரமேஸ்வரி, சௌந்தராம்பிகை, E.S.P.நாகரத்தினம், அன்னபாக்கியம், காலஞ்சென்றவர்களான பாலாமணி, E.S.P.கணேசலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற திருச்சிற்றம்பலம் மற்றும் தியாகராஜா (கனடா), காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் திருநீலகண்டன் (இங்கிலாந்து), காலஞ்சென்ற திருவாதவூரர் மற்றும் சதாசிவம், சோமசுந்தரம், சண்முகராஜா, தங்கமலர், சுமதி ஆகியோரின் அன்பு மைத்துனியும், சாவித்திரிதேவி, காலஞ்சென்ற மகாலட்சுமி மற்றும் இராஜேஸ்வரி, தெய்வீகராணி ஆகியோரின் அன்புச் சகலியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று *(21.12.2017)* வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

31, மணல்தரை லேன், கந்தர்மடம். (சி-774) 021 221 9812



## நல்லையா அரியரட்ணம்

ஈவினை, புன்னாலைக்கட்டுவன், மாவடி அம்மன் கோவிலடி, இராமநாதபுரத்தைச் சேர்ந்த நல்லையா அரியரட்ணம் அவர்கள் நேற்று *(20.12.2017)* புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் நல்லையா - பொன்னாச்சி தம்பதிகளின் அன்பு மகனும், பொன்னையா - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் வள்ளிநாயகி அவர்களின் பாசமிகு கணவரும், சாந்தி (கனடா), வசந்தி (இராமநாதபுரம்), ஜெயந்தி (மலேசியா), செந்தராஜ் (கனடா), ரஞ்சினி (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், ஜெகதீஸ்வரன் (கனடா), தங்கேஸ்வரநாதன் (இராமநாதபுரம்), கமலராஜா (கனடா), பிரியங்கா (கனடா), நந்தகுமார் (அமெரிக்கா) ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (21.12.2017) வியாழக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக [illegible] இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

380, 5-ம் யுனிற், மாவடி அம்மன் கோவிலடி, இராமநாதபுரம். (சி-7[illegible]) தகவல்: குடும்பத்தினர் 024 324 9613

# University of Jaffna, Sri Lanka
## Faculty of Agriculture
### Commencement of Academic Programme

The commencement of academic programme for the academic year 2016/2017 Will be on **03.01.2018**, Wednesday at 10.30 am at the **Faculty of Agriculture, Ariviyal Nagar, Kilinochchi.**

22.12.2017 (சி-767) Registrar

## நன்றி நவிலுதலும் அந்தியேட்டி அழைப்பும்

கடந்த 22.11.2017 அன்று சிவதபதமடைந்த எமது குடும்பத்தலைவி

திருமதி
### சண்முகம் வேவி




அவர்களுடைய பிரிவுத் துயரில் மூழ்கி இருந்த போது நேரிலும் தொலைபேசி வாயிலாகவும், துண்டுப் பிரசுரங்கள் வாயிலாகவும் அஞ்சலிகளை செலுத்திய அரச மற்றும் தனியார் திணைக்களங்களுடைய உத்தியோகத்தர்கள், உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு. நாளை (22.12.2017) வெள்ளிக் கிழமை பகல் 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சத்தியபுரம், மல்வம். (1896) தகவல்: குடும்பத்தினர்

# 11-ம் ஆண்டு நினைவலைகள்

அன்னையின் மடியில் 17 - 04 - 1977

ஆண்டவன் பிடியில் 21 - 12 - 2006



## ஜெகநாதன் சிவவதனி

(கிளிநொச்சி உருத்திரபுரம் மகா வித்தியாலய ஆசிரியை)

ஆண்டுகள் பதினொன்று மீளாத் துயில் கொண்டு
எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திச் சென்றீரோ!
கலையாத நினைவுகளுடன் உதிரும் கண்ணீர் பூக்களால்
அர்ச்சித்து உமது ஆத்மா சாந்தியடைய எங்கள்
கண்ணீர்த் துளிகளை காணிக்கையாக்குகின்றோம்!

உடுவில் தெற்கு, முருகமூர்த்தி கோயிலடி. (சி-776)

-அம்மா, அப்பா, சகோதரர்கள்

## யாழ்.மாவட்ட செ...

வான கட்சிகள் சுயேட்சைக் குழுக்கள் போட்டியிடுவதற்காக கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளன. இதன் காரணமாக இன்றைய அதிகளவான கட்சிகள் சுயேட்சைக் குழுக்கள் வேட்பு மனுக்களை தாக்கல் செய்ய வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்நிலையிலேயே யாழ்.மாவட்ட செயலகத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகளானது அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக யாழ். மாவட்ட செயலகத்துக்குள் அரச வாகனங்களை தவிர்ந்த வேறு எந்த வாகனங்களும் உட்பிரவேசிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

மேலும் இன்றைய தினம் நண்பகல் 12 மணியுடன் வேட்புமனுக்களை தாக்கல் செய்வதற்கான கால எல்லையானது நிறைவடையவுள்ளதால் அதற்கு முன்னதாக கட்சிகள் சுயேட்சைக் குழுக்கள் தமது வேட்புமனுக்களை தாக்கல் செய்ய வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். (ம-4)

# பருத்தித்துறை பிரதேச சபை, புலோலி

## 2018 ஆம் ஆண்டுக்கான மீள்கேள்வி அறிவித்தல்

பருத்தித்துறை பிரதேசசபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள் 01.01.2018 தொடக்கம் 31.12.2018 வரை குத்தகைக்கு வழங்குவதற்கும் சந்தைக்கடைகள் வாடகைக்கு வழங்குவதற்கும் கேள்விகள் சபையால் கோரப்படுகின்றன.

01. கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :- 21.12.2017 தொடக்கம் 26.12.2017 வரை
02. கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித்திகதி :- 27.12.2017 மு.ப 10.00 மணி
03. கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி :- 27.12.2017 மு.ப 11.00 மணி
04. கேள்விப்பத்திரம் திறக்கப்படும் இடம் :- பருத்தித்துறை பிரதேசசபை தலைமை அலுவலகம்

பொதுச்சந்தைகள். இறைச்சிக்கடைகளின் விபரம்

| இல | சந்தைகள் இறைச்சிக்கடைகள் விபரம் | மீளளிக்கப் படாத கேள்விப் படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| | புலோலி உப அலுவலகம் | | | |
| 01 | மானாண்டிச் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 5,000.00 | 665,000.00 |
| 02 | மந்திகை பொதுச் சந்தை | 500.00 | 5,000.00 | 1,625,000.00 |
| 03 | கெருடாவில் பொதுச் சந்தை | 500.00 | 1,000.00 | 30,500.00 |
| | குடத்தனை உப அலுவலகம் | | | |
| 04 | மணற்காடு மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 5,000.00 | 183,500.00 |
| | மருதங்கேணி உப அலுவலகம் | | | |
| 05 | மருதங்கேணி பொதுச் சந்தை | 500.00 | 5,000.00 | 95,000.00 |

சந்தைக்கடைகளின் விபரம்

01.மந்திகைச் சந்தைக்கடை

| கடை இல. | கடையின் விபரம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கப் படும்கேள்வி வைப்பு | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திர கட்டணம் | மாத வாடகை |
|---|---|---|---|---|---|
| 05 | மந்திகைச்சந்தைக் கடை இல - 05 | 330,000.00 | 5000.00 | 1000.00 | 2,750.00 |
| 06 | மந்திகைச்சந்தைக்கடை இல - 06 | 330,000.00 | 5000.00 | 1000.00 | 2,750.00 |
| 07 | மந்திகைச்சந்தைக்கடை இல - 07 | 330,000.00 | 5000.00 | 1000.00 | 2,750.00 |
| 08 | மந்திகைச்சந்தைக்கடை இல - 08 (இக்கடையினை குத்தகைக்கு பெற்றுக்கொள்பவருக்கு கடையின் வாயிற்கதவினை குத்தகைக்கு பெறுபவரின் சொந்தச் செலவில் கிழக்குப்புறமாக மாற்றியமைப்பதற்கு மட்டும் அனுமதி வழங்கப்படும்) | 420,000.00 | 10000.00 | 1000.00 | 3,500.00 |

02. மானாண்டிச் சந்தைக்கடை

| கடை இல. | கடையின் விபரம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கப் படும்கேள்வி வைப்பு | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திர கட்டணம் | மாத வாடகை |
|---|---|---|---|---|---|
| 01 | மானாண்டிச் சந்தைக்கடை இல - 01 | 102,000.00 | 5000.00 | 1000.00 | 850.00 |
| 02 | மானாண்டிச் சந்தைக்கடை இல - 02 | 102,000.00 | 5000.00 | 1000.00 | 850.00 |
| 03 | மானாண்டிச் சந்தைக்கடை இல - 03 | 102,000.00 | 5000.00 | 1000.00 | 850.00 |
| 04 | மானாண்டிச் சந்தைக்கடை இல - 04 | 102,000.00 | 5000.00 | 1000.00 | 850.00 |

பொதுவான நிபந்தனைகள்

01. கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியை செயலாளர், பருத்தித்துறை பிரதேச சபை, புலோலி என்ற முகவரிக்கு அரக்குமுத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது அதற்கென தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்பட வேண்டும். இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 27.12.2017 மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.
02. கேள்விப்பத்திரம் பெற விரும்புபவர்கள் அவர்களது அடையாள அட்டையைக் கொண்டுவருவதுடன் அதன் நிழற்படப் பிரதியையும், கிராம அலுவலரால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பிக்கவேண்டும்.
03. இவை தொடர்பான விபரங்களை 31.10.2017, 28.11.2017ஆம் திகதிகளின் வலம்புரிப்பத்திரிகை விளம்பரத்திலும் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்திலும் பார்வையிடலாம்.

பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான நிபந்தனைகள்

01. தெரிவுசெய்யப்படும் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் 1/3 பகுதியை 28.12.2017 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்துகொள்ள வேண்டும்.

கடைகள் வாடகைக்கு வழங்குவதற்கான நிபந்தனைகள்

01. தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் கேள்வித் தொகையினை முழுமையாகச் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொண்டு பிரதேச சபையுடன் ஒப்பந்தத்தினைச் செய்துகொள்ளல் வேண்டும்.
02. மூன்று மாத வாடகையை முற்பணமாகச் செலுத்துதல் வேண்டும்.

சி.சிறிபாஸ்கரன்.
செயலாளர்,
பருத்தித்துறை பிரதேச சபை,
புலோலி.

(சி-771)

## வேட்பு மனுவில்...

அப்போது தமிழீழ மக்கள் விடுதலை இயக்கம் (புளொட்) சார்பாக பெண் உறுப்பினர் ஒருவர் கையெழுத்து வைப்பதற்காக சென்றிருந்தார்.

அப்போது அங்கிருந்த ஏனைய கட்சி உறுப்பினர்கள் சிலர் அப்பெண்ணை அச்சுறுத்தி ரயர் போட்டு தீவைக்கப்போவதாக தெரிவித்தனர். அப்பெண் பயத்தில், கையெழுத்து வைக்காமல் அவ்விடத்தை விட்டு விலகிச் சென்றார். அந்த நேரம் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டிருந்தது. (ம-9)

## பங்காளிக்கட்சி...

பச்சிலைப்பள்ளி, கரச்சி ஆகிய தொகுதிகளில் போட்டியிடுவதற்கான கட்டுப்பணத்தை தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு அண்மையில் செலுத்தியிருந்தது.

இந்த நிலையில் நேற்று வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்டது. ஆனால் 3 தொகுதிகளிலும் த.தே.கூட்டமைப்பின் பங்காளி கட்சிகளான புளொட் மற்றும் ரெலோ ஆகிய கட்சி உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படாமல் தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் மாத்திரம் தெரிவு செய்யப்பட்டு வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதனால் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஏனைய பங்காளி கட்சி உறுப்பினர்கள் கடும் விசனத்தை தெரிவித்ததுடன், தாம் முழுமையாக ஏமாற்றப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர். (ம-9)

## 4 கட்சிகள், 3...

காக ஒரு சுயேட்சைக் குழுவும், வல்வெட்டித்துறை நகர சபையில் போட்டியிடுவதற்காக ஒரு சுயேட்சைக் குழுவும், வலிகாமம் மேற்கில் போட்டியிடுவதற்காக ஒரு சுயேட்சைக் குழுவும் வேட்புமனுக்களை யாழ்.மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரிடம் தாக்கல் செய்திருந்தன.

மேலும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியானது ஏற்கெனவே சாவகச்சேரி நகர சபைக்கான வேட்புமனுக்களை தாக்கல் செய்திருந்த நிலையில் நேற்றைய தினம் ஏனைய 16 சபைகளுக்குமான கட்டுப்பணத்தை செலுத்தியிருந்தது. அதேபோன்று தமிழர் சமூக ஜனநாயக கட்சியானது சாவகச்சேரி பிரதேச சபைக்கான கட்டுப்பணத்தை நேற்றைய தினம் செலுத்தியிருந்தது. (ம-4)

## யாழில் புதிய...

இவ்வாறு சுகாதார போசாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சரும் அமைச்சரவை துணைப்பேச்சாளருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார். (ம)

## யாழில் 243 வட்...

களும், காரைநகர் பிரதேச சபைக்கு 06 வட்டாரங்களில் 8,170 வாக்காளர்களும், ஊர்காவற்றுறை பிரதேச சபை 08 வட்டாரங்களில் 7,279 வாக்காளர்களும், நெடுந்தீவு பிரதேசசபை 08 வட்டாரங்களில் 3,174 வாக்காளர்களும், வேலணை பிரதேச சபை 12 வட்டாரங்களில் 12,763 வாக்காளர்களும், வலிகாமம் மேற்கு பிரதேச சபை 15 வட்டாரங்களில் 34,292 வாக்காளர்களும், வலிகாமம் வடக்கு பிரதேச சபை 21 வட்டாரங்களில் 60,278 வாக்காளர்களும், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை 17 வட்டாரங்களில் 37,053 வாக்காளர்களும், வலிகாமம் தெற்கு பிரதேச சபை 18 வட்டாரங்களில் 37,086 வாக்காளர்களும்,

வலிகாமம் கிழக்கு பிரதேச சபை 22 வட்டாரங்களில் 52,517 வாக்காளர்களும், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை 19 வட்டாரங்களில் 35,047வாக்காளர்களும், பருத்தித்துறை பிரதேச சபை 12 வட்டாரங்களில் 29,394 வாக்காளர்களும், சாவகச்சேரி பிரதேச சபை 17 வட்டாரங்களில் 41,732வாக்காளர்களும், நல்லூர் பிரதேச சபை 12 வட்டாரங்களில் 27,100 வாக்காளர்களும், இத் தேர்தலில் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். (ம-15)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

கௌரவ

## அங்கஜன் இராமநாதன்

(யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்)



எமது சங்கத்தின் நூலக புனரமைப்புக்காக நூலக கட்டிடம் அமைப்பதற்கு ரூபாய் 1500000/=ஐ வழங்கி எமது பகுதி மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் வாசிப்பு பழக்கத்தை ஊக்குவிப்பதற்கும் ஆக்கமும் ஊக்கமும் வழங்கிய கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் அவர்களுக்கு எமது கூட்டுறவுச் சமூகம் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவருடைய சேவைகள் மேலும் தொடர வாழ்த்துவதில் பெருமையடைகின்றோம்.

Best Wishes

பணிப்பாளர்கள், பணியாளர்கள்
கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்
கரவெட்டி.

(C-773)



# அகவை 60 இல் கால்பதிக்கும் மாலாவுக்கு வாழ்த்துக்கள்

இன்றைய தினம் தனது 60ஆவது அகவையினை தனது இல்லத்தில் கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் உறவினர்களுடன் மிகச்சிறப்பாக கொண்டாடும் ஓய்வுநிலை ஆசிரியை

திருமதி

## கலாமாலினி சிவானந்தம்

(முன்னாள் பதில் அதிபர் - யாழ்.நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை)

அவர்கள் சகல செல்வங்களோடு சீரும் சிறப்புடனும் வாழவும் சமூகப் பணியினை தொடரவும் அன்னை கலைவாணியை பிரார்த்தித்து மகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்.

Best Wishes

*என்றும் அன்புரிமையுடன்*
திருமதி நாகலிங்கம் புஸ்பமணி
திருமதி செல்வநாதன் செல்வமங்களம்

(1894)

# கண்ணீர் அஞ்சலி

திருமதி

## பராசக்தி திருஞானசம்பந்தன்



அவர்கள் கடந்த 19.12.2017 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்த செய்தி அறிந்து ஆழ்ந்த துயரடைகின்றோம்.
அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

கஜமுகன் ஹாட்வெயார்,
E.S.P நாகரத்தினம் அன் கோ,
S.P.N மோட்டோர்ஸ்,
P.N.K குறூப்
உரிமையாளர்களும், பணியாளர்களும்

(C-775)

# Ministry of National Integration and Reconciliation

REHABILITATION OF RECONCILIATION FOCUSED HIGH PRIORITY ROADS AND BRIDGES WITH SECURED FINANCING ARRANGEMENTS IN NORTHERN AND EASTERN PROVINCES

## Invitation for Bids

1. The Chairman, Cabinet Appointed Negotiation Committee, on behalf of the Secretary, Ministry of National Integration and Reconciliation, invites sealed bids from eligible and qualified bidders for one or more of the 6 Contract Packages given in the Table 1 below. This includes rehabilitation of 1847.40 km covering 173.5 km Road Development Authority (RDA) Roads, 394.45 km of Road Development Department (RDD) Roads and 1279.45 km of Local Authority Roads.

| Name of the Contract | Length of Roads (km) | Contract Identification No. | Minimum Grade (applicable for local bidders only) | Speciality (applicable for local bidders only) | Experience in Similar Works (in Rs. Million) | Bid Security (in Millions of Rupees) | Price of Bidding Documents (in Thousands of Rupees) | Average Annual Construction Turnover (in Billions of Rupees) | Liquid Assets Required (in Millions of Rupees) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| Rehabilitation of RDA Roads in Northern Province | 88.50 | NIR/NP/RDA/01 | CS2 | Highway | 3,750 | 152 | 100.0 | 11.0 | 1,300 |
| Rehabilitation of RDD Roads in Northern Province | 165.82 | NIR/NP/RDD/01 | CS2 | Highway | 2,000 | 85 | 100.0 | 6.0 | 710 |
| Rehabilitation of Local Authority Roads in Northern Province | 133.45 | NIR/NP/LGD/01 | CS2 | Highway | 900 | 36 | 100.0 | 2.5 | 300 |
| Rehabilitation of RDA Roads in Eastern Province | 85.00 | NIR/EP/RDA/01 | CS2 | Highway | 925 | 38 | 100.0 | 2.8 | 310 |
| Rehabilitation of RDD Roads in Eastern Province | 228.63 | NIR/EP/RDD/01 | CS2 | Highway | 1,700 | 69 | 100.0 | 5.0 | 570 |
| Rehabilitation of Local Authority Roads in Eastern Province | 1,146.00 | NIR/EP/LGD/01 | CS2 | Highway | 8,800 | 355 | 100.0 | 26.0 | 2,950 |

2. Bidding will be conducted through International Competitive Bidding Procedure. The bidding currency and the payment currency shall be Sri Lankan Rupees.

3. Bidders may bid for one or more contract packages, and they shall be awarded a maximum two contract packages, as further defined in the bidding document. If the bidder is to be awarded more than one contract package,The Bidder shall satisfy the cumulative requirements of such Contract Packages. Bidders wishing to offer discounts incase they are awarded more than one contract will beallowed to do so, provided those discounts are included in the Letter of Bid or in a separate envelope marked 'Modifications/ Discounts' submitted before the closing of the Bid.

4. The Bidders shall arrange confirmed finances for their bid price from a recognized financier acceptable to the Employer. The Government of Sri Lanka will provide a guarantee for the repayment of the loan and interest to the financier.

5. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and local bidders shall meet the following minimum requirements: -

   ICTAD/CIDA Grade: Given in Table 1 Specialty: Given in Table 1

   If the bidder is a joint venture, and if there are local partners in the joint venture, at least one local partner shall satisfy the Grade and Specialty requirements.

6. Qualification requirements to qualify for contract award include:

   Average Annual Construction Turn over: Given in Table 1

   Liquid Assets availability: Given in Table 1

7. Interested bidders may obtain further information from:

   Name: Ministry of National Integration and Reconciliation
   Address: NO. 34, Narahenpita, Nawala, Sri Lanka
   Telephone: 0094 11 2806424
   Fax: 0094 11 2806530
   E-mail: ministrysec.nir@gmail.com

   and inspect the bidding documents at the address given below from 9:00 hrs. to 15:00 hrs. on all working days.
   A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Secretary, Ministry of National Integration and Reconciliation, No. 34, Narahenpita, Nawala, Sri Lanka from 22[th] December 2017 to until 2[nd] February 2018 from 9:00 to 15:00 hrs. upon payment of a non-refundable fee of Rs. 100,000.00 for each package. The method of payment will be by cash.

8.Bids shall be delivered in duplicate to the address below on or before 11:00 hrs of 2[nd] February 2018. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidder 's authorized representatives, who choose to attend.
9.Bids shall be valid up to 27[th] July 2018.
10.All Bids shall be accompanied by a Bid-Security for an amount mentioned in Table 1 above. Bid Security shall be valid up to 24[th] August 2018.
11.A pre-bid meeting will be held at the Ministry of National Integration and Reconciliation on 11[th] January 2018 at 14.00 hrs.

**The address referred to above is:**

**Chairman,**
**Cabinet Appointed Negotiation Committee,**
**Ministry of National Integration and Reconciliation**
**No.34, Narahenpita Road , Nawala, Sri Lanka.**

# நல்லூரில் நாவலர் விழா



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தமிழ்ச்சங்கம் கரிகனன் அச்சக நிறுவனத்துடன் இணைந்துநடத்தும்நாவலர்விழாநாளைமறுதினம்23ஆம்திகதிசனிக் கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறை பேராசிரியர் மா.வேதநாதன் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் ஆசியுரை வழங்கு வார். காலம் தந்த கை விளக்கு எனும் தலைப்பில் யாழ். பல்கலைக் கழக இந்துநாகரிகத்துறை தலைவர் கலாநிதி சுகந்தினி முரளிதரன் சிறப்புரையாற்றுவார்.

சைவத்திருமகன் எனும் தலைப்பில் ஆடல் அளிக்கை நிகழ்வு இடம் பெறுவதுடன் இரா.செல்வவடிவேல் தலைமையில் பட்டிமன்றமும் இடம்பெறும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். இதில் சிறுவர்களை நெறிப்படுத்துவதில் இன்று பெரும் பங்குவகிக்க வேண்டியவர்கள் பெற்றோர்களே எனும் தலைப்பில் யாழ்ப்பாணத்தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு உறுப்பினர்களான இ.சர்வேஸ்வரா, திருமதி கௌரி முகுந்தன், சண்டிலிப்பாய் பிரதேச செயலக சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி தர்மினி ரஜீவன் ஆகியோரும் ஆசிரியர்களே எனும் தலைப்பில் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்க பொதுச்செயலாளர் ச.லலீசன், மணற்காடு றோ.க.த.க வித்தியாலய ஆசிரியை திருமதி பத்மராணி கருணாகரன், யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்க ஆயுள் உறுப்பினர் பூலோகம் செல்வதியம்மா ஆகியோரும் வாதிடுவர். (இ-7)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
1962
03
15

மறைவு
2017
01
01



## சீனியன் சிவமூர்த்தி

(பிரதேச சபை உத்தியோகத்தர்)

நிஜமாக நீங்கள் மறைந்து ஓராண்டு ஆனதோ
நீங்கள் இல்லா மனை பொலிவிழுந்து போனதுவோ?
சிரித்த முகமும் கனிவான பேச்சும்
காதுகளில் ரீங்காரம் ஒலிக்கின்றது
பிரிந்து விட்டீரோ எம்மை விட்டு
ஆனால் பிரியாது உம் நினைவுகள்
பழகிய இடமெல்லாம் பார்க்கின்ற போது...

(சு-749)

பிராமணன் தோட்டம்,
கரவெட்டி மேற்கு, கரவெட்டி.

குடும்பத்தினர்.


# வலிகாமம் கிழக்கு பிரதேசசபை உரும்பிராய் உப அலுவலகம் ஆதனப் பெயர் மாற்ற அறிவித்தல்

வலிகாமம் கிழக்கு பிரதேசசபை உரும்பிராய் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 7, கரந்தன் நீர்வேலி வீதி, ஆதன இலக்கம் 25/3 என்ற இலக்கத்தைக் கொண்டதும் "சுடுகாட்டுக்கிளானை" நிலப்பரப்பு 9 குளி 12 ஆம் கொண்ட கிராமசேவையாளர் பிரிவு : J /267, ஊரெழு, உரும்பிராயில் அமைந்துள்ள ஆதனத்தில் உரிமையாளர் பெயர் சொந்தக்காரர் உ.கோ சம்பந்தர் நாகலிங்கம் என ஆதனப்பதிவேட்டில் பதியப் பட்டுள்ளது.

மேற்படி ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு க.சிவசுப்பிரமணியம் அவர்களால் எழுதப்பட்ட10330 ஆம் இலக்க 2015.12.24 ஆம் திகதிய பிரகடன உறுதி மூலம் கரந்தன் நீர்வேலியைச் சேர்ந்த திருமதி.பாஸ்கரன் யோகமலர் 9 நிலப்பரப்பு 12 குளியை உரிமை கோரியுள்ளார்.

ஆதன இடாப்பு வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம், வலிகாமம் கிழக்குப்பகுதி கோப்பாய் கோவில்பற்று ஊரெழு இறை "சுடுகாட்டுக்கிளான்" நிலப்பரப்பு 09 குளி 12 இது நில அளவையாளர் நா.பொன்னுத்துரை அவர்களால் 1982.02.07ம் திகதி 2351 ஆம் இலக்கத்தில் அளந்து வரையப்பட்ட படத்தில் துண்டு 02 எனக் காட்டப்பட்டுள்ளது. இதற்கு எல்லைகள் கிழக்கு அப்புத்துரையின் ஆதனமும் சந்திரன் செல்வலிங்கத்தின் ஆதனமும் வடக்கு முத்துத்தம்பி சங்கரப்பிள்ளையின் ஆதனமும் மேற்கு குறித்த படத்தில் Lot 01 எனக்குறித்த செல்லையா ஈஸ்வரலிங்கம் மனைவி வாசுகி என்பவர்களின் ஆதனம் தெற்கு குணேந்திரன் தங்கமணியின் ஆதனம் இதனடாங்கலும் இன்னும் தென்மேற்கு மூலையில் இருக்கும் கிணற்றில் அரைவாசிப் பங்கில் அரைவாசியும் வழிவாய்க்கால் உரித்தும்.

இவ் ஆதனத்தை திருமதி. பாஸ்கரன் யோகமலர் என்ற பெயருக்கு ஆதனப் பதிவேட்டில் பதிவது தொடர்பாக ஆட்சேபனைகள் தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் எதிர்வரும் 2018.01.21 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது திருமதி.பாஸ்கரன் யோகமலர் என்ற பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலி.கிழக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

யு.ஜெலீபன்
செயலாளர்.
வலி.கிழக்கு பிரதேசசபை
புத்தூர்.
2017.12.21

(சி-783)

## லகு ருத்ர சாதனை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சத்தியசாயி சேவா நிலையத்தின் லகு ருத்ர சாதனை 33 மணி நேர தொடர் ஸ்ரீருத்ர பாராயணம் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 5.30 மணியளவில்ஓம்காரம் சுப்ரபாதத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து லகுருத்ர பாராயணம் இடம்பெற்று மறுநாள் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் நிறைவடையும். (இ-10)


# காலுறை (Socks) பாவனையாளர்களுக்கு அரிய வாய்ப்பு!




01 IN ONE FREE

கடந்த 30 ஆண்டுகளாக தரச்சிறப்பு மிக்க காலுறைகள் (Socks)

Silver shield Socks

பாடசாலை மாணவர்களுக்கும்
அலுவலக ஊழியர்களுக்கும்
சகல தரத்திலும் சகல அளவுகளிலும்

**1 இற்கு 1 இலவசம்**

**10.01.2018 வரை மட்டுமே**

பாடசாலைகளுக்கும் வியாபாரிகளுக்கும்
விசேட விலைக்கழிவு

(சு-761)

விஜயம் செய்யுங்கள்
ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம், 303, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம். 021 222 5392


# இராசி பலன்

21.12.2017
மார்கழி 06, வியாழக்கிழமை
சூரிய உதயம் காலை 6.23 மணிக்கு
திருதியை மாலை 6.26 மணிவரை
உத்தராடம் பிற்பகல் 3.24 மணிவரை
சுபநேரம் 7.54-9.24 மணிவரை
இராகுகாலம் 1.54-3.24 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | கிரகநிலை - சந்திராஷ்டமம் திருவாதிரை,புனர்பூசம் | | ராகு |
| கேது, சந் | | | |
| சூரி, சனி | சுக் புத | குரு செவ் | |

**மேடம்:** செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**இடபம்:** அதிகம் செலவாகும் என நினைத்த காரியமொன்று குறைந்த செலவில் முடிவுக்கு வரலாம், சுணங்கிய காரியங்கள் சுறு சுறுப்பாக நடைபெறும்.

**மிதுனம்:** சில பிரச்சினைகளைக் கண்டும் காணமலும் இருப்பது நல்லது, பயணங்களில் போது விழிப்புணர்வு அவசியம், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கடகம்:** பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறுவீர்கள், அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**சிம்மம்:** போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காண்பீர்கள், நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், இல்லத்திலும் உள்ளத்திலும் அமைதி கூடும்.

**கன்னி:** தொழிலை விரிவுபடுத்த முற்படுவீர்கள், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும். பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**துலாம்:** வீட்டை சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், சுப செலவுகள் கூடும்.

**விருச்சிகம்:** வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வெற்றி தரும் தகவல்கள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு, போசன நன்மையுண்டு.

**தனுசு:** ஆரோக்கியத்தில் முன்னேற்றமுண்டு, பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, நீண்ட நாளைய விருப்பமொன்று கைகூடும் வாய்ப்புண்டு.

**மகரம்:** பெரியோர்களின் உதவியால் சில நன்மைகள் நடைபெறும், வருமானத்தை அதிகாரிக்கும் வழியில் நாட்டம் செல்லும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**கும்பம்:** சிறிய வேலையொன்றிற்காக அலைய நேரிடலாம், உறவினர்கள் நலன்கருதிய செலவுகள் இடம்பெறலாம், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**மீனம்:** அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக முடியலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் பெறுவீர்கள், கௌரவமான நாள்.

# UNIVERSITY OF JAFFNA

## INVITATON FOR BIDS

### Hotel Accommodation Service 2018/2019

**1.** Sealed Quotations are invited for the **"Hotel Accommodation Service 2018/2019 for the University of Jaffna"** from the competent registered Hotels. The bidder should have a star class hotel and registered under Government entity – Tourism Development Authority/Northern Tourism Development Association.

**2.** Bidding will be conducted through National Competitive Bidding Procedure.

**3.** To be eligible for award, the successful bidder shall not have been blacklisted by any government organization.

**4.** Interested bidders may obtain further information from the **Assistant Registrar, Administration, University of Jaffna** and inspect the bidding documents at the same address on any working day from **9.00hrs** to **16.00hrs.**

**5.** A complete set of Bidding documents in English language shall be purchased by the bidders on the submission of a written request to the **Assistant Registrar (Administration), University of Jaffna (T.P 021 222 6517)**, from **20th of December, 2017** until **4th of January, 2018** from **9.00hrs to 15.00hrs**, upon payment of a non-refundable deposit of **Rupees one thousand (Rs 1000/-) at the Shroff counter of the University of Jaffna.**

**6.** Bids shall be delivered or sent by registered post to the **Registrar, University of Jaffna, P.O.Box 57, Thirunelvely, and Jaffna** to reach **on or before 10.00hrs on 9th of January, 2018.** Bids will be opened soon after closing at the **Board room of the University of Jaffna**, in the presence of the bidder's representatives who choose to attend.

**7.** Bids shall be valid for a period of **90 days** from the date fixed for closing of bids or any extended period.

**Chairman,**
**Department of Procurement Committee,**
**University of Jaffna.**
**P.O.Box 57, Thirunelvely,**
**Jaffna.**

(C-753)

---

## இலங்கை தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு

### கம்பி (கேபள்) மற்றும் செய்மதி தொலைக்காட்சி சேவைகளை வழங்குகின்றவர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் அறிவித்தல்

1996 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் பிரகாரம், இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் சிபாரிசின் பேரில் அமைச்சரினால் வெளியிடப்பட்ட அனுமதிப்பத்திரம் இன்றி, யாரேனும் ஒருவர், இலங்கையினுள் தொலைத் தொடர்புகள் முறைமையொன்றை செயற்படுத்தக் கூடாது என இத்தால் அறிவிப்புச் செய்யப்படுகின்றது.

செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரமொன்று இல்லாமல் கம்பி (கேபள்) மற்றும் செய்மதி தொலைக்காட்சி சேவையொன்றை நடாத்திச் செல்லல் இலங்கை தொலைத் தொடர்புகள் சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றமொன்றாகும்.

செல்லுபடியாகும் அனுமதிப் பத்திரமொன்று இல்லாமல் கம்பி (கேபள்) மற்றும் செய்மதி தொலைக்காட்சி சேவைகளை நடாத்திச் செல்பவர்ளை ஆய்வு செய்வதற்கு இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது என இத்தால் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மின் அஞ்சல் : dgtsl@trc.gov.lk
இணையதளம் : www.trc.gov.lk
தொலைபேசி : 0112689345
பெக்ஸ் : 011-2689341

பணிப்பாளர் நாயகம்
இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு
இல. 276, எல்விடிகல மாவத்தை,
கொழும்பு - 08

---

### வலிகாமம் கிழக்கு பிரதேசசபை உரும்பிராய் உப அலுவலகம்

## ஆதனப் பெயர்மாற்ற அறிவித்தல்

வலிகாமம் கிழக்கு பிரதேசசபை உரும்பிராய் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 7, கரந்தன் நீர்வேலி வீதி, ஆதன இலக்கம் 26/52 என்ற இலக்கத்தைக் கொண்டதும் "இராமன் புலவு"நிலப்பரப்பு 8 குளி 7.83 ம் கொண்ட கிராம சேவையாளர் பிரிவு : J/267, ஊரெழு, உரும்பிராயில் அமைந்துள்ள ஆதனத்தில் உரிமையாளர் பெயர் சொந்தக்காரர் உ.கோவன்னியசிங்கம் மனைவி சசிரேகா எனஆதனப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

மேற்படி ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு க.சிவசுப்பிரமணியம் அவர்களால் எழுதப்பட்ட 9658ம் இலக்க 2014.09.16ஆம் திகதிய பிரகடன உறுதி மூலம் வன்னியசிங்கம் மகள் சசிரேகா நிலப்பரப்பு 8 குளி 7.83 ஐ உரிமை கோரியுள்ளார்.

இவ் ஆதனம் பிரசித்த நொத்தாரிசு க.சிவசுப்பிரமணியம் அவர்களால் எழுதப்பட்ட 10070ம் இலக்க 2015.07.28ம் திகதிய நன்கொடை உறுதி மூலம் வன்னியசிங்கம் சசிரேகா என்பவரினால் அவரது சகோதரனான வன்னியசிங்கம் சசிராஜ்க்கு வழங்கப்பட்டது.

ஆதன இடாப்பு வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம்,வலிகாமம் கிழக்குப்பகுதி கோப்பாய் கோவில்பற்று ஊரெழு இறை "இராமன் புலவு"நிலப்பரப்பு 08 குளி 7.83 அதைச் சேர்ந்தவைகளும் இதற்கு எல்லை கிழக்கு ஒழுங்கை,வடக்கு தங்கராசா சற்குண காந்தராசாவின் ஆதனம் மேற்கு செல்லத்துரை இந்திரராஜா,சோமசுந்தரம் மனைவி சோமேஸ்வரி என்பவருக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம்,தெற்கு செல்லையா திருநாவுக்கரசு மனைவி சரஸ்வதிக்குரிய ஆதனமும் தனிப்பட்ட ஒழுங்கையும் தடங்கலும், இவ்வாதனம் நில அளவையாளர் N.இராமச்சந்திரன் அவர்களால் வரையப்பட்ட 5418 ம் இலக்க 2014.07.08 ம் திகதிய படத்தில் Lot– 01 எனக் காட்டப்பட்டுள்ளது.

இவ் ஆதனத்தை வன்னியசிங்கம் சசிராஜ் என்ற பெயருக்கு ஆதனப் பதிவேட்டில் பதிவது தொடர்பாக ஆட்சேபனைகள் தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் எதிர்வரும் 2018.01.21 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் அறியத் தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது வன்னியசிங்கம் சசிராஜ் என்ற பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலி.கிழக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

யு.ஜெலீபன்
செயலாளர்.
வலி.கிழக்கு பிரதேசசபை
புத்தூர்.

2017.12.21 (C-763)

---

# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
சூரிசெவ் 11 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்
எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்
தொ.இ: B/8053

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி.பா: செவ் 1 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:A/L/சொந்ததொழில்
தொ.இ: B/8055

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: மகம்
சூரிசெவ் 11 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:O/L/வியாபாரம்
தொ.இ: B/8056

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்:, அச்சுவினி
கி.பா: செவ் 1 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:O/L/காவலாளி(அரச)
தொ.இ: B/8059

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்:அவிட்டம்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/7324

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 5
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: MBBS/ Demo
தொ.இ: G/7326

பிறப்பு: 1972 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: MSc
தொ.இ: G/7327

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 20
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: BSc, MBA/ வங்கியாளர்
தொ.இ: G/7329

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# தமிழ்த்தேசிய கூட்டமைப்பு வேட்பு மனுத்தாக்கல்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் மூன்று பிரதேச சபைகளுக்குமான வேட்புமனுக்களை தமிழ்தேசியக் கூட்டமைப்பு தாக்கல் செய்துள்ளது.

கிளிநொச்சி பிள்ளையார் ஆலயத்தில் விசேட வழிபாடுகளைத் தொடர்ந்து எதிர்வரும் உள்ளூராட்சி சபைத்தேர்தலில் கரைச்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய மூன்று பிரதேச சபைத்தொகுதிகளிலும் போட்டியிடுவதற்காக நேற்று முற்பகல்10 மணியளவில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தனது வேட்பு மனுவைத் தாக்கல் செய்துள்ளது.



இதில் கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு சமூகங்கள் ஒற்றுமையுடன் வாழ்கின்ற மாவட்டத்தின் தனித்துவத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் மலையக மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் எட்டு வட்டாரங்களில் வேட்பாளர்கள் தெரிவு செய்யப்பட்டதுடன், ஏனைய வட்டாரங்களிலும் பல்வேறு சமூகங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையிலும் முன்னாள் போராளிகள் பெண்கள் உள்ளிட்டோர் வேட்பாளர்களாகத்தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

நாற்பது வட்டாரங்களிலும் 21 பெண் வேட்பாளர்கள் உட்பட 75 வேட்பாளர்கள் என மூன்று பிரதேச சபைகளுக்குமான வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டுள்ளனர்.

நேற்றைய வேட்புமனுத்தாக்கலின் போது பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் மாகாண சபை உறுப்பினர்களான சு.பசுபதிப்பிள்ளை த.குருகுலராஜா தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பார்கள் மாற்றுத்திறனாளிகள் கட்சி அமைப்பாளர்கள், பொதுமக்கள் என ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டிருந்தனர்.

தமிழ் மக்களுடைய உரிமைக்கான பயணத்திற்கு மக்கள் தங்களது ஆணைகளை மிகவும்தெளிவாக வழங்குவார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது என தமிழ் தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய பிரதேச சபைகளுக்கான வேட்பு மனுக்களைத்தாக்கல் செய்த பின்னர் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்தொடர்ந்து கூறுகையில்.

தமிழ் மக்களுடைய அடிப்படை அபிலாஷைகளான வடக்கு-கிழக்கு இணைந்த சமஷ்டி அடிப்படையிலான அவர்களது தாயக மண்ணில் சுயாட்சியைப் பெற்றுக் கொள்வதற்கான ஒரு தீர்வின் அடிப்படையில் அதனை ஒரு பிரதான இலக்காக வைத்துக் கொண்டு மக்களின் அன்றாட அபிவிருத்தி நடவடிக்கைகளில் அரசாங்கம் என்னென்ன விடயங்களை முன்னெடுக்குமோ அந்த விடயங்களின் முன்னுரிமை அடிப்படையில் ஒவ்வொரு கிராமங்கள் ஒவ்வொரு பிரதேசங்களிலும் மக்கள் தெரிவு செய்து தந்த பிரதிநிதிகளை அடிப்படையாக வைத்து நாற்பது வட்டாரங்களிலும் 35 விகிதசார முறைகளுக்குமாக மொத்தம் 75 பேருடைய எமது விண்ணப்பப்பத்திரம் ஊடாக தாக்கல் செய்திருக்கின்றோம். தமிழ்த் தேசியக்கூட்டமைப்பிற்கு மக்கள் பல தடவைகள் ஆணை தந்திருக்கின்றார்கள். இம் முறையும் தமிழ் மக்களுடைய பயணத்திற்கு தங்களது ஆணைகளை மிகவும்தெளிவாக வழங்குவார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது எனக் குறிப்பிட்டுள்ளார். (2-315)

# அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்,ஜே.வி.பி கிளிநொச்சியில் வேட்புமனுக்கள் தாக்கல்





(பரந்தன்)

கிளிநொச்சியில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், ஜே.வி.பி ஆகிய கட்சியினர் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் கிளிநொச்சியில் நேற்று அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், ஜே.வி.பி. கட்சியினர் என்பன வேட்பு மனுக்களைத் தாக்கலை செய்துள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தின் மூன்று உள்ளூராட்சி மன்றங்களான கரைச்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய மூன்று சபைகளுக்கும் வேட்பு மனுத்தாக்ககல் செய்யப்பட்டுள்ளது. (2-312)




# 58 ஏக்கர் நெற்பயிர்ச் செய்கை காணிகளை வாழ்வாதார தொழிலுக்கு பகிர்ந்தளியுங்கள்

## வடக்கு முதலமைச்சர், விவசாய அமைச்சருக்கு மகஜர்

(மல்லாவி )

வவுனியா மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்குட்பட்ட செட்டிகுளம் கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட தட்டான் குளம் பகுதியில் அரசாங்கத்திற்குரிய 58 ஏக்கர் வயல் காணியை கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக தனிநபர் ஒருவர் கைப்பற்றி அதனை தனியாருக்கு குத்தகைக்கு வழங்கி அதன் மூலம் சுமார் 6 இலட்சம் ரூபா பணத்தை பெற்று வரும் நிலையில், இந்த 58 ஏக்கர் நெற்ச் செய்கை காணியை வாழ்வாதாரத் தொழில் வாய்ப்பின்றியுள்ள தட்டான்குளம் விவசாயக் குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்குமாறு தட்டான்குளம் கிராம மக்களும் மற்றும் தட்டான்குளம் கிராம அபிவிருத்திச் சங்கமும் இணைந்து வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் மற்றும் விவசாய அமைச்சர் ஆகியோர் உட்பட துறைசார்ந்த அதிகாரிகளுக்கு தமது கோரிக்கை அடங்கிய மகஜர்களை அனுப்பி வைத்துள்ளனர்.

இது தொடர்பில் தட்டான்குளம் கிராம மக்களும், கிராம அபிவிருத்திச் சங்கத்தினரும் கருத்து தெரிவிக்கையில்,

செட்டிகுளம் கமநல சேவைகள் நிலையத்திற்குட்பட்ட தட்டான்குளம் பகுதியில் அரசாங்கத்திற்குரிய 58 ஏக்கர் நெற்ச் செய்கைக்குரிய வயற் காணியை தனிநபர் ஒருவர்கையகப்படுத்தி வைத்திருப்பதுடன், அந்த காணியை பகுதி பகுதியாக பிரித்து காலபோகம் மற்றும் சிறுபோகம் ஆகிய இரண்டு போக நெற்ச் செய்கைகளுக்கு குத்தகைக்கு விட்டு பெரும் தொகை பணத்தை பெற்று வருகிறார்.

இதேவேளை, நாட்டில் இடம்பெற்ற யுத்த சூழ் நிலைகளால் அனைத்தையும் இழந்து பாதிக்கப்பட்ட நிலையில் இடம் பெயர்ந்து பின்னர் தற்போது மீள் குடியேற்றம் செய்யப்பட்டுள்ள தட்டான்குளம்கிராம மக்களுக்கு விவசாய நிலங்கள் இல்லாமையால் வாழ்வாதாரத்திற்காக தினசரி அல்லல் படும் நிலையில் உள்ளனர்.

எனவே இந்த அரச காணியை இங்குள்ள குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்று கிராம மக்களும், கிராம அபிவிருத்திச் சங்கத்தினரும் இணைந்து வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் மற்றும் விவசாய அமைச்சர், வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர், வவுனியா மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் உட்பட செட்டிகுளம் பிரதேச செயலாளர், செட்டிகுளம் கமநல சேவைகள் திணைக்களம் என துறை சார்ந்தவர்களுக்கு தமது கோரிக்கை அடங்கிய மகஜர்களை அனுப்பி வைத்துள்ளதாக தட்டான்குளம் கிராம மக்களும் அபிவிருத்திச் சங்கத்தினரும் தெரிவித்துள்ளனர். - (2-15)

# வேட்பாளர் பட்டியல் தயாரிப்பதில் மீண்டும் கட்சிகளுக்கு இடையில் கருத்து முரண்பாடு

(பனிக்கன்குளம்)

மன்னார் நகர சபை ஆசன பங்கீடு தொடர்பில் மீண்டும் டெலோவிற்கும் தமிழரசுக் கட்சிக்கும் இடையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

மன்னார் நகரசபை தேர்தலில் டெலோவிற்கு வழங்கப்பட்டுள்ள சில வட்டாரங்களில் டெலோ நியமித்துள்ள வேட்பாளர்கள் சிலரை வேட்பாளராக நிறுத்த வேண்டாம் என இலங்கை தமிழரசுக்கட்சி சார்பாக மன்னார் மாவட்டத்திற்கு நியமிக்கப்பட்டுள்ள முகவரான பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

இதனால் மன்னாரில் டெலோ ஆதரவாளர் களுக்கும், தமிழரசுக்கட்சிக்கும் இடையில் தர்க நிலை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-281)

# வீதிகளை புனரமைப்பதற்கு 4 ஆயிரம் மில்.ரூபா தேவை

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் நீர்ப்பாசனத் திணைக்கள வீதிகள் புனரமைப்பதற்கு நான்காயிரம் மில்லியனுக்கும் மேற்பட்ட நிதி தேவைப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் முத்தையன் கட்டு வவுனிக்குளம், உடையார்கட்டுக்குளம் உள்ளிட்ட பகுதிகளிலுள்ள கூடுதலான வீதிகள் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு சொந்தமான வீதிகளாக காணப்படுகின்றன.

கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக குறித்த வீதிகள் எந்தவித புனரமைப்புக்களும் இன்றிக் காணப்படுகின்றன. அத்துடன் கூடுதலான வீதிகள் பயன்படுத்த முடியாத நிலையில் அழிவடைந்துள்ளன.

இவ்வாறு வீதிகள் சேதமடைந்து அழிவடைந்தும் காணப்படுவதனால் விவசாயிகள் தமது பயிர்செய்கை காலங்களில் விவசாய உள்ளீடுகளையும் விளைபொருட்களையும் கொண்டு செல்வதிலும் குறிப்பாக இவ்வீதிகளை பயன்படுத்தும் மக்களும் அன்றாடம் பெரும் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

இந்நிலையில் இவ்வீதிகளின் புனரமைப்பு பணிகள் தொடர்பாக கருத்து தெரிவித்த நீர்ப்பாசனத் திணைக்களம் குறித்த திணைக்களத்திற்குச் சொந்தமான வீதிகளைப் புனரமைப்பதற்கு நான்காயிரம் மில்லியன் ரூபா நிதி தேவையாகவுள்ளதாக தெரிவித்துள்ளது. (2-315)

# மறைத்து வைக்கப்பட்ட கட்டுத்துப்பாக்கி மீட்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு அம்பலவன் பொக்கணை பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கட்டுத் துப்பாக்கி ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

அம்பலவன் பொக்கணைப் பகுதியில் கடந்த 18 ஆம் திகதி ஆரம்ப சுகாராப்பிரிவு நிலையத்திற்கு பின்புறமாகவுள்ள பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கட்டுத் துப்பாக்கி ஒன்று இருப்பதை அவதானித்துள்ளனர்.

சம்பவம் குறித்து புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு தகவல் அறிவித்துள்ளார்கள் இந்நிலையில் சம்பவ இடத்திற்கு விரைந்த புதுக்குடியிருப்பு பொலிஸார் குறித்த பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கட்டுத் துப்பாக்கியை மீட்டு எடுத்து பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர். சம்பவம் குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (2-281)

# கடை உடைத்து பொருட்கள் திருட்டு

(பனிக்கன்குளம்)

வவுனியா தோணிக்கல் ஆலடிப்பகுதியிலுள்ள வியாபார நிலையத்தை உடைத்து அங்கிருந்து பணம், பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும்தெரியவருவதாவது.

நேற்று முன்தினம் இரவு 9.20மணியளவில் வியாபார நிலையத்தை மூடிவிட்டுச் சென்றோம். நேற்றுக்காலை 7மணியளவில் கடையைத்திறப்பதற்குச் சென்றபோது கடை உடைக்கப்பட்டு பொருட்கள் திருட்டுப் போயுள்ளது தெரியவந்துள்ளது. இதையடுத்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளோம். என்று வியாபார நிலையத்தினர் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் மழையுடனான கால நிலையைப்பயன்படுத்தி திருடர்கள் கடையை உடைத்து பணம், பொருட்கள் என்பனவற்றை திருடிச் சென்றுள்ளதாகவும் கடையில் நடந்த வியாபார பணமும் அங்கர் போன்ற இதரவகைப் பால்மா பொருட்களையுமே திருடர்கள் திருடிச் சென்றுள்ளதாகவும் வியாபார நிலையத்தினர் மேலும் தெரிவித்துள்ளனர்.

முறைப்பாட்டையடுத்து பொலிஸார்விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.(2-281-250)

# காணாமலாக்கப்பட்டோரின் உறவினர் 300 ஆவது நாளில் நேற்று கவனயீர்ப்பு





தாயகத்தில் கடத்தப்பட்டும் கையளிக் கப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டோரை தேடியறியும் சங்கத்தின் ஏற்பாட்டில் வவுனியாவில் இடம்பெற்று வரும் போராட்டம் நேற்று 300 ஆவது நாளை எட்டியுள்ள நிலையில் கவனயீர்ப்பு ஊர்வலம் இடம் பெற்றது.

வவுனியா கந்தசாமி கோவிலில் வழிபாடுகளில் ஈடுபட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் அங்கிருந்து கடை வீதி வழியாக ஊர்வலமாக நகர்ந்து தாம் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற கண்டி வீதியில் அமைந்துள்ள பிரதான தபாலகத்திற்கு அருகாமையில் வந்தடைந்திருந்தனர்.

சுமார் 50 பேர் வரையில் கலந்துகொண்ட இப்போராட்டத்தின் இறுதியில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தாம் அரசாங்கத்தினை நம்பி ஏமாற்றப்பட்டுள்ளதாகவும் சர்வதேசமே தமக்கான தீர்வை பெற்றுத்தரவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர். (2-250)

# வருடாந்த திருவாசக விழா

(யாழ்ப்பாணம்)

வருடாந்த திருவாசக விழா எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை பிரதி அதிபர் ச. லலீசன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வில் ஆசியுரையை நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் வழங்கவுள்ளார்.

மேலும் இந் நிகழ்வில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 160 பாடசாலை மாணவர்களுக்கு இலவச கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்படுவதுடன் தொடர்ந்து செல்வச் சந்நிதி ஆலயத்தில் விசேட பூசைகள் இடம் பெற்று நாயன்மார்களின் திருவுருவப் படங்கள் மற்றும் திருவாசக ஏடுகள், திருவாசக பாராயணத்துடன் சந்நிதி ஆச்சிரம மண்டபத்திற்கு எடுத்து வரப்படும். (இ-10-102)

# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வவுனியாவில் கட்டுப்பணம்

(குருமன்காடு)



வவுனியா மாவட்டத்தில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைகளில் போட்டியிடுவதற்காக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வவுனியா மாவட்ட தேர்தல்கள் திணைக்கள அலுவகைத்தில் கட்டுப்பணம் செலுத்தியது.

வவுனியா மாவட்டத்தின் வவுனியா நகரசபை, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, வெண்கல செட்டிகுளம் பிரதேச சபை, வவுனியா வடக்கு பிரதேச சபை, வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபை ஆகிய ஐந்து உள்ளூராட்சி சபைகளில் போட்டியிடுவதற்காகவே இந்தக் கட்டுப்பணம் செலுத்தப்பட்டது.

சிறிரெலோ கட்சியின் செயலாளர் நாயகம் ப.உதயராசா, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் வாசல, வவுனியா நகரசபையின் முன்னாள் உறுப்பினர் குமாரசாமி உள்ளிட்டோர் கட்டுப்பணத்தை செலுத்தினர்.

இதன்போது, தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் ஏற்பட்ட பேச்சுக்களில் இணக்கம் காணப்படாமையால் அபிவிருத்தியை விரும்பும் எமது மக்களின் ஆதரவுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து போட்டியிடுவதாக சிறிரெலோ கட்சியின் செயலாளர் நாயகம் தெரிவித்தார். (2-250)

# உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிட சிறிலங்கா முஸ்லீம் காங்கிரஸ் கட்டுப்பணம்

(குருமன்காடு)



வவுனியா மாவட்டத்தின் ஐந்து உள்ளூராட்சி சபைகளில் மூன்று சபைகளில் போட்டியிடுவதற்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வவு னியா மாவட்ட தேர்தலகள் திணைக் கள அலுவலகத்தில் கட்டுப்பணம் செலுத்தியது.

வவுனியா மாவட்டத்தின் வவுனியா நகரசபை. வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, வெண்கல செட்டிகுளம் பிரதேச சபை. வவுனியா வடக்கு பிரதேச சபை. வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபை ஆகிய ஐந்து உள்ளூராட்சி சபைகளில் வவுனியா நகர சபை. வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை. வெண்கல செட்டிகுளம் பிரதேச சபை ஆகிய மூன்று சபைகளில் போட்டியிடுவதற்காகவே இந்தக் கட்டுப்பணம் செலுத்தப்பட்டது.

முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் மாவட்ட இணைப்பாளர் மாஹிர், வவுனியா நகர சபையின் முன்னாள் உறுப்பினர் முனாபர் உள்ளிட்டோரே கட்டுப்பணத்தை செலுத்தினர்.

இதன்போது, நல்லெண்ண அடிப்படையில் தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிடுவதற்கு மேற்கொண்ட முயற்சிகள் கைகூடாத நிலையில் முஸ்லீம் காங்கிரஸ் தனித்து போட்டியிடுவதாக இதன்போது கட்சியின் மாவட்ட இணைப்பாளர் மாஹிர் தெரிவித்தார். (2-250)

# இலவச மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தின் ஏற்பாட்டில் யாழ் .பிரதேச மக்களுக்கான இலவச மருத்துவ முகாம் எதிர்வரும் 24 ஆம் திகதி காலை 7.30 மணிக்கு உசன் இராமநாதன் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

பாதுகாப்பு படைகளின் யாழ். மாவட்ட கட்டளை தளபதியின் ஏற்பாட்டில் இடம் பெறவுள்ள இந்த மருத்துவ முகாமில் பல் வைத்திய நிபுணர், குழந்தை வைத்திய நிபுணர்,காது.மூக்கு. தொண்டை வைத்திய நிபுணர், மற்றும் பெண்ணியல் மருத்துவ நிபுணர்,அறுவை சிகிச்சை நிபுணர், கண் மருத்துவ நிபுணர், போன்ற பிரபல வைத்திய நிபுணர்களால் பரிசோதனைகள் செய்யப்பட்டு மருந்துகள் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் நீரிழிவு பரிசோதனை ,ஈசீஜி. பரிசோதனைகளும் நடைபெறவுள்ளதுடன். கண்பரிசோதனையின் பின்னர் இலவசமாக மூக்கு கண்ணாடிகளும் வழங்கப்படவுள்ளன.

இந்த இலவச மருத்துவ முகாமுக்கு வருகை தரும் பொதுமக்களிற்கான போக்குவரத்து சேவை. வல்வெட்டிதுறை சிதம்பரம் வித்தியாலயம். நிலாவரை கிணற்றடி, அச்சுவேலி யூனியன் முகாமிற்கு முன்பாகவுள்ள மைதானத்திலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் பொதுமக்கள் கலந்து கொண்டு பயன்பெற முடியும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (இ-9)

# ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி கட்டுப்பணம் செலுத்தியது



(மன்னார்)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத்தேர்தலில் மன்னார் மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக "ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி" நேற்று முற்பகல் 11 மணியளவில் மன்னார் தேர்தல்கள் அலுவலகத்தில் கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சார்பாக மன்னார் மாவட்ட முகவராக நியமிக்கப்பட்டுள்ள வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே.கே. மஸ்தான் தலைமையில் மன்னார் தேர்தல் அலுவலகத்தில் கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளது.

இதன் போது கட்சியின் முக்கியஸ்தர்கள். வேட்பாளர்கள்.ஆதரவாளர்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகர சபை. மன்னார் பிரதேச சபை,நானாட்டான் பிரதேச சபை. முசலி பிரதேச சபை. மாந்தை மேற்கு பிரதேச சபை. ஆகிய ஐந்து உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிடுவதற்காக கட்டுப்பணம் செலுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-4)

# துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயம்

சபுகஸ்கந்த - மாபொல வடக்கு பகுதியிலுள்ள வர்த்தக நிலையத்தில் கொள்ளையிட வந்தவர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு துப்பாக்கியுடன் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் வர்த்தக நிலையத்தில் கொள்ளையிட முற்பட்டுள்ளனர்.இதன்போது அவர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் அங்கு கொள்வனவு செய்ய வந்த ஒருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை. பிரதேச மக்கள் கொள்ளையர்கள் இருவரையும் தாக்கியுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்நிலையடுத்து, காயமடைந்த சந்தேக நபர்கள் பொலிஸ் பாதுகாப்பின் கீழ் தற்போது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவர்கள் பிலியந்தலை மற்றும் மஹரகம ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளதோடு, இவர்கள் கொண்டு வந்த துப்பாக்கி பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. (2-7)

# தேர்தல் தபால்மூல வாக்களிப்பு விண்ணப்பங்களுக்கான இறுதித் திகதி

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக தபால் மூலம் வாக்களிப்பவர்கள் தமது விண்ணப்பங்களை நாளை 22ஆம் திகதிக்கு முன்பாக அனுப்புமாறு தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. நாளை நள்ளிரவுடன் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்வது நிறை வடைவதால், அருகிலிருக்கும் மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்திற்கு சென்று தமது விண்ணப்பங்களை ஒப்படைக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.அத்துடன் எதிர்வரும் 23ஆம் திகதிக்குப் பின்னர் கையளிக்கப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.(2-7)

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள்

## 19.12.2017-28.03.2020



உறவினர்களை ஆதரிப்பதில் ஒப்பற்ற குணம் படைத்த மீன இராசி வாசகர்களே!

தேசப்பற்றும், தெய்வப் பற்றும் அதிகம் பெற்ற உங்களுக்கு இதுவரை 9ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த சனி பகவான் இப்பொழுது 10ஆம் இடத்தில் சஞ்சரித்து பல வழிகளிலும் நன்மைகளை வழங்கப் போகின்றார்.

முத்தான தொழில் அமைய வேண்டுமானால் 10ஆம் இடம் நன்றாக இருக்க வேண்டும். தொழில்கள் மட்டுமல்ல, செய்யும் செயல்களில் திறமை பளிச்சிடவும், வையகத்தார் போற்றும் வாழ்க்கை அமைந்திடவும் 10ஆம் இடம் பலம்பெற்றிருக்க வேண்டும். அப்படிப்பட்ட இடத்திற்கு உங்கள் இராசிக்கு லாபாதிபதியாகவும், விரயாதிபதியாகவும் விளங்கும் சனி பகவான் வருகின்றார்.

பயண ஸ்தானமாகவும் 12ஆம் இடம் கருதப்படுகின்றது. எனவே, தொழில் மற்றும் உத்தியோகத்தில் அவரவர் தகுதிக்கு ஏற்ப திடீர் இடமாற்றங்கள் உருவாகலாம்.

சுமார் இரண்டரை ஆண்டு காலம் 10ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகும் சனி உங்களுக்கு எல்லையற்ற நன்மைகளைக் கொடுக்க சனிக்கிழமை தோறும் வாலில் மணி கட்டிய ஆஞ்சநேயரை வழிபட்டு வருவது நல்லது. மேலும் புதுக்கோட்டை மாவட்டம் வேகுப்பட்டி விஸ்வரூப ஆஞ்சநேயர், சேலம் அருகிலுள்ள நாமக்கல் விஸ்வரூப ஆஞ்சநேயர், காரைக்குடி அருகிலுள்ள வ.சூரக்குடி, சுசீந்திரம் போன்ற ஊர்களில் வீற்றிருந்து அருள் வழங்கும் ஆஞ்சநேயரையும் வழிபடுவது நல்லது.

நளனுக்கு நல்வாழ்வை அமைத்துக் கொடுத்த திருநள்ளாறு சனி பகவான் மற்றும் மதுரை தேனி அருகிலுள்ள குச்சானூர் சனிபகவான் ஸ்தலங்களுக்கும் யோகபலம் பெற்ற நாளில் சென்று சனி ஓரையில் வழிபட்டு வருவது நல்லது. சனி பிடிக்காத தெய்வம் என்று சொல்லப்படும் விநாயகப் பெருமான், அனுமன் ஆகிய இரண்டும் இணைந்த ஆதியந்தப் பிரபு படத்தை வைத்து இருபுறமும் இரண்டு தெய்வங்களுக்கும் உரிய மாலைகளைச் சூட்டி தொடர்ந்து பூஜையறையில் வைத்து வழிபாடு செய்யலாம்.

ஜீவன ஸ்தானம் தன்னில்<br>
சேர்கின்ற சனியை நாளும்<br>
கோவிலில் சென்று பார்த்துக்<br>
கும்பிட்டு மகிழ்ந்திருந்தால்<br>
ஆவன நமக்குச் செய்வார்!<br>
அனைத்திலும் வெற்றி தந்தே<br>
பூமகள் அருளால் நாளும்<br>
பொருள் குவிய வழிவகுப்பார்!

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கின்றது.

அந்த அடிப்படையில் குடும்ப முன்னேற்றம் கூட சனி பகவான் வழிபாடு வழிவகுத்துக்கொடுக்கும்.

### பத்தாமிடத்திற்கு வந்த முத்தான சனி!

டிசெம்பர் 19ஆம் திகதி முதல் பத்தாமிடத்திற்கு வந்த முத்தான சனி பகவான் ஒரு மிகப்பெரிய கிரகமாக விளங்குபவர். 'மந்தன்' என்றும், 'காரி' என்றும், சனியை அழைப்பது வழக்கம். மந்த கதியில் இயங்குவதால் அவரை 'மந்தன்' என்று சொல்லுவர். ஆனால் 'மந்தன் செய்யுமளவிற்கு மகேஸ்வரன் கூடச் செய்ய மாட்டான்' என்று சொல்வார்கள். அந்த அடிப்படையில் கிள்ளிக் கொடுக்காமல் அள்ளிக்கொடுக்கும்ஆற்றல் சனி பகவானுக்கு உண்டு.

பொதுவாக 10ஆம் இடம் என்று கருதும் பொழுது தொழில், ஜீவனம், கர்மம், அரசு பணி, இராஜாங்க ஆதரவு, சேவை மனப்பான்மை, உயர்ந்த நிலையில் இருப்பவர்களின் பழக்கம், அதிகார வர்க்கத்தினரின் அனுகூலம், வணிக முன்னேற்றம், திரயம் தேடும் முயற்சி, பிதுர்க்கடன் செய்தல், சொத்து சுகங்களோடு வாழ்க்கை நடத்துதல் போன்றவற்றை எல்லாம் விளக்குமிடமாகவே செயற்படுகின்றன. மேற்கண்ட நன்மைகள் அனைத்தும் இனி சனியின் பார்வையில் வரப் போகின்றது.

10இல் வந்த சனி தெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்ட வைப்பார். கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காக வழி பிறக்கும். பழைய கடன்கள் அனைத்தையும் அடைத்துவிட்டு நிம்மதிப் பெருமூச்சு விடுவீர்கள். குடும்ப உறுப்பினர்களில் யாருக்கேனும் அஷ்டமத்துச் சனி, அர்த்தாஷ்டமச் சனி இருக்குமேயானால் புதிதாக தொழிலுக்கு மூலதனம் போட கடன் வாங்கும் சூழ்நிலை உருவாகலாம். மிக உயர்ந்த மனிதர்களின் ஒத்துழைப்பு உண்டாகும். தந்தை வழிக்கடன், கடமைகளைச் செய்து முடிப்பீர்கள். பெற்றோர்களின் உடல் நலத்தில் அச்சுறுத்தல் ஏற்பட்டு அகலும். அசையா சொத்துகள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

### சனியின் பார்வை பலன்கள்!

உங்கள் இராசிக்கு 10ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் சனி பகவான் அதன் பார்வையை 4, 7, 12 ஆகிய இடங்களில் பதிகின்றார். எனவே சுக ஸ்தானம், மாத்ரு ஸ்தானம், வித்யா, வியாபார ஸ்தானம், களத்திர ஸ்தானம், பயண ஸ்தானம், விரய ஸ்தானம் போன்றவற்றில் எல்லாம் அதன் பார்வை பதிந்து உங்களுக்குப் பலன்களைத் தர ஏதுவாக இருக்கின்றார்.

சனியின் பார்வை 4இல் பதிவதால் ஆரோக்கியத் தொல்லைகள் ஏற்பட்டாலும் ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்தி அதனைச் சரிசெய்து கொள்ளுங்கள். அலைச்சலைக் குறைத்துக் கொள்ளுங்கள். பயணங்களால் தொல்லையும் உண்டு, நன்மைகளும் உண்டு. நிறுத்தப்பட்ட படிப்பை மீண்டும் தொடரும் வாய்ப்பு கிடைக்கும். மறதி அதிகரிக்கும் நேரமிது. எனவே படிப்பில் ஈடுபட்டிருப்பவர்கள் முழுமையாக படிப்பில் கவனம் செலுத்துவது நல்லது. புதிய வாகனங்களை ஒரு சிலர் வாங்கி மகிழ்வர். தாயின் உடல் நலத்தில் கவனம் தேவை. சுயஜாதகத்தில் திசாபுத்தி பலமிழந்திருப்பவர்கள் பிரதோஷ காலத்தில் நந்தியெம்பெருமானை வழிபாடு செய்தால் நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும்.

சனியின் பார்வை 7ஆம் இடத்தில் பதிவதால் கல்யாண வாய்ப்புகள் கைகூடும். கடல் தாண்டி வரும் தகவல் நல்ல தகவல்களாக இருக்கும். குடும்பத்தில் விட்டுக்கொடுத்துச் செல்வதே நல்லது. விட்டுப்போன வரன்கள் கூட மீண்டும் வந்து சேரலாம். தட்டுப்பாடுகள் அகலும். தன வரவு திருப்திகரமாக இருக்கும். அதே நேரத்தில் வீண் விரயங்கள் ஏற்படாமல் இருக்க சுபவிரயங்களை மேற்கொள்வது நல்லது. வீடு வாங்கும் முயற்சி அல்லது கட்டும் முயற்சியில் ஆர்வம் செலுத்துங்கள். தங்கம், வெள்ளி போன்றவற்றில் முதலீடு செய்யும் வாய்ப்பு உருவாகும். கீழ் வீடு கட்டியவர்களுக்கு மாடி வீடு கட்டும் எண்ணம் உருவாகும். முன்னோர்கள் கட்டி வைத்த ஆலயங்களுக்கு சேவைசெய்ய வாய்ப்புகள் கைகூடிவரும்.

சனி 12ஆம் இடத்தைப் பார்ப்பதால் பயணங்களால் பலன் கிடைக்கும். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும். புண்ணிய ஸ்தலங்களுக்கு யாத்திரைகள் செல்லும் வாய்ப்பு உண்டு.



### குதூகலம் தரும் குருப்பெயர்ச்சி காலம்!

4.10.2018இல் விருச்சிக இராசியில் குரு சஞ்சரிக்கப் போகின்றார். அதன் பிறகு 28.10.2019இல் தனுசு இராசிக்கு குரு செல்கின்றார். இந்த இரண்டு பெயர்ச்சியும் உங்களுக்கு நன்மைகளை வழங்கும்.

விருச்சிகத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது அதன் பார்வை உங்கள் இராசியிலேயே பதிவதால் மிகுந்த யோகமான காலமாகும். ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். அன்றாட வாழ்க்கை நன்றாக அமையும். பண வரவு திருப்திதரும். கல்யாண வாய்ப்புகள் கைகூடும். மேலும் 3, 5 ஆகிய இடங்களையும் குரு பார்ப்பதால் சகோதர ஒற்றுமை பலப்படும். பூர்வீகச் சொத்துகளில் இருந்த பிரச்சினைகள் அகலும்.

தனுசு இராசியில் குரு சஞ்சரிக்கும் பொழுது அதன் பார்வை 2, 4, 6 ஆகிய இடங்களில் பதிகின்றது. எனவே குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும். எதிரிகளை இனம் கண்டு கொள்வீர்கள். உத்தியோக மாற்றங்கள் உறுதியாகும். சம்பளப் பாக்கிகள் வந்து சேரும்.




### ராகு-கேது பெயர்ச்சிக் காலம்!

13.2.2019இல் மிதுன இராசியில் ராகுவும், தனுசு இராசியில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள். இதன் விளைவாக கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். தாய்வழி ஆதரவு உண்டு. படிப்பில் இருந்த தடை அகலும். தன்னம்பிக்கையோடு பணிபுரிவீர்கள். புதிய தொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் கூடும். புனிதப் பயணங்களில் கவனம் செலுத்துவீர்கள். திருமணம் எதிர் பார்த்த இடத்தில் நல்ல விதமாக முடியும். தொழில் போட்டிகள் அகலும். பிள்ளைகள் பொறுப்புணர்ச்சியோடு நடந்து கொள்வர்.

சுக ஸ்தான ராகு உற்சாகத்துடன் செயற்பட்டு வெற்றி காண வேண்டுமானால் ராகு-கேது பிரீதிகளை செய்து கொள்வது நல்லது.

### தொட்ட காரியங்களில் வெற்றி பெற வழிபாடு!

திங்கட்கிழமை தோறும் சிவாலயத்திற்குச் சென்று விநாயகப் பெருமானையும், வியாழக்கிழமை தோறும் குருதட்சணாமூர்த்தியையும் வழிபட்டு வாருங்கள். பௌர்ணமியன்று கிரிவல வழிபாடும், அமாவாசையன்று முன்னோர் வழிபாடும் நற்பலன் வழங்கும். சிறப்பு வழிபாடாக புதுக்கோட்டை மாவட்டம் வேந்தன் பட்டியிலுள்ள நினைத்ததை நிறைவேற்றும் நெய் நந்தீஸ்வரரை வழிபட்டு நிகழ்காலத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளுங்கள்.

# பத்தாமிடத்தில் சனி! பணம் வரும் தொழிலில் இனி!

### சனியின் வக்ர காலம்!

25.4.2018 முதல் 21.8.2018 வரை மூல நட்சத்திரக் காலில் சனி வக்ரம் பெறுகின்றார். 8.5.2019 முதல் 3.9.2019 வரை மீண்டும் பூராட நட்சத்திரக் காலில் சனி வக்ரம் பெறுகின்றார்.

இக்காலத்தில் நன்மையும், தீமையும் கலந்தே நடைபெறும். தொழிலில் கொஞ்சம் கூடுதல் விழிப் புணர்ச்சி தேவை. எதிரிகளை நம்பி ஏமாறும் சூழ்நிலை உண்டு. உதிரி வருமானங்கள் வந்தாலும், விரயங்களைச் சமாளிக்க இயலாது. பிறருக்கு பணப்பொறுப்புகள் சொல்வதன் மூலம் சிக்கல்கள் ஏற்படலாம். வெளிநாட்டில் இருந்து அனுகூலமற்ற தகவல் வந்து சேரும். கட்டிய வீட்டை அல்லது வாங்கிய வீட்டைக் கடன்சுமையின் காரணமாக ஒருசிலர் விற்க நேரிடலாம்.

### பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

மீன இராசியில் பிறந்த பெண்களுக்கு இந்த சனிப்பெயர்ச்சி வரவும், செலவும் சமமாகும் பெயர்ச்சியாகவே இருக்கின்றது. விரயாதி பதியாகவும், லாபாதிபதியாகவும் சனி விளங்குவதால் விரயத்திற்கு ஏற்ற தொகை வந்து கொண்டே இருக்கும். கல்யாணம், கிரகப்பிரவேசம் பெற்றோர்களின் மணி விழாக்கள் போன்றவைகள் நல்ல விதமாக நடைபெறும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும்.

விருச்சிகத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது பணப்புழக்கம் அதிகரிக்கும். ஆரோக்கிய தொல்லை அகலும். தாய்வழி ஆதரவு எப்பொழுதும் போல் இருக்கும். உடன் பிறப்புகளை அனுசரித்துக் கொள்ள வேண்டிய நேரமிது. தந்தையின் உடல் நலத்தில் கவனம் தேவை. பிள்ளைகளின் சுபகாரியப் பேச்சுகள் நல்ல முடிவிற்கு வரும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பொருத்தமான வேலை அமையும். குலதெய்வ வழிபாடும், குரு வழிபாடும் குடும்ப முன்னேற்றத்திற்கு வித்திடும்.

(முற்றும்)

ஜோதிடக் கலாமணி
- சிவல்புரி சிங்காரம் -

# கலைத்தரிசனம்





## சிறுகதைப் படைப்பாளி
## திருமதி அற்புதராணி காசிலிங்கம் அவர்களுடனான சந்திப்பு

"மலரன்னை என்ற புனைப்பெயரில் கடந்த 24 வருடங்களாக எழுதி வருகின்றார். சிறுகதை, நாவல், நாடகம் போன்ற துறைகளில் ஈடுபட்டு வரும் இவர் நூற்றி இருபத்தைந்துக்கும் மேற்பட்ட சிறுகதைகளை இதுவரை எழுதியுள்ளார். இதுவரை பதினாறு சிறுகதைகளின் தொகுப்பாக வேர் பதிக்கும் விழுதுகள், இருபத்திமூன்று சிறுகதைகளின் தொகுப்பாக "கீறல்" ஆகிய இரு நூல்கள் வெளி வந்திருக்கின்றன. இவர் தனது ஆரம்பக் கல்வியை மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் உயர் கல்வியை யாழ்.இந்து மகளிர் கல்லூரியிலும் பயின்றார். இவரது கணவர் ஒரு மருத்துவராவார். நான்கு ஆண் பிள்ளைகளின் தாயாரான இவரின் இரு பிள்ளைகள் மருத்துவர்களாகவும் ஒருவர் ஆசிரியராகவும் கடமையாற்றுகிறார்கள். 1944ஆம் ஆண்டு தை மாதம் எட்டாம் திகதி மானிப்பாயில் பிறந்த இவர் ஈழத்தில் சிறந்த சிறுகதைப் பெண் படைப்பாளியாவார். 73 வயதான ஈழத்தின் சிறுகதையின் பொக்கிஷம் திருமதி அற்புதராணி காசிலிங்கம் அவர்கள் தன் இலக்கியப் பணிபற்றி மனந்திறந்து கூறியவை வலம்புரியில் பிரசுரமாகிறது."

❖ **தாங்கள் இலக்கியத் துறைக்குள் எவ்வாறு கால்பதித்தீர்கள்?**

சிறுவயதிலிருந்தே வாசிப்பு எனது பொழுது போக்காக அமைந்திருந்தது. அதன் விளைவாக கல்கி, அகிலன், மு.வரதராஜன், ஜெகசிற்பியன், சாண்டில்யன் லஷ்மி, சிவசங்கரி போன்றோரின் நாவல்கள் எனது வாசிப்பிற்கு கிட்டின. அதேசமயம் அக்காலப்பகுதியில் கல்கி, குமுதம், ஆனந்தவிகடன், கல்கண்டு, இதயம் பேசுகிறது, கணையாழி போன்ற சஞ்சிகைகள் கிடைக்கும் வாய்ப்பு இருந்ததால் அதில் வரும் கதைகளையும் தொடர்களையும் ஆர்வத்துடன் படிக்க முடிந்தது. அதன் பின்னர் எமது மண்ணிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த சஞ்சிகைகளான விவேகி, கலைச் செல்வி, சமூகத் தொண்டன் போன்ற சஞ்சி கைகள் வாசிக்கக் கிடைத்தன.

பாடசாலை நாட்களில் விவேகி சஞ்சிகைக்கு ஆக்கங்கள் எழுதி அனுப்பினேன். எனது முதலாவது ஆக்கம் விவேகியில் வெளிவந்த போது எனக்குண்டான மகிழ்ச்சிக்கு எல்லையேயில்லை. அவ்வப்போது நான் இலங்கை வானொலியில் ஒலிபரப்பாகும் சிறுவர் மலர், மங்கையர் மஞ்சரி போன்ற நிகழ்ச்சிகளுக்கு ஆக்கங்களை எழுதி அனுப்புவதுடன் சந்தர்ப்பம் வரும்போது நேரிடையாகவே நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றியிருக்கிறேன்.

ஏதாவது புத்தகம் எனது கைக்கு எட்டினால் அதை வாசித்து முடித்த பின்தான் ஓயும் பழக்கம் என்னுடையது. ஒரே நாவலை மீண்டும் மீண்டும் வாசிப்பேன். தாமரைச் செல்வி, அ.பாலமனோகரன், செங்கை ஆழியான் ஆகியோரது நாவல்கள் எங்கள் மண்ணை மையமாக வைத்து புனையப்பட்டிருப்பதால் அவை எனது நெஞ்சில் நீங்காத இடத்தைப் பிடித்திருக்கின்றன. நந்தி ஐயாவின் "தங்கச்சியம்மா" என் மனைக் கவர்ந்த நாவல், எனினும் வாசிப்பதோடு சரி எழுத வேண்டும் என்ற ஆவல் என்னைத் தூண்டியதில்லை.

1992 ஆம் ஆண்டு எனது இளைய மகன் மறைந்தபோது குடும்பமே உலகம் என வாழ்ந்து கொண்டிருந்த நான் பிரிவுத் துயரிலிருந்து மீளமுடியாமல் தத்தளித்தேன். அந்தச் சமயத்தில் என் சிந்தனையைத் திசைதிருப்பும் நோக்குடன் எனது தலைமகன் என்னை எழுதுமாறு தூண்டினார். அவரும் இலக்கியத் துறையில் ஈடுபாடு உள்ளவர் தான். அவரது வற்புறுத்தலுக்கிணங்கிய நான் பிரிவுத் துயரை மறக்க முயற்சித்து கற்பனை உலகில் காலடி எடுத்து வைத்தேன். அத்துடன் எனது இளைய மகன் ஆர்வத்துடன் முன்னெடுத்த எழுத்துப் பயணத்தைத் தொடருவதால் எனக்கு ஆத்ம திருப்தி கிடைக்குமென நம்பினேன். அதன் விளைவாகவே மலரன்னை என்ற புனைப் பெயரையும் தேர்ந்தெடுத்தேன்.

❖ **தாங்கள் இதுவரை வெளியிட்ட சிறுகதை நூல்கள் பற்றி?**

24 வருடங்களாக நான் எழுத்துப் பணியில் ஈடுபட்டு 125 சிறுகதைகளுக்கு மேல் எழுதியிருக்கின்றேன். வீரகேசரி, சிரித்திரன், நங்கை, மாற்றம், வெளிச்சம், தாயகம், ஈழநாடு, ஈழநாதம், சாளரம், நாற்று, விழி, மல்லிகை, காக்கைச் சிறகினிலே, செவ்வரத்தை, யுகம் மாறும், சூரியகாந்தி, சங்குநாதம், தமிழ்மிரர் போன்றவற்றில் பிரசுரமாகியுள் ளன. அவற்றுள்ளிருந்து தொகுத்ததுதான் எனது முதலாவது சிறுகதைத் தொகுதியான "வேர் பதிக்கும் விழுதுகள்" 2015இல் தான் நான் முதற்சிறுகதைத் தொகுதியை வெளியிட்டேன். அதில் மொத்தம் 16 கதைகள் இடம் பெறுகின்றன. எனது இரண்டாவது சிறுகதைத் தொகுதியான கீறல் 23 சிறுகதைகளின் தொகுப்பு. அதனை 2016 இல் வெளியிட்டதுடன் எனது மூன்றாவது சிறுகதைத் தொகுதியான அனலிடைப்புழு 2017இல் வெளி வந்திருக்கிறது. ஏற்கனவே எனது 60 வரையிலான சிறு கதைகளை இழந்து விட்டதனால் சிறுகதைகள் சேர்ந்ததும் அதைத் தொகுப்பாக்கி ஆவணப்படுத்தி விட வேண்டும் என்ற நோக்கம் என்னுடையது. அதனால்தான் வருடம் ஒரு சிறுகதைத் தொகுப்பென வெளியிட முயற்சிக்கிறேன்.

❖ **தாங்கள் எவ்வாறான கருப்பொருள்களில் சிறுகதைகளை எழுதுகிறீர்கள்?**

என்னுடைய சிறுகதைகளில் பெரும்பாலானவை சமகால நிகழ்வுகளையே சித்திரிப்பதாக அமைகின்றது. என் மனதைப் பாதிக்கும் விடயங்களைக் கருப் பொருளாக்கி அதற்கு கற்பனையால் மெருகூட்டி எழுத்துருவாக்குவதுதான் என் இயல்பு. முதன் முதலில் நான் எழுத முற்பட்டபோது எமது மக்கள் ஒருமைப்பட வேண்டும் என்ற உணர்வுடன் சமூக எழுச்சியைத் தூண்டும் வகையில் எழுதி வந்தேன். பின்னர் போரினால் ஏற்பட்ட அவலங்களையும் அதன் பாதிப்பினால் எமது மக்கள் அனுபவித்த சொல்லொணாத் துயரங்களையும் பல கோணங்களில் எழுதினேன். சீதனம், பெண்கள் குடும்ப வாழ்க்கையில் அனுபவிக்கும் அடக்கு முறைகள் பற்றியும் சில கதைகள் அமைந்திருக்கின்றன.

நாம் வாழும் காலத்தில் நடக்கும் சம்பவங்களைப் பதிவுசெய்து ஆவணப்படுத்துவதால் அது எமது எதிர்காலச் சந்ததியினருக்குப் போய்ச் சேரவேண்டும். அவர்கள் தம் மூதாதையர் வாழ்ந்த காலத்தல்பட்ட இன்னல்களை அறிந்து உணர வேண்டும் என்ற விருப்பம் தான் எனது எழுத்துகளுக்குப் பின்னணியாக அமைகிறது.

❖ **தாங்கள் வெளியிட்ட நாவல்கள், குறுநாவல்கள் பற்றி?**

2016இல் வெளிவந்த நாவல் "மறையாத சூரியன்" அந்த நாவல் எனது எழுத்துலக வாழ்க்கையில் நான் கொண்ட இலட்சியம் என்று சொல்லலாம். முற்று முழுதாக அந்தநாவல் மறைந்து போன எனது மைந்தன் மலரவனது வாழ்க்கை வரலாறாகவே அமைந்துள்ளது. அந்த நாவல் மூலம் எனது பிள்ளைகளின் வேண்டுகோளை நிறைவேற்றி வைத்த திருப்தி எனக்கு கிடைத்தது என்றே சொல்லாம். சில நாவல்களை நான் முன்னர் எழுதியிருந்த போதிலும் முதன் முதலாக நூலுருப் பெற்றது இந்த நாவல்தான்.

"மௌனத்தின் சிறகுகள்" என்ற நாவல் 2017இல் வெளிவந்த நாவலாகும். இது ஒரு சமூக நாவல். வறுமைக்கோட்டுக்குள் வாழும் ஒரு குடும்பத்தலைவி தன் அயராத முயற்சியினால் கணவனையும் பிள்ளைகளையும் ஊக்குவித்து, அவர்களை வழிநடத்தி அந்தக் குடும்பத்தை சமூகமட்டத்தில் ஒரு மேன்மை நிலைக்கு முன்னேற்றிய வரலாற்றைச் சித்திரிக்கிறது இந்நாவல். அதேசமயம் பொறாமையாலும் பணத்திமிரினாலும் ஆக்கிரமிக்கப்பட்ட ஒரு பெண் தனது தகாத செயற்பாட்டினால் எங்ஙனம் தனது வாழ்க்கையில் தோல்வியைத் தழுவிக் கொள்கிறாள் என்பதையும் விபரிக்கிறது.

"குயில்" என்றொரு நாவல் பிரசுரத்திற்காகக் காத்திருக்கிறது. மற்றும் "பாலை வனத்துப் புஷ்பங்கள்" 2018இல் நூலுருப் பெறுமென எதிர்பார்க்கிறேன். தவிர மூன்று குறுநாவல்கள் காவோலை, காகிதப்படகு, பச்சை மலைக் குயில் என மூன்றையும் இணைத்து ஒரு நூலாக வெளியிடலாம் என எண்ணியிருக்கிறேன்.

❖ **தாங்கள் பெண் எழுத்தாளர் என்ற வகையில் எதிர்கொண்ட சவால்கள் பற்றி?**

இம் மண்ணில் நடைபெறும் இலக்கிய விழாக்கள் கருத்தரங்குகள் என்பனவற்றில் பங்கு கொள்ள முடியாத நிலையைத்தான் நான் இங்கு குறிப்பிட முடியும். தொலை தூரத் தில் நடைபெறும் நிகழ்வுக்களில் பங்கு பற்றுவதென்பது குறிப்பாக எனக்கு சாத்தியமானதல்ல. இதனால் அறிஞர்கள், முதுபெரும் கலைஞர்களின் கருத்துக்களையும் அறிவுரைகளையும் அறிய முடியாதது என்னைப் பொறுத்த வரையில் ஒரு பின்னடைவுதான். தற்போது முதுமையின் விளைவால் அருகில் நடக்கும் நிகழ்வுகளைக் கூட தவிர்க்க வேண்டி இருக்கிறது. இதுவே எனது ஆதங்கம். ஆத்ம திருப்திக்காக எழுதினேன். அதற்கு பத்திரிகைகள், சஞ்சிகைகள் ஆதரவு தந்தன. தவிர சவால்கள் என்று குறிப்பிடக் கூடிய அளவுக்கு எதுவுமில்லை.

❖ **தங்களுக்குக் கிடைத்த வெற்றிகள், விருதுகள் பற்றி?**

முதன் முதலாக நான் எழுதத் தொடங்கிய காலப்பகுதியில் தமிழ்த்தாய் மன்றம், மாற்றம் எனும் சஞ்சிகை மூலம் ஒரு சிறுகதைப் போட்டியை நடத்தியது சற்றும் எதிர்பார்க்காத வகையில் அந்தப் போட்டியில் ஈரம் என்ற சிறுகதை முதல் பரிசுக்குத் தெரிவாகியது. அடுத்து "சிரித்திரன்" சஞ்சிகை நடத்திய சிறுகதைப் போட்டியிலும் "கிணற்றுத்தவளை" எனும் எனது சிறுகதை முதல் பரிசு பெற்றது. அனைத்துலக மகளிர் தினத்தையொட்டி நடைபெற்ற போட்டியிலும் பரிசு கிடைத்தது. மற்றும் கனடாவிலிருந்து உலகத் தமிழர் இயக்கம் நடத்திய சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு பெற்றேன். மற்றும் மோல்டே தமிழ்கலை கலாசார மன்றம் நடத்திய நாடகப் போட்டியில் பரிசு கிடைத்தது. நான் இதுவரையில் 35 இற்கும் மேற்பட்ட நாடகங்களும் 43 அங்கங்களைக் கொண்ட தொடர் நாடகம் ஒன்றினையும் பிரதியாக்கம் செய்திருக்கிறேன் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

1994 இல் யாழ்.இலக்கிய வட்டம் நடத்திய சிறுகதைப் போட்டியில் எனது "மௌன ஓலங்கள்" எனும் சிறுகதை மூன்றாம் பரிசினைப் பெற்றது. 2004ஆம் ஆண்டு மல்லிகை நடத்திய அமரர் தம்பையா நினைவு சிறுகதைப் போட்டியில் என்னால் எழுதப்பட்ட "கந்தப்பு வாத்தியார்" எனும் சிறுகதை மூன்றாம் பரிசினைப் பெற்றது. இந்தியாவிலிருந்து அமரர் மாரிமுத்து நினைவாக நடத்தப்பட்ட போட்டியிலும் எனது சிறுகதை பரிசு பெற்றது. சென்னையிலிருந்து வெளிவரும் காக்கைச் சிறகினிலே சஞ்சிகை முன்னெடுத்த கவிஞர் கி.பி. அரவிந்தனின் நினைவு இலக்கியப் பரிசுக்காக புலம்பெயர் சிறுகதைப் போட்டி 2016 இல் எனது "கீறல்" எனும் சிறுகதை ஆறுதல் பரிசுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

2017 ஆம் ஆண்டு நல்லூர் பிரதேச செயலகம் நடத்திய போட்டியில் எனது "அசலும் நகலும்" என்ற சிறுகதை முதல் பரிசு பெற்றதுடன் கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் நல்லூர் பிரதேச செயலகம் இணைந்து நடத்திய பிரதேச இலக்கியப் போட்டியில் அதே சிறுகதை தேசிய இலக்கிய விழா-2017 இல் மூன்றாம் இடத்தினைப் பெற்றுக் கொண்டது. மற்றும் பன்னாட்டு சிறப்புத் தேவை யுடையோர் தினத்தை முன்னிட்டு கருவி சமூக வள நிலையம் நடத்திய போட்டியில் எனது "நிமிர்வு" எனும் சிறுகதை முதலிடத்தைப் பெற்றுக் கொண்டது.

லண்டனிலிருந்து வெளியாகிய "யுகம் மாறும்" சஞ்சிகையில் எனது "கேள்விக்குறி" எனும் சிறுகதையும் ஜேர்மன் தமிழ்ச் சங்கத்தின் வெளியீடான "செவ்வரத்தை" என்ற சிறுகதைத் தொகுப்பில் "ஏக்கங்களின் பெரு மூச்சு" என்ற சிறுகதையும் வெளிவந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

❖ **இறுதியாக நீங்கள் இலக்கியத் துறைக்கு மனம் திறந்து கூறுவது?**

எழுதும் போது ஒருவருடைய சிந்தனை சுற்றுச்சூழலிலிருந்து விடுபட்டு தான் உருவமைக்கும் பாத்திரங்களுடன் ஒன்றிப் போய் விடுகிறது. எமது சமுதாயத்தில் பிறர்படும் அவலங்கள், துன்ப துயரங்களைக் கண்ணுற்றதும் ஒரு படைப்பாளியின் மனதில் பாதிப்பு ஏற்படுகிறது. அந்தப் பாதிப்பு ஒரு இலக்கியமாக வடிவமைக்கப்பட்டபின்தான் அந்தப் படைப்பாளியின் மனம் சாந்தியடைகிறது. நாம் எழுதும் எழுத்துக்களில் யதார்த்தம் இருக்க வேண்டும். சமகால நிகழ்வுகளை அடிப்படையாகக்கொண்ட படைப்புகளே வாசகர் நெஞ்சத்தைத் திருப்திப்படுத்தும்.

இது எனது சொந்த நிலைப்பாடு. காலத்தின் தேவையறிந்து இலக்கியம் படைப்பதுதான் எழுத்தாளனுக்குரிய இலட்சியமாக அமைய வேண்டும் என்பதுதான் எனது குறிக்கோள். எமது எழுத்துக்களினால் எதையாவது சாதிக்க வேண்டும் என்ற உணர்வு பூர்வமாக எழுத்தைக் கையாள வேண்டும். எமது படைப்பில் இருக்கும் கருத்துக்கள் வாசகர் உள்ளங்களில் பதிய வேண்டும். அப்போதுதான் சமுதாயத்தில் ஒரு திருப்பமும் மறுமலர்ச்சியும் தோன்ற வாய்ப்புண்டு.

**நேர்காணல்:**
**ஜெயம் ஜெகன்**

# பாரதம்

# அப்பலோ வைத்தியசாலையில் ஜெயலலிதா சிகிச்சை பெற்ற வீடியோ நேற்று வெளியீடு!



(சென்னை)

தமிழக முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் மரணத்தில் பல்வேறு மர்மங்கள் நிலவுவதாக கூறப்படுகின்ற நிலையில் அவருடைய சிகிச்சை வீடியோ நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

20 விநாடிகளுக்கு பதிவு செய்யப்பட்ட இந்த வீடியோவை டி.டி.வி. தினகரன் ஆதரவாளர் வெற்றிவேல் வெளியிட்டுள்ளார். குறித்த வீடியோ ஜெயலலிதா பழச்சாறு அருந்தியவாறு தொலைக்காட்சி பார்ப்பது போன்று பதிவாகியுள்ளது.

ஜெயலலிதாவை பலர் சந்திக்கவில்லை என்று கூறியிருந்த நிலையில், அமைச்சர்கள் வைத்தியசாலையில் ஜெயலலிதாவுடன் ஆலோசித்த வீடியோவும் இருப்பதாக வெற்றிவேல் தெரிவித்துள்ளார்.

2016 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 22 ஆம் திகதி அப்பலோ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஜெயலலிதா 75 நாட்கள் சிகிச்சையின் பின்னர் டிசெம்பர் மாதம் 5 ஆம் திகதி உயிரிழந்தார்.

இவருடைய மரணம் தொடர்பாகவும் அப்பலோ வைத்தியசாலையில் வழங்கப்பட்ட சிகிச்சைகள் தொடர்பிலும் இன்றும் பல சந்தேகங்கள் நிலவுகின்ற நிலையில், ஒருவருடம் கழித்து இந்த வீடியோ வெளியிடப்பட்டுள்ளமையானது மேலும் பல கேள்விகளை தோற்றுவித்துள்ளது.

அதுமட்டுமின்றி, ஆர்.கே.நகர் இடைத்தேர்தல் இன்று நடைபெறவுள்ள நிலையில் இந்த வீடியோ வெளியிடப்பட்டுள்ளமையானது அரசியல் வட்டாரத்தில் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. (இ-8)

# ஜெயலலிதா பற்றி அவதூறு பரப்பினால் சட்டரீதியில் நடவடிக்கை எடுக்கப்படும்



(சென்னை)

தமிழகத்தின் மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா பற்றி அவதூறு பரப்பினால் சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என ஜெயா தொலைகாட்சி நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி விவேக் ஜெயராமன் தெரிவித்துள்ளார்.

நேற்று செவ்வாய்க்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கை ஒன்றின் மூலமாகவே இதனைத் தெரிவித்தார்.

குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதாவின் புகழுக்கு களங்கம் ஏற்படும் வகையில் அவருடைய மகள் எனக் கூறி சிலர் அவதூறு பரப்பி வருவது கண்டிக்கத்தக்க விடயமாகும்.

ஜெயலலிதா இறந்து ஒருவருடம் பூர்த்தியாகிவிட்ட நிலையில் ஆதாரங்கள் எதுவும் இல்லாமல் சிலர் தத்தம் விருப்பத்திற்கமைய கற்பனையாக கதைகளை கூறி வருகின்றனர்.

மாபெரும் தலைவின் பெயருக்கு களங்கம் விளைவிப்பது மனச்சாட்சியற்ற செயலாகும். ஜெயலலிதாவிற்கு என யார் இருந்திருந்தாலும் அவர் மறைத்திருக்க வாய்ப்பே இல்லை.

ஒளிவுமறைவு எதுவும் இல்லாமல் தமிழகத்தில் செல்வி ஜெயலலிதா என்ற பெருமையுடன் வாழ்ந்த வரை வேறு விதமாக சித்திரிப்பது கண்டிக்கத்தக்க செயலாகும். அவருடைய மரியாதைக்கு பங்கம் விளைவிக்கும் செயலை யார் செய்தாலும் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

அதேபோன்று இவ்வாறான அவதூறுகளை அ.தி.மு.க.தொண்டர்கள் ஒருபோதும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க மாட்டார்கள். எனவும் விவேக் ஜெயராமன் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (இ-8)

# சொந்த மண்ணிலுள்ள பயங்கரவாத அமைப்புகள் மீது தீர்க்கமான நடவடிக்கை எடுங்கள்

## பாகிஸ்தானுக்கு ட்ரம்ப் வலியுறுத்தல்

(வோஷிங்டன்)

பாகிஸ்தான் தனது மண்ணிலுள்ள பயங்கரவாத அமைப்புகள் மீது தீர்க்கமான நடவடிக்கைகள் எடுப்பதை நாம் பார்க்க வேண்டும் என ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியாக ட்ரம்ப் பொறுப் பேற்றுக்கொண்ட நாள் முதல் நாட்டின் பாதுகாப்பு விடயத்தில் தீவிர கவனம் செலுத்தி வருகிறார். நாட்டின் பாதுகாப்பை முன்னிறுத்தி பல்வேறு திட்டங்களை அவர் நடைமுறைப்படுத்தி வருகிறார்.

இந்த நிலையில், கடந்த 18 ஆம் திகதி அமெரிக்காவின் புதிய தேசிய பாதுகாப்பு கொள்கையை வெளியிட்டார். இந்தப் புதிய தேசிய பாதுகாப்பு கொள்கையின் முக்கிய அம்சம், பாகிஸ்தானுக்கு அதனுடைய பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கையை தீவிரப்படுத்துவதற்கு அழுத்தம் தருவது ஆகும்.

புதிய தேசிய பாதுகாப்பு கொள்கையை வெளியிட்ட பின் ட்ரம்ப் உரையாற்றுகையில், "பாகிஸ்தானுடனான நட்புறவை நாம் தொடர விரும்புகிறோம் என்பதை அந்நாட்டிற்கு தெளிவுபடுத்த வேண்டும். பாகிஸ்தான் தனது மண்ணில் உள்ள பயங்கரவாத அமைப்புகள் மீது தீர்க்கமான நடவடிக்கைகள் எடுப்பதை நாம் பார்க்க வேண்டும். நாம் ஒவ்வொரு ஆண்டும் மிகப்பெரிய தொகையை அந்நாட்டிற்கு வழங்கி வருகிறோம். அது பயங்கரவாத அமைப்புகளை ஒழிக்க பயன்படும்" எனத் தெரிவித்தார்.

"பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளை தீவிரப் படுத்த பாகிஸ்தானுக்கு நாம் தொடர்ந்து அழுத்தம் தருவோம். ஏனென்றால் ஒரு நாடு தனது கூட்டாளி நாட்டின் வீரர்கள் மற்றும் அதிகாரிகள் மீது தாக்குதல் நடத்தும் பயங்கரவாதிகளுக்கு ஆதரவு அளிக்கும் பட்சத்தில் அந்த இரு நாடுகளுக்கு இடையேயான நட்புறவு நீடிக்காது" என தெரிவித்தார். (இ-8)

# ஜெருசலேம் விவகாரம் ஐ.நா.பாதுகாப்பு சபை தீர்மானம் அமெரிக்காவால் நிராகரிப்பு!

(நியூயோர்க்)


ஐ.நா.பாதுகாப்புச் சபையில், 14 நாடுகள் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்குப் போட்டும், அமெரிக்கா தனது மறுப்புரிமை வாக்கை பயன்படுத்தி அதை நிராகரித்து விட்டது.

இஸ்ரேல் தலைநகர் ஜெருசலேம் என்று அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தன்னிச்சையாக முடிவு எடுத்து கடந்த 6 ஆம் திகதி வெளியிட்ட அறிவிப்பு, பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. இந்த அறிவிப்பின் காரணமாக இஸ்ரேலுக்கும், பாலஸ்தீனத்துக்கும் இடையேயான பதற்றம் மேலும் அதிகரித்து உள்ளது.

இந்த அறிவிப்பைத் தொடர்ந்து உலக நாடுகள் பலவும் அமெரிக்காவுக்கு எதிராக கருத்து தெரிவித்தன. முஸ்லிம் நாடுகள் ஓரணியில் திரண்டு, இந்த முடிவை ட்ரம்ப் திரும்பப்பெற வேண்டும் என்று வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றின.

இந்த நிலையில், ஜெருசலேம் விவகாரத்தில் ட்ரம்ப் தனது முடிவை திரும்பப்பெற வேண்டும் என்று ஐ.நா. பாதுகாப்புச்சபையில் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவாக அமெரிக்காவின் நெருங்கிய ஆதரவு நாடுகளும் நேற்று முன்தினம் வாக்களித்தன.

15 நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்ட ஐ.நா. பாதுகாப்பு சபையில், 14 நாடுகள் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்குப் போட்டும். அமெரிக்கா தனது மறுப்புரிமை வாக்கை பயன்படுத்தி, அதை



நிராகரித்து விட்டது. கடந்த 6 ஆண்டுகளில் அமெரிக்கா தனது மறுப்புரிமை வாக்கை பயன்படுத்தி இருப்பது இதுவே முதல் முறை ஆகும்.

அமெரிக்காவின் முடிவை நியாயப்படுத்தி பேசிய அந்த நாட்டுக்கான ஐ.நா.சபை தூதர் நிக்கி ஹாலி, "அமெரிக்காவின் இறையாண்மையை காப்பதன் நிமித்தமாக இந்த மறுப்புரிமைவாக்கை பயன்படுத்துகிறோம். இந்த விவகாரத்தில் ஐ.நா.செய்திருப்பது அவமதிப்பு ஆகும். இஸ்ரேலிய-பாலஸ்தீன மோதலில், நல்லது செய்வதற்கு பதிலாக கூடுதலான தீங்கை ஐ.நா. சபை செய்கிறது என்பதற்கு இந்தத் தீர்மானம் மேலும் ஒரு உதாரணமாக அமைகிறது" என்று தெரிவித்தார். ஐ.நா.பாதுகாப்பு சபையில் தீர்மானத்தை அமெரிக்கா மறுப்புரிமை வாக்கைப் பயன்படுத்தி நிராகரித்திருப்பதற்கு துருக்கி வருத்தம் தெரிவித்துள்ளது. (இ-8)

# சுற்றுலா பே... விபத்தில் 1...

(மெக்சிக்கோசிட்டி)

மெக்சிக்கோவின் குயிண்டானா பகுதியில் சுற்றுலா சென்ற பேருந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 12 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

நேற்றுக் காலை மெக்சிக்கோவின் குயிண்டானா பகுதியில் உள்ள சுற்றுலா தளங்களை சுற்றிப்பார்ப்பதற்காக 31 பேர் கொண்ட சுற்றுலா குழு பேருந்தில் சென்று கொண்டிருந்தது. சச்சோபன் பகுதியில் உள்ள பழங்கால மாயன் நகரை பார்ப்பதற்காக அந்த குழு சென்றுள்ளது. அப்போது சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த பேருந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் சிக்கி 12 சுற்றுலாப் பயணிகள் உயிரி ழந்தனர்.

மேலும் 18 பேர் காய மடைந்துள்ளதாக பொலிஸார் தெரி வித்துள்ளனர். காயமடைந்தவர்கள் கோஸ்டா மாயா நகரில் உள்ள வைத் தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

சுற்றுலா சென்ற இடத்தில் 12 பேர் விபத்தில் சிக்கி உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. கடந்த ஆண்டும் இதே பகுதியில் சுற்றுலா பேருந்து கவிழ்ந்த விபத்தில் 11 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-8)

# வெளிநாடு



## ரோஹிஞ்யா அகதிகளை மியன்மாருக்கு அனுப்ப குழு



(டாக்கா)

வன்முறையால் மியன்மார் நாட்டைவிட்டு வெளியேறி வங்காளதேசத்தில் தஞ்சம் அடைந்துள்ள சுமார் 65 இலட்சம் ரோஹிஞ்யா இன மக்களை 2 மாதங்களுக்குள் தாய்நாட்டுக்கு அனுப்பிவைக்க குழு அமைக்கப்பட்டுள்ளது.

மியன்மாரின் வடக்குப் பகுதியான ரக்கினே மாநிலத்தில் சிறுபான்மை ரோஹிஞ்யா இன முஸ்லிம்கள் அதிகளவில் வாழ்ந்து வருகின்றனர். வங்காளதேசம் நாட்டில் இருந்து குடிபெயர்ந்து மியன்மாரில் பத்து இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் தொகையை கொண்டவர்களாக இருக்கும் இவர்களில் சிலர், கடந்த 2012ஆம் ஆண்டில் இருந்து ஆட்சியாளர்களின் ஒடுக்குமுறைக்கு எதிராக ஆயுதம் தாங்கிய போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இராணுவத்தினரின் தாக்குதலால் உயிருக்கு பயந்து ரோஹிஞ்யா முஸ்லிம்கள் வங்காளதேசத்திற்கு தப்பிச் சென்ற வண்ணம் உள்ளனர். இரு நாடுகளுக்கும் இடையிலான ஆற்றின் வழியாக படகில் செல்லும் பலர் விபத்துகளில் சிக்கி உயிரிழந்து வருகின்றனர். மியன்மாரில் உள்ள பொலிஸ் சோதனைச் சாவடிகளின் மீது கடந்த ஓகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி ரோஹிஞ்யா போராளிகள் தாக்குதல் நடத்தியதை தொடர்ந்து அவர்களுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை தீவிரம் அடைந்தது.

மியன்மாரில் இராணுவ நடவடிக்கைகள் தொடங்கிய நாளில் இருந்து சுமார் 6 இலட்சம் ரோஹிஞ்யா முஸ்லிம்கள் அங்கிருந்து வெளியேறி அண்டைநாடான வங்காளதேசத்தில் அகதிகளாக தஞ்சம் அடைந்துள்ளனர். ரக்கினே மாநிலத்துக்குள் பத்திரிகையாளர்கள் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. பலகாலமாக மியன்மாரின் ஆட்சியை கைப்பற்றி வைத்திருந்த இராணுவம் ஆட்சியாளர்களின் கட்டளைக்கு கீழ்ப்படிய மறுத்து இஸ்லாம் மதத்தினரான ரோஹிஞ்யா மக்கள மீது அடக்குமுறையை பயன்படுத்தி வருவதாக சில நாடுகள் குற்றம்சாட்டியுள்ளன.

முன்னதாக, மியன்மாரில் ரோஹிஞ்யா முஸ்லிம்கள் மீது இராணுவம் நடத்திவரும் ஒடுக்குமுறைகளுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்தோனியோ குட்ரேரஸ் கண்டனம் தெரிவித்தார். ரோஹிஞ்யா முஸ்லிம்களுக்கு மியன்மார் அரசு சட்ட அங்கீகாரம் வழங்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

வங்காளதேசத்தில் அகதிகளாக தஞ்சம் அடைந்துள்ள ரோஹிஞ்யா மக்களை திரும்பப்பெற மியன்மார் அரசு சம்மதம் தெரிவித்துள்ள நிலையில் இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் தொடங்கியுள்ளதாக வங்காளதேசம் நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் மஹ்மூத் அலி கடந்த மாதம் அறிவித்தார்.

இந்நிலையில், பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் நடைபெற்ற ஆசியான் உச்சி மாநாட்டுக்கு இடையில் மியன்மார் அரசின் தலைமை ஆலோசகரும், அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவருமான ஆங்சான் சூகியை ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் சந்தித்தார்.

ரக்கினே மாநிலத்தில் உள்ள மக்களுக்கு மனித நேய அடிப்படையிலான உதவிகள் சென்று சேருவதை உறுதிப்படுத்த வேண்டும். ரோஹிஞ்யா மக்கள் பாதுகாப்பாகவும், கண்ணியத்துடனும் வாழ்வதற்கான வழிவகைகள் ஏற்படுத்தி தரப்பட வேண்டும் என ஆங் சான் சூகியிடம் குட்ரேரஸ் வலியுறுத்தினார்.

இந்நிலையில் வங்காளதேசத்தில் உள்ள ரோஹிஞ்யா இன மக்கள் பாதுகாப்பான முறையில் மீண்டும் மியன்மார் நாட்டுக்கு செல்வதை உறுதிப்படுத்தும் வகையில் இரு நாடுகளும் சேர்ந்து 30 நபர்களைக் கொண்ட கண்காணிப்பு குழுவை அமைத்துள்ளதாக வங்காளதேசம் நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் மஹ்மூத் அலி நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார். இந்த குழுவில் இருநாடுகளையும் சேர்ந்த தலா 15 பிரதிநிதிகள் இடம் பெற்றுள்ளனர்.

வங்காளதேசத்தில் உள்ள மியன்மார் அகதிகளின் அடையாளங்களை சரிபார்த்து, ஆய்வுசெய்து அவர்களுக்கான போக்குவரத்து ஏற்பாடுகளை கண்காணித்து தகவல் அளிக்கும் பணியில் இந்தக் குழுவினர் ஈடுபடுவார்கள். இன்னும் இரு மாதங்களுக்குள் இங்குள்ள அகதிகள் தங்களது சொந்த விருப்பத்தின் பேரில் மியன்மாருக்கு சென்று விடுவார்கள் என வங்காளதேசம் நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-8)

## றியாத் அரண்மனை மீது ஏவுகணைத் தாக்குதல்

### தடுத்து வீழ்த்தியதாக சவுதி தகவல்

(றியாத்)

சவுதி அரேபியா தலைநகர் றியாத் நகரிலுள்ள அரண்மனையின் மீது ஏமன் போராளிகள் ஏவுகணை தாக்குதல் நடத்தியதாகவும், அதை தடுத்து வீழ்த்தியதாகவும் சவுதி ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஏமன் நாட்டின் அரசுக்கு எதிராக ஈரானின் ஆதரவுடன் உள்நாட்டு ஹவுதி புரட்சிப் படையினர் கடந்த இரண்டாண்டுகளாக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அரசுப் படைகளுடன் புரட்சிப் படையினர் நடத்திவரும் மோதலில் பத்தாயிரத்துக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர்.

இந்தப் படையினருக்கு சவுதி அரேபியா தலைமையிலான இஸ்லாமியப் படைகள் ஆதரவு அளித்து வருகின்றன.

இந்த ஆதரவுடன் நாட்டின் தலைநகரான சனா



பகுதியை கைப்பற்றியுள்ள புரட்சிப் படையினர் அந்நகரை தங்களது ஆளுமைக்கு உட்படுத்தி வைத்துள்ளனர்.

கடந்த மூன்றாண்டுகளாக அரசுப் படைகளுடன் ஹவுதி புரட்சிப் படையினர் நடத்தி வரும் மோதலில் பத்தாயிரத்துக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர். அரசுப் படையினருக்கு சவுதி அரேபியா தலைமையிலான இஸ்லாமியப் படைகள் ஆதரவளித்து வருகின்றன.


ஹவுதி புரட்சிப் படையினரை விமானத் தாக்குதல் மூலமாக ஒடுக்கும் பணியில் சவுதி தலைமையிலான ஐக்கிய அரபு அமீரக கூட்டுப் படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த 2015ஆம் ஆண்டில் தொடங்கிய இந்த உள்நாட்டுப் போரில் 8,670இற்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர். சுமார் பத்தாயிரம் பேர் காயமடைந்துள்ளனர்.

இதற்கு பழிவாங்கும் வகையில் அவ்வப்போது சவுதி அரேபியா மீது ஏமன் போராளிகள் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

அவ்வகையில், சவுதி அரேபியர் தலைநகர் றியாத் நகரிலுள்ள அரண்மனையின் மீது ஏமன் போராளிகள் நேற்று முன்தினம் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியதாகவும், அதை சுட்டு வீழ்த்தியதாகவும் சவுதி ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (இ-8)

## 3000 ஆண்டுகள் பழைமையான எலும்புக்கூடுகள் கண்டெடுப்பு



(கெய்ரோ)

எகிப்து நாட்டின் அஸ்வான் நகருக்கு அருகில் 3000 ஆண்டுகள் பழைமையான எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

எகிப்து நாட்டின் அஸ்வான் நகருக்கு அருகில் சுவீடன் மற்றும் எகிப்து நாடுகளை சேர்ந்த தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது கெப்பில் அல்-சில்சிலா என்ற இடத்தில் இரண்டு அல்லது மூன்று வயது குழந்தைக்காக கல்லில் செதுக்கப்பட்ட ஒரு கல்லறையை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்தனர்.

அதோடு அந்த உடலை பதப்படுத்துவதற்காக சுற்றப்பட்டிருந்த துணியுடன், மரப்பெட்டியின் எஞ்சியுள்ள கரிமப் பொருளும் கண்டு பிடிக்கப்பட்டது.

அதேஇடத்தில் மேற்கொண்டு சில கல்லறைகளையும் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். அதில் ஆறிலிருந்து ஒன்பது வயதுக்குட்பட்ட குழந்தைக்கான சவப்பெட்டி, மற்றொன்றில் ஐந்திலிருந்து எட்டு வயதுக்குட்பட்ட குழந்தைக்கானதான சவப்பெட்டியும் கண்டு பிடிக்கப்பட்டது.


இந்த இரண்டிலும் சில தாயத்துகள் மற்றும் மட்பாண்ட பொருட்களும் இருந்தன. நான்காவது கல்லறையில் ஐந்திலிருந்து எட்டு வயதுக்குட்பட்ட குழந்தைக்கானதாகும். சுண்ணாம்புக் கல்லில் செதுக்கப்பட்ட 35 சென்றிமீற்றர் உயரமான கால் மற்றும் வலது கையிழந்த தலையற்ற பெண்ணின் சிலை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சிலை அணிந்திருந்த உடையானது, கிரேக்க பெண் கடவுளான ஆர்டேமிஸ் அணிந்திருக்கும் உடை போல் இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர். எகிப்தின் 18ஆவது ராஜவம்சத்தில் (1549/1550-1292 கி.மு) இந்த எலும்புக்கூடுகள் புதைக்கப்பட்டிருக்கலாம் என ஆராய்ச்சியாளர்கள் கணக்கிட்டுள்ளனர்.

"தட்மாசிட்" என்றழைக்கப்படும் எகிப்தின் 18ஆவது ராஜவம்ச காலத்தில் கடைப்பிடிக்கப்பட்ட இறுதிச் சடங்கு முறைகள், அக்காலத்து மக்களின் சமூகம், பொருளாதாரம் மற்றும் மத வாழ்க்கை குறித்து அதிகம் தெரிந்து கொள்ள இந்தப் புதிய கண்டுபிடிப்புகள் உதவும் என சுவீடன் ஆராய்ச்சி குழுவின் தலைவர் கூறினார்.

கெப்பில் அல்-சில்சிலா தளத்தில் இதுவரை 69 கல்லறைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும், இதில் அதிக கல்லறைகள் தோண்டி எடுக்கப்பட்டு விட்டதாக அவர் தெரிவித்தார். பழங்காலத்தில் ஏற்கனவே பல கல்லறைகள் சூறையாடப்பட்டு விட்டதாகவும் அவர் தெரிவித்தார். (இ-8)

## பருந்து கவிழ்ந்த 12 பேர் உயிரிழப்பு



# கோத்தபாயவின் திடீர் முடிவால் ஆண்டுக்கு 5 பில்லியன் ரூபா இழப்பு

## விசாரணை நடத்த அரசு நடவடிக்கை



(கொழும்பு)

பாதுகாப்புத் தலைமையகங்களை கொழும்பு நகரில் இருந்து அகற்றும் மகிந்த அரசாங்கத்தின் திட்டமிடப்படாத திடீர் முடிவால் சிறிலங்கா பாதுகாப்புப் படைகள் வாடகைக்குப் பெற்றுள்ள 15 கட்டடங்களுக்காக ஆண்டுக்கு 5 பில்லியன் ரூபாவை வாடகைக் கொடுப்பனவாக வழங்க வேண்டியுள்ளது.

அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்தத் தகவலை வெளியிட்டதாக அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

பாதுகாப்புத் தலைமையகங்களை அகற்றுவது தொடர்பாக பொருத்தமான நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருக்க வேண்டும்.

அவ்வாறு செய்திருந்தால் பாதுகாப்புத் தலைமையகங்களால் 15 கட்டடங்களை பெருமளவு பணத்துக்கு தற்காலிகமாக வாடகைக்கு பெற்றிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது.

பாதுகாப்புத் தலைமையகங்களை கொழும்பிலிருந்து அகற்றும் முடிவு விசாரிக்கப்பட வேண்டியதொரு விடயம்.

பொதுமக்களுக்கு பெரும் நிதி இழப்புக்களை ஏற்படுத்தும் மகிந்த ஆட்சியில் எடுக்கப்பட்ட இதுபோன்ற முடிவுகள் குறித்து விசாரிக்க ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமிக்குமாறு பல அமைச்சர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை கோரியுள்ளனர்.

காலிமுகத்திடலில் சங்ரிலா நிறுவனத்துக்கு விற்கப்பட்ட காணியின் மூலம் பெறப்பட்ட 125 மில்லியன் டொலர் நிதி, பத்தரமுல்லவில் பென்டகன் பாணியிலான பாதுகாப்புத் தலைமையக வளாகத்தை அமைப்பதற்காக மத்திய வங்கியில் சிறப்புக் கணக்கில் வைப்பிலிடப்பட்டது.

அந்தக் காணிகுத்தகைக்கு வழங்கப்படவில்லை. முன்னைய அரசாங்கத்தினால் அது விற்கப்பட்டது.

பாதுகாப்புத் தலைமையகங்களை அகற்றும் முடிவு ஏன் திடீரென எடுக்கப்பட்டது. இது விசாரிக்கப்பட வேண்டியது. இந்த முடிவு மோசமானதொன்று.

கொழும்பு நகருக்குப் பாதுகாப்பு வழங்க பாதுகாப்புத் தலைமையகங்கள் அவசியமானது. ஆனால் பாதுகாப்பு தலைமையகங்களை கொழும்பில் இருந்து அகற்ற ஏன் திடீர் முடிவு எடுக்கப்பட்டது? என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதற்கிடையே, முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவே பாதுகாப்புத் தலைமையகங்களை அகற்றும் முடிவை எடுத்திருந்தார்.

இந்த முடிவினால் ஏற்பட்டுள்ள இழப்புகளை கருத்தில் கொண்டு, கோத்தபாய ராஜபக்ஷவுக்கு எதிராக புதிய விசாரணைகள் ஆரம்பிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (இ-7)

# மக்கள் விரோத செயற்பாடுகளில் ஈடுபடுவதாக ஐ.தே.க.மீது சாடல்




(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷவின் அடிச்சுவடுகளை பின்பற்றி, ஐக்கிய தேசியக்கட்சியும் மக்கள் விரோத அநியாய செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றது என தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி குற்றம் சாட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மகிந்த ஆட்சிக் காலத்தில் தவறிழைத்தவர்கள் எவரும் இதுவரை தண்டிக்கப்பட்டதாக இல்லை. அவ்வாறானவர்கள் நீதிமன்றத்திற்கு செல்லும் வேகத்தில் பிணையில் விடுவிக்கப்பட்டு திரும்புகின்றனர். இவ்வாறான சந்தர்ப்பங்களில் நாட்டில் நீதி, நியாயம் எங்கே என்ற சந்தேகம் எழுகின்றது.

நடைபெறவுள்ள தேர்தலில் போட்டியிடும் கூட்டு எதிரணி மோசடிகளில் மாட்டிக் கொண்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி மோசடிகளில் சிக்கி ஆணைக்குழுவில் நிற்கிறது.

ஆனால் ஜனாதிபதி மைத்திரிபால மாத்திரமே எவ்வித மோசடிகளிலும் சிக்காத தூய்மையானவராக உள்ளார். ஜனாதிபதியின் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மீதோ, அமைச்சர் மீதோ கடந்த மூன்று ஆண்டுகளில் இதுவரை எவ்வித குற்றப்பத்திரிகையும் தாக்கல் செய்யப்பட்டதில்லை.

இவற்றை நன்கு அறிந்து, மக்கள் எதிர்வரும் தேர்தலில் வாக்களிக்க வேண்டும். மோசடிக்காரர்கள், திருடர்களை விரும்பாதவர்கள் என்பதை மக்கள் நிரூபிக்க வேண்டுமாயின், ஜனாதிபதிக்கு ஆதரவளித்து சிறந்ததொரு நாட்டை உருவாக்க வழிசமைக்க வேண்டும் என்பதே எமது வேண்டுகோள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## விலைவாசி அதிகரிப்பு

# மக்களை எதிர்கொள்ள முடியாததால் பதவியை இராஜினாமா செய்தேன்

## நிமல் லான்சா விளக்கம்



(கொழும்பு)

உள்நாட்டு விவகாரங்களுக்கான பிரதி அமைச்சர் பதவியில் இருந்து விலகுவதாக நிமல் லான்சா நேற்று முன்தினம் அறிவித்துள்ளார்.

நாட்டில் விலைவாசி அதிகரித்துள்ளதாகவும், இந்தப் பதவியுடன் தம்மால் மக்களை எதிர்கொள்ள முடியவில்லை என்பதால், பதவி விலக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கம்பஹா மாவட்டத்தில் இருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் தெரிவு செய்யப்பட்ட நிமல் லான்சா, 2015ஆம் ஆண்டில் இருந்து பிரதி அமைச்சராக பதவியில் இருந்து வந்தார்.

பிரதி அமைச்சர் பதவியில் இருந்து விலகியுள்ள போதும், தான் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலேயே தொடர்ந்தும் இருப்பேன் என்றும் உறுதியாக தெரிவித்தார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### வாயால் கெட்டுப் போகிறவர்கள்!

பெரியவர்கள் அடிக்கடி தரும் சூடான அட்வைஸ்: வாயை வைச்சுக்கிட்டு சும்மா கிட!

மனிதர்கள் ரகம் ரகமாக வாயால் கெடுகிறார்கள்.

சிரிக்க வைக்கிறோம் பேர்வழி என்று மற்றவர்களின் மனம் புண்படும் படி பேசுகிறவர்கள் முதலாவது ரகம். கேலியும் கிண்டலும் எல்லா நேரத்திலும் ஒரேமாதிரி எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. இதைக் கேலி செய்கிறவர்கள் முதலில் உணரவேண்டும். கேலிக்கு உள்ளாகிறவர்களின் அந்த நேரத்து மனநிலை எதைப் பற்றிக் கேலி செய்கிறோம் என்கிற விடயம், உடன் யார் இருக்கிறார்கள் அல்லது எத்தனை பேர் இருக்கிறார்கள் ஆகிய இவையெல்லாம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். மற்றவர்களைச் சிரிக்க வைப்பதுதான் நோக்கம் என்றாலும் பொதுவான விடயங்களை எடுத்துக் கொள்ளலாமே!

வாதம் செய்தே கெட்டுப் போகிறவர்கள் இரண்டாவது ரகம். வாதத்தில் வெல்கிறவர்கள் நட்பில் தோற்றுவிடுகிறார்கள். நல்லுறவு என்பது நிரந்தர சந்தோசம் தரும் விடயமா, அல்லது மடக்கி விட்டேன் அவரை என்பது நிரந்தர சந்தோசம் தரும் விடயமா?

கணவன் -மனைவி, முதலாளி -தொழிலாளி, மேலதிகாரி - ஊழியரின் வாதங்கள் மோசமான மனக்கசப்பிலும்- ஏன் பிரிவிலும் கூட முடிந்துவிடுகின்றன. இதைச் சில கணங்கள் சிந்தித்துப் பார்த்தால் எவருடனும் வாதம் செய்யத் தோன்றாது. உங்கள் கருத்தை நான் ஏற்க முடியாத நிலை என்று மட்டும் சொல்லி அந்த விவாதப் பைலை மூடி வைத்து விடலாமே!

மற்றவர்களைப் பற்றித் தவறாகப் பேசியே கெட்டுப் போனவர்கள் மூன்றாவது ரகத்தினர். நமக்கு வரும் துன்பங்களில் கால்வாசித் துன்பங்கள் மற்றவர்களைப் பற்றித் தவறாகப் பேசுவதால் வருபவையே. விடயமே இல்லாமல் லொடலொட என்று பேசிப்பேசி வீணாகிப் போனவர்கள் பலர். இவர்கள் நான்காவது ரகம். இவர்களைக் கண்டால் எல்லோரும் அலறியடித்துக் கொண்டு ஓடுவார்கள். இவர்களைப் பார்த்தால் எதிரே வருபவன் கூடச் சந்தில் திரும்பிவிடுவான். லொடலொடப் பேர்வழிகளை இந்தச் சமூகம் விரும்புவதில்லை. இவர்களோடு வாழ நேரிடுகிறவர்கள் பாடு ரொம்ப கஷ்டம்!

ஒரு மாறுதலுக்காக மனதை மாற்றிக் கொண்டு பார்வைகளை ஆரோக்கியமாக்கிக் கொண்டு மற்றவர்களைப் பற்றி உயர்வாக மட்டுமே பேசி வரவேண்டும். அதன்மூலம் பெறும் பலன்களை இவர்கள் சிறிது அனுபவித்துப் பார்த்தால் போதும். அப்புறம் இவர்கள் ருசிகண்ட பூனைகளாகி விடுவார்கள். அப்புறம் தவறாகப் பேசுவதைத் தாமாகக் குறைத்து விடுவார்கள்.

அதைச் செய்கிறேன், இதைச் செய்கிறேன், நானாச்சு உனக்கு என்று வலைக்குள் போய் வலியச் சிக்கிக் கொள்கிறவர்கள் ஐந்தாம் ரகம்.

மனம் ஆயிரம் சிந்திக்கும். இன்னும் பல்லாயிரம் கருத்து அதற்கு இருக்கும். அதையெல்லாம் வெளியே சொல்ல வேண்டும் என்று என்ன கட்டாயம்?

நம்முடைய மிகச் சிறந்த நண்பன், நம்முடைய உள் மனம் தான். அதனுடன் நாம் மணிக்கணக்கில் பேசலாம். சங்க இலக்கியம் இதை நெஞ்சொடு கிளத்தல் என்று சொல்கிறது. அது பொறுமையாகக் கேட்கும். அதனுடன் ஆயிரம் விவாதம் செய்யலாம். இதனால் சண்டை பிறக்காது. மாறாக நன்மையே பிறக்கும். அதனிடம் யாரைப் பற்றி வேண்டுமானாலும் தவறாகச் சொல்லலாம். ஒரு வம்பும் வராது.

வாழ்க்கையில் உருப்பட வேண்டுமானால் பேச்சைக் குறைக்க வேண்டும்!

**லேனா தமிழ்வாணன்**

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

# திருக்கோயில் மரங்களின் மருத்துவப் பயன்கள்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

### செண்பகம்

1.செண்பக இலைச்சாறு 30 மி.லீற்றருடன் 10 மி.லீ. தேன் கலந்து கொடுக்க வயிற்றுவலி தீரும்.

2. 10 கிராம் செண்பகப் பூவை கால் லீற்றர் நீரிலிட்டு 1/8 லீற்றர் ஆகும் வரை காய்ச்சி வடித்து 50 மி.லீ. வீதம் காலை, மாலை குடித்து, வரக் காய்ச்சல், வயிற்றுவலி, வெள்ளை நீர்ச்சுருக்கு ஆகியவை தீரும்.

3.செண்பகப் பூக்களை ஒரு கண்ணாடிக் கலத்தில் இட்டு அது மூழ்க நல்லெண்ணெய் பெய்து வெயில் புடமாக பூ மிதக்கும் வரை வைத்து வடித்து நெற்றியில் பற்றிடத் தலைவலி, கண்வலி, பீனிசம் ஆகியவை தீரும். கால் வீக்கம், வாத வலி ஆகியவற்றிற்குத் தடவி வரத் தீரும்.

4.செண்பக வேர்ப்பட்டை 40 கிராம் ஒன்றிரண்டாக இடித்து ஒரு லீற்றர் நீரிலிட்டு கால் லீற்றர் ஆகக் காய்ச்சி வடிகட்டி 30 மி.லீ. அளவாக காலை, மாலை கொடுத்துவரக் குளிர் காய்ச்சல் தீரும். இரைப்பை அழற்சி தணியும்.

5.வேர்ப்பட்டையைத் தயிர் விட்டரைத்துக் கட்டிகளுக்குப் போடக் கரையும். அல்லது உடைத்து ஆறும்.

### பாதிரி

1.பாதிரி இலைச் சாற்றுடன் சமன் எலுமிச்சம் பழச்சாறு கலந்து தலையில் பூசி வைத்திருந்து குளித்து வரப் பித்தம் தணிந்து பைத்தியம் நீங்கும்.

2. 5 கிராம் பூவை அரைத்துச் சாப்பிட்டு வர மேக அனல் தணிந்து சுரம் தீரும்.

3. பூவைக் கசக்கிப் பிழிந்து சாறு ஒரு தேக்கரண்டியுடன் சமன் தேன் கலந்து கொடுக்க விக்கல் தீரும்.

4.பாதிலி வேர்ப்பட்டையை உலர்த்திப் பொடித்து அரைத் தேக்கரண்டி காலை, மாலை சாப்பிட்டு வரப் பசியின்மை, மூலம், சொறி,பெரும் புண்கள், மதுமேகம், கரப்பான், கண், காது, கை,கால் எரிச்சல் தீரும்.

5.பாதிரி மரப்பட்டையைச் சிதைத்து 50 கிராம் 1/2 லீற்றர் நீரில் போட்டு ஒரு மணி நேரம் ஊற வைத்து வடிகட்டி 50 மி.லீ. ஆகக் காலை, மாலை சாப்பிட்டு வர வயிற்று வலி, இருமல், சோகை ஆகியவை தீரும்.

### பவள மல்லிகை

1. பவளமல்லி இலைக் கொழுந்து 5 கிராம் அரைத்துச் சிறிது இஞ்சிச் சாற்றுடன் கலந்து காலை, மாலை கொடுத்துவர முறை சுரம் தீரும்.



2. 20 கிராம் இலையைக் குறுக அரிந்து ஒரு குவளை வெந்நீரில் மூன்று மணி நேரம் ஊற வைத்து காலை, மாலை குடித்து வரக் காய்ச்சல், முதுகுவலி ஆகியவை தீரும்.

. 3. இலைச்சாறு 50 மி.லீற்றரில் ஒரு சிட்டிகை உப்பும் 2 தேக்கரண்டி தேனும் கலந்து கொடுக்க மலப் புழுக்கள் செத்து விழும்.

4. 20 கிராம் பவள மல்லி இலையை அரிந்து அரை விட்டம் நீரிலிட்டு நன்கு கொதிக்க வைத்து அரை லீற்றராக்கி வடிகட்டிக் காலை, மாலை பாதிபாதியாகக் கொடுக்க மலச்சிக்கலும் சளியும் அகலும்.

5. விதையை உலர்த் திப் பொடித்து நல்லெண்ணெயில் குழைத்துத் தலையில் தடவி வைத்திருந்து குளித் துவரத் தலைச் சொறி, சிரங்கு, அரிப்பு ஆகியவை தீரும்.

6.பவளமல்லிவேர்ப்பட்டை 10 கிராம் மென்மையாய் அரைத்துப் பாலில் கலக்கி வடிகட்டி காலை, மாலைகொடுத்துவரத்தோல்நோய்கள் தீரும்.

### புரசு

1. புரசு இலையை உலர்த்திப் பொடித்து அரைத் தேக்கரண்டி தேனில் குழைத் துச் சாப்பிட்டு வர வயிற்றுப் போக்கு, வயிற்று வலி, மூலம் ஆகியவை தீரும்.

2. இலையை மென்மையாய் அரைத்துப்பற்றுப்போடக் கட்டிகள் அமுங்கும். புற்றுப் போல் வளரும் புண்களில் பூசி வர வளர்ச்சி தடையுறும்.

3.வேண்டிய அளவு பூவை நீராவியில் வேக வைத்துச் சூட்டுடன் நன்கு பிசைந்து இளஞ்சூட்டில் கட்டிகள் மீது வைத்துக் கட்ட அவை அமுங்கும். விதை வீக்கத்தில் கட்டி வரக் குணமாகும்.

4.புரசம் பூ 50 கிராம் சிதைத்து அரை லீற்றர் நீரிலிட்டு கால் லீற்றராகக் காய்ச்சி வடித்துக் காலை, மாலை பாதிபாதியாகக் குடித்து வரத் தாமதித்த மாதவிடாய் தீரும்.

5.விதையைத் தோல் நீக்கிப் பொடித்து 300 மி.லீ. அளவாகக் காலை, மாலையாக மூன்று நாள் சாப்பிட்டு நான்காம் நாள் பேதியாகுமாறு விளக்கெண்ணெய் சாப்பிட மலப்புழுக்கள் அனைத்தும் தீரும்.

6.விதையை எலுமிச்சம் பழச்சாற்றில் உரைத்துப் படைகளின் மீது தடவ அவை ஆறும்.

7.புரசம் பட்டையை இடித்தெடுத்த சாறு 25 மி.லீற்றருடன் இஞ்சிச்சாறு சமன் கலந்து கொடுக்கப் பாம்புக்கடி நஞ்சு அகலும்.

8.புரசம் பட்டையை 50 கிராம் ஒன்றிரண்டாய் இடித்து அரை லீற்றர் நீரிலிட்டு 150 மி.லீ.ஆகக் காய்ச்சி வடிகட்டிக் காலை, மதியம், மாலை 50 மி.லீ.ஆகக் சாப்பிட்டு வர நீர்க்கோவை, தலைப்பாரம், சளி, இருமல் ஆகியவை போகும்.

9.பட்டையுடன் பாதியளவு கற்கண்டு சேர்த்து ஒன்றிரண்டாய் இடித்து வைத் துக் கொண்டு சிறிதளவு வாயிலிட்டுச் சுவைத்து வர மிகுதாகம் நீங்கும்.

10.புரசம் பிசினுடன் பாதியளவு கிராம்பு சேர்த்துப் பொடி செய்து ஒரு கிராம் அளவாகத் தேனில் குழை த்துக் காலை, மாலை கொடு க்க நீர்த்த கழித்தல், சீதக் கழிச்சல் ஆகியவை தீரும். நீடித்துக் கொடுக்க என்புருக்கி, இரத்த சிறுநீர், இரத்த வாந்தி ஆகியவை குணமாகும்.

### மகிழ்

1.மகிழம்பூ 50 கிராம், 300 மி.லீ. நீரிலிட்டு 100 மி.லீ. ஆகக் காய்ச்சி வடி கட்டியதில் பாலும் கற்கண் டும் கலந்து இரவு உணர் வுக்குப் பின் குடித்து வர உடல் வலிவு மிகும்.

2.பூவை உலர்த்திப் பொடி செய்து மூக்கினால் மோப் பத் தலைவலி தீரும்.

3.மகிழங்காயை மென்று வைத்திருந்து துப்பி வரப் பல் ஆட்டம் நீங்கி பல் உறுதிபடும்.

4.பழத்தை உண்டு வருவதால் நீடித்த தலைவலி நீங்கும்.

5.மகிழ வித்துப் பருப்பை வேளைக்கு 5 கிராம் அரைத்துப் பாலில் கலந்து சாப்பிட்டுவரத் தாது பெருக்கமடையும்.

6. 10 கிராம் மகிழம்பட்டையைப் பொடித்து அரை லீற்றர் நீரிலிட்டு 100 மி.லீ. ஆகக் காய்ச்சி வடிகட்டித் தேன் சேர்த்து 50 மி.லீ. ஆகக் காலை, மாலை தொடர்ந்து சாப்பிட்டு வர கருப்பை பலவீனம் தீரும். காய்ச்சல் தணியும்.

7.மகிழம் பட்டையை இடித்து நீரிலிட்டு ஊற வைத்தோ கொதிக்க வைத்தோ எடுத்த குடிநீரால் வாய் கொப்பளிக்க வாய்ப்புண் தீரும்.

### இலந்தை

1.தளிரும் பட்டையும் சமனளவாய் அரைத்துக் கட்டிகளுக்குப் பற்றுப் போடப் பழுத்து உடையும்.

2. தளிர் இலை அல்லது பட்டை 5 கிராம் நெகிழ அரைத்துத் தயிரில் கலக்கிக் கொடுத்து வர வயிற்றுக் கடுப்பு, இரத்த பேதி ஆகியவை தீரும்.

3.இலந்தையிலை ஒரு பிடி, மிளகு 6, பூண்டுப்பல் 4 இவற்றை மென்மையாகும்படி அரைத்து மாதவிலக்கான முதல் இரு நாட்கள் கொடுத்து வரக் கருப்பைக் குறைபாடுகள் நீங்கி மகப் பேறு வாய்க்கும்.

4.இலந்தையிலையை அரைத்துச் சிறு எலுமிச்சை அளவு மோரில் கலக் கிக் கொடுத்துவர மூலம் தீரும்.

5.இலை,பட்டை வகைக்கு 20 கிராம் சிதைத்து ஒரு லீற்றர் நீரிலிட்டு கால் லீற்றராக வற்றக் காய்ச்சி காலை, மாலை 125 மி.லீ. ஆகக் குடித்துவர இரத்த அதிசாரம், வயிற்றுக் கடுப்பு ஆகியவை தீரும்.

6. விதை நீக்கிய பழச்சதையுடன் மிளகாய், உப்பு திட்டமாய்ச் சேர்த்து அரைத்து அடை தட்டி உலர்த்தி வைத்துக் கொண்டு காலையில் கொட்டைப் பாக்களவு சுவைத்து வரப் பித்த வாந்தி, சுவையின்மை ஆகியவை நீங்கி நல்ல பசியும் உணவில் விருப்பும் உண்டாகும்.

7.இலந்தைப் பட்டையை உலர்த்திப் பொடித்து 2 கிராம் இரவில் வெந்நீருடன் சாப்பிட்டு வரப் பசியின்மை நீங்கும். நாட்பட்ட புண்களில் தூவ ஆறும்.

8.இலந்தைப் பட்டை, மாதுளம் பட்டை வகைக்கு 40 கிராம் சிதைத்து அரை லீற்றர் நீரில் இட்டு நாலில் ஒன்றாகக் காய்ச்சி வடித்து நான்கு வேளை குடித்து வர நாட்பட்ட பெரும்பாடும் தீரும்.

9.பட்டையை அரைத் துப் பற்றுப் போடக் கீல்வா தம் தீரும்.

### கோங்கு (முள்ளிலவு)

1.கோங்கு இலை 20 கிராம் அரைத்து பாலில் கலக்கி வடிகட்டிக் கொடுக்க வாதக் கடுப்பு தீரும்.

2. 20 கிராம் கோங்கின் பூவைச் சிதைத்து அரை லீற்றர் நீரிலிட்டு 125 மி.லீ. ஆகுமாறு காய்ச்சி வடிகட்டிக் குடிக்க மலச்சிக்கலாறும். சிறுநீர் பெருகும்.

3. உலர்ந்த கோங்கின் பூவுடன் சமனளவு கசகசா சேர்த்தரைத்து வெள்ளாட் டுப் பாலில் கலக்கிக் கொதி க்க வைத்துச் சக்கரை கல ந்து 30 மி.லீ.ஆகக் காலை, மதியம், மாலை கொடுத்து வர இரத்த பித்தம் தணி யும்.

4.விதை 4 கிராம், சீர கம் 2 கிராம், வால் மிளகு ஒரு கிராம் ஆகியவற்றை மென்மையாய் அரைத்து ஒரு குவளை மோரில் கலக்கிக் காலையில் மட்டும் கொடுத்து வரத் தந்தி மேகம், நீர்க் கடுப்பு, நீர்ச்சுருக்கு, சிறுநீரில் இரத்தம், சீழ் போதல் குணமாகும்.

5. 20 கிராம் பட்டையை இளநீர் விட்டோ பால்வி ட்டோ அரைத்துப் பிழிந்து காலை, மாலை கொடுத்து வர நீர்க்கடுப்பு, நீர் எரிச்சல், வெள்ளை, இரத்த வெள்ளை, சீதக்கழிச்சல், இரத்தக் கழிச்சல் ஆகியவை தீரும்.

6. கோங்கு பிசினை உலர்த்திப் பொடித்து 2 கிராம் இளநீரில் நாளுக்கு மூன்று வேளை கொடுக் கத் தந்தி மேகம் பெரும் பாடு, செரியாக் கழிச்சல், சீதக் கழிச்சல் ஆகியவை தீரும்.

7.கோங்கின் பஞ்சைப் புண்களில் வைத்துக் கட்டி வரச் சீழ் குறைந்து ஆறும்.

### முல்லை

1.மல்லிகை இலையை நன்கு மென்று துப்ப வாய்ப்புண் ஆறும்.

2.இலையை நெய் யில் வதக்கி ஒத்தடங் கொடுக்க தொண்டை நோய் தீரும்.

3.மல்லிகைப் பூக் களை வைத்துக் கட்டிவர விதை வீக்கம் கரையும்.

4.பூக்களை மார்பகத் தில் வைத்துக் கட்டிவர மூன்று நாட்களில் பால் சுரப்பை நிறுத்தி வேதனையைக் குறைக்கும்.

5.வேண்டிய அளவு மல்லிகைப் பூக்களை ஒரு கண்ணாடிக் கலத்தில் இட்டு அவை மூழ்கநல்லெண்ணெய்பெய்து பூக்கள் மிதக்கும் வரை வெயிலில் வைத்திருந்து வடிகட்டித் தலைக்குத் தடவி வர நறுமணத்தையும் மனக் கிளர்ச்சியையும் கொடுக்கும். மேலும் தலைவலி, கண்ணெரிச்சல் ஆகியவை தீர்ந்து உடல் குளிர்ச்சி பெறும்.

### மூங்கில்

1.மூங்கில் இலையை அரைத்து முள் தைத்த இடத்தில் வைத்துக் கட்ட முள் வெளியாகும்.

2.இலையைச் சிறிது நீர் விட்டு இடித்துப் பிழிந்த சாற்றுடன் தேன் கலந்து காலை, மாலை கொடுத்து வர இருமல் தீரும்.

3.மூங்கிலிலையை உலர்த்திக் கொளுத்திச் சாம்பலாக்கிப் புண்களின் மீது தூவ அவை விரைந்து ஆறும்.

4.இலைச் சாம்பலால் பல்தேய்க்கப் பற்கறைகள் அகன்று பளிச்சிடும்.

5.இளம் மூங்கில் குருத்து 100 கிராம் சிதைத்து 2 லீற்றர் நீரிலிட்டு ஒருலீற்றராகுமாறு காய்ச்சி வடிகட்டிக் காலை, மதியம், மாலை 50 மி.லீ.அளவு குடித்து வரப் பேறுகாலக் கருப்பை அழுக்குகள் வெளியேறும். சூதகக் கட்டு, வெள்ளை, காய்ச்சல், குடற்புழுக்கள் ஆகியவை தீரும்.

6.மூங்கில் மர மேல் தோல் 20 கிராம், கருஞ்சீரம், மஞ்சள் வகைக்கு 10 கிராம் அரை லீற்றர் நீரிலிட்டுக் கால் லீற்றராகக் காய்ச்சி வடிகட்டிப் பனைவெல்லம் கலந்து ஓரிரு வேளை கொடுக்க மகப்பேற்றின் போது ஏற்படும் உதிரச்சிக்கல் தீரும்.

7. மூங்கில் வேரை அரைத்துப் பற்றுப் போடச் சொறி, சிரங்கு, படை முதலியவை தீரும்.

8.மூங்கில் அரிசி உணவு மதுமேக நோயாளர்களுக்குத் தக்கதாகி நோயைத் தணிக்கும்.

9.மூங்கிலுப்பு (மூங்கிலிலிருந்து எடுக்கப்படுவது, கடைகளில் கிடைக்கும்) 8 கிராம், திப்பிலி 4 கிராம், ஏலவரிசி 2 கிராம், இலவங்கப் பட்டை ஒரு கிராம், கற்கண்டு 16 கிராம் ஆகியவற்றை பொடித்து 3 கிராம் காலை, மாலை சிறிது பாலில் கலந்து சாப்பிட மேக அனல் தணியும். இருமல் தீரும்.

(தொடரும்....)

# 2020 இல் ஜனாதிபதியாக ரணில் எதிர்க்கட்சித் தலைவராக நாமல்




(கொழும்பு)
2020ஆம் ஆண்டில் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க செயற்படுவார் என சர்வதேச வர்த்தக இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் கடந்த 18 ஆம்திகதி இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாமல் ராஜபக்ஷவை எதிர்க்கட்சி தலைவராக மாற்றுவதே மகிந்த ராஜபக்ஷவின் பிரதான நோக்கமாக வுள்ளது. மகிந்த ராஜபக்ஷ தற்போது திட்டங்களைத் தீட்டி வருகின்றார். கோத்தபாய, பசில், சமலை புறக்கணிக்கின்றார். அவரது குடும்பத்திற்குள்ளேயே போட்டியை ஆரம்பித்துள்ளார்.

இலங்கையின் தற்போதைய அபிவிருத்தி நூற்றுக்கு 4.2 வீதமாக காணப்படுகின்றது. 2020 ஆம் ஆண்டாகும் போது அது நூற்றுக்கு 7 வீதத்தை கடக்கும். எதிர்காலத்தில் இந்தியாவை விட அதிக அபிவிருத்தி வேகத்தை நோக்கி நாம் செல்வோம்.

அதனை செய்து முடிக்கும்போது 2020 ஆம் ஆண்டு ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க செயற்படுவார். ஒருவேளை நாமல் ராஜபக்ஷ எதிர்க்கட்சித் தலைவராக வரவாய்ப்புள்ளது என்றும் தெரிவித்துள்ளார். (இ)

## வெற்றிலையுடன் சேவல்

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போது ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையிலேயே இம்முறைத் தேர்தலில் களமிறங்கவுள்ளதாக மத்திய மாகாண தமிழ்க் கல்வியமைச்சர் எம்.ரமேஷ்வரன் தெரிவித்தார்.

கொட்டகலைப் பகுதியில் கடந்த 18 ஆம் திகதி இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-8)

# ஐ.நா.செயற்குழுவின் அறிக்கை செப்டெம்பர் மாதம் வெளிவரும்

(கொழும்பு)
இலங்கைக்கு விஜயம் செய்திருந்த தன்னிச்சையாக தடுத்து வைத்தல் தொடர்பாக ஆராயும் ஐக்கிய நாடுகள் செயற்குழுவின் இலங்கை தொடர்பான அறிக்கை எதிர்வரும் 2018 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 39 ஆவது கூட்டத்தொடரில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இதன்போது இலங்கையில் தடுத்து வைக்கும் விவகாரம், பயங்கரவாத தடைச் சட்டம், பொறுப்புக்கூறல் பொறிமுறை உள்ளிட்ட பல வேறு விடயங்கள் தொடர்பில் பரிந்துரைகளை இந்த அறிக்கையில் ஐக்கிய நாடுகள் செயற்குழு முன்வைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

குறிப்பாக இலங்கை விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பும் முன்னர் கொழும்பில் ஊடகவியலாளர்களைச் சந்தித்து தன்னிச்சையாக தடுத்து வைத்தல் தொடர்பாக ஆராயும் ஐக்கிய நாடுகள் செயற்குழுவின் உறுப்பினர்கள் இலங்கையானது பயங்கரவாத தடைச் சட்டத்தை உடனடியாக நீக்கவேண்டும் என்றும் மனித சுதந்திரத்திற்கு மதிப்பளிக்கவேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தது.

அத்துடன் பொலிஸ் நிலையங்களில் சட்டத்தரணி பிரசன்னமின்றி தடுத்து வைக்கப்பட்டோரை அதிகாரிகள் விசாரணை செய்யும் விடயம் தொடர்பில் கவலையடைவதாக ஐ.நா. செயலகம் அறிவித்திருந்தது.

மேலும் சித்திரவதைகளுக்கு எதிரான சாசனத்தின் கட்டுப்பாடுகளை இலங்கை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டுமென்றும் தன்னிச்சையாக தடுத்து வைத்தலுக்கு எதிரான ஐ.நா. செயற்குழு அறிவித்துள்ளது. இதேவேளை ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 37 ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-8)

# 14,000 மத்தியதர வீடுகளை அமைக்க மலேஷியா உதவி



(கொழும்பு)
இலங்கையில் 14,000 மத்தியதர வீடுகளை நிர்மாணிப்பதற்கு மலேஷியா இணக்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை வந்துள்ள மலேஷியப் பிரதமர் நஜீப் ரஸாக்குக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்குமிடையில் நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற இருதரப்பு பேச்சுவார்த்தையின் போதே இதற்கான இணக்கம் காணப்பட்டுள்ளது. (இ-8)

# கடைசிநேரம் வரை காத்திராமல் வேட்புமனுக்களை சமர்ப்பியுங்கள்

## தேர்தல் ஆணையாளர் கோரிக்கை



(கொழும்பு)
உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்புமனுக்களை காலதாமதம் செய்யாமல் விரைவாகத் தாக்கல் செய்யுமாறு அரசியல் கட்சிகள், சுயேட்சைக் குழுக்களிடம் தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் மகிந்த தேசப்பிரிய வேண்டுகோள் விடுத்துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாக அவர் கொழும்பில் கடந்த 18 ஆம் திகதி நடத்திய செய்தியாளர் சந்திப்பில்,

"உள்ளூராட்சித் தேர்தல் பெப்ரவரி 10 ஆம் திகதி நடத்தப்படும். இதற்கான அரசிதழ் அறிவிப்பு டிசெம்பர் 26 ஆம் திகதி வெளியிடப்படும்."

அஞ்சல்மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்களை அனுப்புவதற்கு எதிர்வரும் 22 ஆம் திகதியே கடைசி நாளாகும். அரச பணியாளர்கள் கடைசி நிமிடம் வரை காத்திருக்காமல் விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும்.

தேர்தல் சட்ட மீறல்கள் பற்றிய அறிக்கைகள் எதுவும் இதுவரை பதிவாகவில்லை. எனினும், அடுத்துவரும் வாரங்களில் தேர்தலுடன் தொடர்புடைய சம்பவங்கள் இடம்பெறலாம்.

வேட்பாளர்கள் பரப்புரைக்காக அரச சொத்துக்களைப் பயன்படுத்துவது சட்டவிரோதமாகும். சுவரொட்டிகள், பதாகைகளை குறிப்பிட்ட இடங்கள் தவிர்ந்த வேறு இடங்களில் காட்சிப் படுத்தக்கூடாது.

வேட்பாளர்கள் தமது பரப்புரை சுவரொட்டிகளை தமது பரப்புரைப் பணியகங்களிலும், வாகனங்களிலும் மாத்திரம் ஒட்ட முடியும்.

வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டதில் தேர்தல் ஆணைக்குழு பக்கச்சார்பாக நடந்து கொண்டது என்று சில அரசியல் கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன.

தேர்தல் ஆணையத்திடம் 497 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. அதில் 23 வேட்புமனுக்கள் தான் நிராகரிக்கப்பட்டன. தமது தவறுகளை மறைப்பதற்காக அரசியல் கட்சிகள் தேர்தல் ஆணையத்தின் மீது குறை கூறக் கூடாது.

இரண்டாவது கட்ட வேட்பு மனுத் தாக்கல் இன்று 21 ஆம் திகதி நண்பகல் வரை இடம்பெறும். அரசியல் கட்சிகள் கடைசி நிமிடம் வரை காத்திருக்காமல், நேரகாலத்துடன் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்ய வேண்டும்.

வேட்புமனுக்களை நிராகரிக்காத வகையில் முறைப்படி நிரப்ப வேண்டும். முதற் கட்டமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட வேட்புமனுக்களில் பல நிராகரிக்கப்பட்டமைக்கு, குறித்த கால எல்லைக்குள் சமர்ப்பிக்கத் தவறியதே காரணமாகும்.

வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டதற்கு எதிராக எவரும் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யலாம். அங்கீகரிக்கப்பட்ட முகவர்களால் கையளிக்கப்படாததாலேயே சில வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

வேட்புமனுக்களை அரசியல் கட்சிகளின் செயலர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் மாத்திரமே சமர்ப்பிக்க வேண்டும்.

சுயேட்சைக் குழுவின் வேட்புமனுக்களை அதன் தலைவர் கையளிக்க வேண்டும். முன்கூட்டியே தகவல் தெரிவித்தால் மாத்திரமே வேட்பாளர் ஒருவர் வேட்பு மனுவைத் தாக்கல் செய்ய முடியும்.

குறிப்பிட்ட நல்ல நேரத்துக்காக காத்திருந்து- குறிப்பிட்ட நேரத்துக்குள் தாக்கல் செய்யப்படாத சில வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

பெண் வேட்பாளர்களை இழிவுபடுத்தும் எந்தவொரு அறிக்கைகளையும் வெளியிடுவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. அதுபோன்ற நடவடிக்கைகளில் ஈடுபடும் எவர் மீதும், சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-8)

# பேரணிகளுக்கு முற்றாகத் தடை

(கொழும்பு)
நாடளாவிய ரீதியில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் கட்டளைச் சட்டம் அமுலுக்கு வந்துள்ள நிலையில் பேரணிகளைத் தடுக்க கடும்நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். குறிப்பாக கடந்த தேர்தல்களின் போது இடம்பெற்ற தேர்தல் வன்முறைகள் பல பேரணிகள் ஊடாக ஆரம்பித்துள்ளமையை அவதானித்துள்ள பொலிஸார் இம்முறை தேர்தலில் பேரணிகள் நடத்துவதைத் தடுக்க கடும் நடவடிக்கைக்கு திட்டமிட்டுள்ளனர்.

அதன்படி தேர்தல்கள் சட்டம் நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் முதல் அமுலுக்கு வந்ததால் பேரணிகள் அனைத்தும் தடை செய்யப்படுவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி ருவான் குணசேகர தெரிவித்தார்.

பிரதேசங்களுக்குப் பொறுப்பான உதவி பொலிஸ் அத்தியட்சர்கள், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கு பேரணிகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கும் பொறுப்பு அளிக்கப்பட்டுள்ளதாகவும், மாகாணங்களுக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்களுக்கும் அதனை மேற்பார்வை செய்து வழி நடத்தும் நேரடி கடமைகள் தொடர்பிலான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பொலிஸ் தலைமையகத்தில் கடந்த 18 ஆம் திகதி இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தல் காலப்பகுதியில் வன்முறைகள் அதிகம் இடம்பெற இந்தப் பேரணிகள் காரணம் என்பதை நாம் அடையாளம் கண்டுள்ளோம். தேர்தல்கள் சட்ட திட்டங்களின் பிரகாரம் வேட்புமனு தாக்கல் செய்யப்படும் தினத்தில் இருந்து தேர்தல்கள் நிறைவுற்று பிரகடனம் செய்யப்படும் தினம் வரை பேரணிகள், ஊர்வலங்கள் செல்ல முடியாது. மத, கலாசார பேரணிகளுக்கு அனுமதி உள்ள போதும் அவை கூட தேர்தல் நடவடிக்கைகளுடன் தொடர்புடையதாயின் அதற்கும் அனுமதியில்லை.

இம்முறை பேரணிகளை கட்டுப்படுத்த அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் நாம் எழுத்துமூல உத்தரவுகளை வழங்கியுள்ளோம். பேரணிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும் அவற்றைக் கட்டுப்படுத்தவும் பிரதேசங்களின் உதவிப் பொலிஸ் அத்தியட்சர்களுக்கும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கும் பொறுப்புச் சாட்டப்பட்டுள்ளது.

ஏதேனும் ஒரு பகுதியில் பேரணிகள் இடம்பெறுமாயின் அது தொடர்பில் 24 மணி நேரத்துக்குள் பொலிஸ் நிர்வாகம் மற்றும் தேர்தல்கள் கடமைகளுக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எஸ். எம்.விக்ரமரத்னவுக்கு அறிவிக்க வேண்டும் என பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன் அதே 24 மணி நேரத்துக்குள் மாகாணங்களுக்குப் பொறுப்பான அந்தந்த சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்களின் நேரடிக் கட்டுப்பாட்டில் விசாரணைகள் ஆரம்பமானதை உறுதி செய்து சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஊடாகவும் தேர்தல்கள் கடமைகளுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எஸ்.எம்.விக்ரமரத்னவுக்கு அறிவிக்க வேண்டும் என பொலிஸ் தலைமையகம் அறிவுறுத்தியுள்ளது.

இந் நிலையில் அவ்வாறு ஆரம்பிக்கப்படும் விசாரணைகளின் நிலைமையையும் 7 நாட்களுக்கு ஒரு முறை மாகாணங்களுக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள், தேர்தல்கள் கடமைகளுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எஸ்.எம். விக்ரமரத்னவுக்கு அறிவிக்க வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

எனவே இம்முறை தேர்தல் சட்ட திட்டங்களை மீறி பேரணிகள் செல்வோருக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார். (இ-8)

# பிறப்புச் சான்றிதழ் இல்லாதவர்களுக்கு தேசிய அடையாள அட்டை விநியோகம்

(கொழும்பு)

நாட்டில், பிறப்பு சான்றிதழ் இல்லாதவர்களுக்கு தேசிய அடையாள அட்டையை விநியோகிப்பதற்கு, ஆட்பதிவு திணைக்களத்தின் தனியான பிரிவொன்று நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக ஆட்பதிவு திணைக்கள ஆணையாளர் நாயகம் வியானி குணத்திலக தெரிவித்தார்.

பிறப்புச் சான்றிதழ் இல்லாத ஒருவர் தேசிய அடையாள அட்டையை பெறவேண்டுமாயின் அவ்வாறான ஒருவர் இலங்கை பிரஜையாக இருப்பதுடன் 15 வயதுக்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும். வாக்காளர் பாட்டியலில் உள்ள பதிவையும் இதற்காக பயன்படுத்த முடியும். இவ்வாறு பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தை சமர்ப்பிப்போருக்கு ஒரு மாத காலத்திற்குள் தேசிய அடையாள அட்டை வழங்கப்படும் என்றும் தேசிய ஆட்பதிவு திணைக்கள ஆணையாளர் நாயகம் வியானி குணதிலக தெரிவித்தார்.

இந்தப் புதிய நடைமுறை குறித்து பொதுமக்களுக்கு தெளிவுபடுத்துவதற்காக நடமாடும் சேவைகள் இத்திணைக்களத்தினால் நடத்தப்பட்டு வருகின்றது. விசேடமாக தோட்ட மக்கள் தமது ஊழியர் சேமலாப நிதியை இலகுவாகப் பெற்றுக் கொள்ள, தேசிய அடையாள அட்டையை விரைவாகப் பெற்று கொள்வதற்கு, அதாவது பிறப்புச் சான்றிதழ் இல்லாததன் காரணமாக தேசிய அடையாள அட்டை அற்றோருக்காக இவ்வாறான செயலமர்வுகள் நடத்தப்பட்டு வருவதாக ஆட்பதிவு திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் வியானி குணதிலக தெரிவித்தார்.

வாக்களிக்க தகுதி பெற்றவர்களில் சுமார் 3 இலட்சம் பேருக்கு தேசிய அடையாள அட்டை இல்லை என்பது கண்டறியப்பட்டுள்ளதோடு, இந்த விசேட பிரிவுக்கு இதுவரையில் 5 ஆயிரம் விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன என்றும் இதில் 1000 பேருக்கு தேசிய அடையாள அட்டை விநியோகித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# நத்தார் மரம் கின்னஸ் சாதனை; எனக்கு எவரும் அறிவிக்கவில்லை

## கர்தினால் ஆண்டகை விசனம்

(கொழும்பு)

நத்தார் மரம் கின்னஸ் சாதனையில் இடம்பெற்றமை குறித்து தமக்கு எவரும் அறிவிக்கவில்லை என கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கொழும்பு ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவித்துள்ள அவர்,

கடந்த 2016 ஆம் ஆண்டில் கொழும்பு காலிமுகத் திடலில் உருவாக்கப்பட்ட பாரிய நத்தார் மரத்திற்கு கின்னஸ் சாதனை அங்கீகாரம் கிடைக்கப்பெற்றமை குறித்து எனக்கு எவரும் அறிவிக்கவில்லை.

எவ்வாறெனினும், இந்த முறை நத்தாருக்காக ஜாஎல பிரதேசத்தில் பாரிய நத்தார் மரமொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த நத்தார் மரத்தை உருவாக்குவதற்காக சொற்பளவு பணமே செலவிடப்பட்டுள்ளது. நத்தார் மரத்தினை உருவாக்குவதற்கு ஐந்து இலட்சம் ரூபாவே செலவிடப்பட்டுள்ளது.

காலிமுகத் திடலில் அமைக்கப்பட்ட நத்தார் மரத்திற்கு எவ்வளவு பணம் செலவிடப்பட்டது என்பது பற்றி அறிந்து கொள்ள விரும்புகின்றேன்.

அத்துடன், நத்தார் மரம் தொடர்பில் ஏற்பட்ட சர்ச்சைகள் காரணமாக அது குறித்து மேலும் பேசுவதற்கு நான் விரும்பவில்லை என கர்தி



னால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

அப்போதைய துறைமுக அபிவிருத்தி அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவினால் காலிமுகத்திடலில் நத்தார் மரம் அமைக்கப்படுவதனை கர்தினால் மல்கம் ரஞ்சித் நேரடியாகவே எதிர்த்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இலவச பாடப் புத்தகங்கள் தொடர்பாக வெளியான தகவல்களில் உண்மையில்லை

## வெளியீட்டுத் திணைக்களம் நிராகரிப்பு

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக பாடப் புத்தகங்கள் வழங்குவதை அரசாங்கம் இடைநிறுத்தியிருப்பதாக சிலர் மேற்கொண்டு வரும் பிரசாரத்தில் எந்த உண்மையும் இல்லை என்று



கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் ஐ.எம்.கே.பி. இலங்கசிங்க தெரிவித்துள்ளார்.

இவ்வாறான பொய்ப் பிரசாரங்களுக்கு ஏமாற வேண்டாமென்று கல்வி அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் தெரிவித்தார்.

மாணவர்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்காக 410 வகைகளில் 43 மில்லியன் புதிய பாடப்புத்தகங்கள் அச்சிடப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர் பாடப்புத்தகங்களை விநியோகிப்பதற்காக அரசாங்கம் ஆண்டுதோறும் சுமார் 4 பில்லியன் ரூபாய் செலவிடுவதாக சுட்டிக்காட்டினார். (இ-7)

# "அஸ்பெஸ்டோஸ்" கூரைத் தகடு தடையை இரத்துச் செய்ய முடிவு

(கொழும்பு)

"அஸ்பெஸ்டோஸ்" (asbestos sheet) கூரைத் தகடுகளுக்கு விதிக்கப்பட்டிருந்த தடையை இரத்துச் செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் 2018 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் "அஸ்பெஸ்டோஸ்" கூரைத் தகடுகளின் உற்பத்தி மற்றும் இறக்குமதிகளுக்கு தடை விதிக்க அமைச்சரவை மேற்கொண்ட தீர்மானம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போது இவ்வாறு இரத்துச் செய்வதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1284

Search for people, places and things

| மலர் | தாசன் | பிரேமா |
|---|---|---|

அண்ணே எனக்கொருடவுட்டு? என்ரா? மீன்பிடிக்கிறவன் யாரண்ணே? மீனவன்!



அப்போ திருடனைப் பிடிக்கிறவன் யார் அண்ணே?

உங்க பக்கத்து வீட்டுப் பெண் தீபாவை எங்க பையனுக்கு கேட்கலாம்னு இருக்கோம், பொண்ணு எப்பிடி தம்பி?



நான் காதலிச்ச வரைக்கும் அந்தப் பொண்ணு நல்ல பொண்ணுதான் சேர்

நகத்த கடிச்சு வீட்டுக்குள்ள துப்புனா வீடு விளங்காதாம்...



எதிரிய பழிவாங்க இன்னொரு ஐடியா கிடைச்சிருச்சு

| வண்ணக்கிளி | விஞ்சன் | ஜெனோவா |
|---|---|---|

ஆசிரியர்: யானை, எறும்பு இரண்டுல எது பெரியது?



அப்படி உடனே சொல்ல முடியாது சேர்.. பிறந்த திகதி சொல்லுங்க...



ஆயிரம் தான் இருந்தாலும் நம்ம ஆட்கள அடிச்சிக்கவே முடியாது

அதிர்ஷ்டம் கதவைத் தட்டும் பொழுது நாம வெளியூர் போயிருந்தா? என்ன பண்றது?



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



கரணவாய்,
அண்ணாசிலையடியைச் சேர்ந்த
**திரு.வெள்ளையன் சுப்பிரமணியம்**
அவர்கள் வடக்கு மாகாணத்தின்
உள்ளூராட்சி திணைக்கள
தலைமைப்பீட சனசமூக
அபிவிருத்தி உத்தியோகத்தராக
பதவி உயர்வு பெற்றமையையிட்டு
அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

**கரணவாய், அண்ணா சிலையடியைச் சேர்ந்த செல்வன் சுப்பிரமணியம் சுஜீவன் அவர்கள் (B.Sc, பொறியியலாளர்)**



10.10.2017 ஆம் திகதி அன்று கொழும்பு பண்டார நாயக்கா சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் B.Sc பொறியியலாளர் பட்டம் பெற்றமையையிட்டு அகமகிழ்ந்து பாராட்டுவதுடன் மேலும் பல பட்டங்கள் பெற்று மேன்மையுற இறைவனை வேண்டுகின்றோம்.

**வாழ்த்துவோர்:**
சி.சிவபாதம் குடும்பம் :- அண்ணாசிலையடி
சி.தர்மகுலசிங்கம் குடும்பம் :- அண்ணாசிலையடி
ஆ.மகேந்திரன் குடும்பம் :- அண்ணாசிலையடி
இ.நடராசா குடும்பம் :- செல்வாபுரம்
மா. உதயநாதன் குடும்பம் :- அண்ணாசிலையடி





# அம்பாள் சக்திபீடத்தின் சோதிட சேவை



தியானத்தின் போது விசேட அருள் வாக்கு

நேரம் :- காலை :- 8.30 மணி - 10.00 மணி, மாலை :- 5.00 மணி - 7.00 மணி

**மனதில் உள்ள எல்லாப் பிரச்சினைகளும் மிகச்சிறந்த முறையில் தீர்த்து வைக்கப்படும்**

நூல் கட்டுதல், வியாபார பூசை, பார்வை பார்த்தல், கால சர்ப்ப தோசபூசை, சோதிடம் பார்த்தல், வீட்டுச்சாந்திப் பூசை, பலன்பார்த்தல், நவக்கிரக பூசை, கைரேகை பார்த்தல்



வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணலிங் கேஸ்வரர் கண்ணகை அம்மன் ஆலயத்தில் அம்மனைச்சுற்றி நாகம் காட்சியளித்த போது...

- கலத்திர தோச பூசை
- செவ்வாய் குற்ற பூசை
- திருமண தடங்கல் நிவர்த்தி செய்தல்
- திருமணமாகி குழந்தைப் பாக்கியம் இல்லா தவர்களுக்கு அதை நிவர்த்தி செய்யும் விசேட பூசை

**T.P :- 077 123 4047 / 021 3141 217**

அம்பாள் உபாசகர் வேட்டை வித்தகர்
**சிவ பிரம்ம ஸ்ரீ குகனேந்திரக் குருக்கள்.**

குறிப்பு :- விஷேட அருள்வாக்கு கேட்க வரும்போது கற்பூரம், விபூதி, தேங்காய்யெண்ணை முதலியன கொண்டுவரவும்.

**கண்ணகி அம்மன் ஆலயம்**
**இடம் :- மூளாய் வீதி, வட்டுக்கோட்டை**



# நத்தார் புது வருடத்தை முன்னிட்டு

# மாபெரும் மலிவு விற்பனை

நாவலர் வீதியில் அமைந்துள்ள...

# JAMUNA FURNITURE

Sale **MEGA SALES**






39900/- இலிருந்து




- நீங்கள் வாங்கும் ஒவ்வொரு SOFA செற்றிகளுடனும் 7500/- பெறுமதியான Glass Coffee Table இலவசம்
- நீங்கள் வாங்கும் ஒவ்வொரு மெத்தைகளுடனும் ஒரு தலையணை இலவசம்
- 25000/- இற்கு மேற்பட்ட பெறுமதியான பொருட்களை கொள்வனவு செய்தால் இலவசமாக விநியோகசேவை (Home Delivery) செய்யப்படும்.
- Damro, Piyestra, Nilkamal, Phonix, Arpico ஆகியவற்றின் உற்பத்திப் பொருட்களையும் பெற்றுக் கொள்ளலாம்.




**JAMUNA FURNITURE**
181, Navalar Road, Jaffna.
TP: 021 2221092, 0777574776

விடுமுறை நாட்களிலும் (ஞாயிற்றுக்கிழமை) எமது நிலையம் திறந்திருக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.




# தந்தனத்தோம் என்று சொல்லியே...

தந்தனத்தோம் என்று சொல்லியே... வில்லிசை பாட துணை தந்தருள்வாய் கணபதியே!

என்று வில்லில் இசை மீட்டி பாட்டு ஆரம்பித்து விட்டால் போதும். அதுவரை ஆரவாரத்துடன் கூடி ஊர்க்கதைகள் பேசிய அனைவரும் அமைதியுடன் மேடையைப் பார்த்த வண்ணமிருப்பர். கதை சொல்லும் போது நாடகப்பாங்குடன் கதை சொல்லும் முறையினாலும், நவரசங்களை ஏற்படுத்தி நடிக்கும் தன்மையினாலும், அந்தக் கதையை விளக்குவதற்கு நகைச்சுவையைச் சேர்த்து சுவாரஸ்யமாகக் கதை சொல்லும் முறையினாலும், அந்த மூன்று மணித்தியாலங்கள் வரை அவையிலுள்ள மக்கள் அனை வரையும் வில் லிசையில் ஒன்றிக்கச் செய்திருப்பார் சின்னமணி எனும் புனைப்பெயரை உடைய கலாவினோதன் நா. கணபதிப்பிள்ளை.

அன்று ஈழத்தமிழகத் தின் பெரும்பான்மையான இடங்களில் மின்சாரமில்லை, நவீன சாதனங்களில்லை, பொழுதுபோக்கு சினிமாக்கொட்டகைகளில்லை. இதனால் பகல் நேர வேலைகளை மட்டுமே பிரதானமாகக் கொண்டிருந்த மக்களின் பொழுது போக்கை பெருமளவு நிவர்த்தி செய்யும் வகையில் இரவு வேளைகளில் ஆலயங்கள் மற்றும் வேறு நிகழ்வுகளில் நம் பண்பாட்டை மிளிரச்செய்யும் கலை நிகழ்வுகள் இடம் பெறும். அதில் சின்ன மணி ஐயாவின் வில்லிசைக்கு தனியிடமுண்டு. அவரது வில்லிசையை ரசித்துக்கேட்க தனி ரசிகர் கூட்டமே உண்டு. படித்தவர் முதல் பாமரர் வரை அனைவரும் புரிந்து கொள்ளும் வகையில் வில்லிசையை நிகழ்த்துவார்.

கலை நிகழ்வு நடைபெறும் அன்று திருவிழாவாகக் கொண்டாடப்படும். அனைவரும் வெடி, மத்தாப்புக் கொளுத்தி மகிழ்வர். அன்று அக் கிராமப் பாடசாலைகளுக்கு விடுமுறை. அக்கிராம மக்கள் மட்டுமன்றி அயற்கிராம மக்களும் நடந்தும், துவிச்சக்கர வண்டிகளிலும், கூடாரம் கட்டிய இரட்டை மாட்டு வண்டில்களிலும் தாம் உண்பதற்குரிய உணவுகள், வறுத்த கச்சான், கடலை, பலகாரங்கள் எனப் பல நொறுக்குத்தீனிகள், மாடுகளுக்குரிய இரைகள், பாய்கள், போர்வைகளுடன் குடும்பமாக வருவார்கள். அயற் கிராமங்களிலிருந்து வருபவர்கள் பெரும்பாலும் அக்கிராமத்தின் உறவினர்களாகவே இருப்பார்கள். இதனால் அன்று விருந்தோம்பி சுகம், விடயங்கள் பல பரிமாறி தமது உறவையும் வளர்த்துக்கொள்வர். அனைவரும் நிலா வெளிச்சத்தில் அழகாக அரங்கேறும் நிகழ்ச்சியின் நடுவே தாம் எடுத்து வந்த நொறுக்குத் தீனிகளை உண்ட வண்ணம் வில்லிசையைப் பார்த்து ரசிப்பர். ஒரு நிகழ்வு முடிந்து அடுத்த நிகழ்வு ஆரம்பிப்பதற்கு இடையில் இடைவேளை விடப்படும். அதன்போது சிலர் தாம் கொண்டு வந்த உணவுகளை இருந்த இடத்திலேயே பாயில் இருந்து உண்டார்கள். ஒரு சிலர் வண்டிகள் கட்டி நிற்கும் மரங்களுக்குக் கீழே மாடுகளுக்கும் இரை போட்டு விட்டு அங்கேயே ஒன்றாகக் கூடி மகிழ்ச்சியாக உண்பார்கள். இந் நிகழ்வுகள் இன, மத, சாதி பேதங்களைக் கடந்து அனைவரையும் ஒன்றிணைத்தன. உறவு முறையிலான உணர்வினை ஏற்படுத்தும் ஒன்றுகூடலாகவும் அமைந்தன.

சின்னமணி ஐயாவின் ஆற்றுகைகள் வெறுமனே இலக்கியங்கள் சார்ந்தனவாகவோ இதிகாசங்கள் சார்ந்தனவாகவோ இல்லாது யதார்த்த பூர்வமான சிந்தனைகளை ஊட்டும் கதைகளாகவும் இருந்தன. புராண இதிகாசக் கதைகளாக இருந்தாலும் அவை இன்றைய சமூகத்துக்கு என்ன சொல்கின்றது என்பதை இன்றைய சில சந்தர்ப்பங்களுடன் ஒன்றிணைத்துச் சொல்லும் தன்மையைக் கொண்டிருந்தன. இதனால் அதைப் பார்க்கின்ற மக்கள் அன்றைய கால வரலாற்றை சொல்கின்றார் என்ற எண்ணமின்றி இன்று வாழ்ந்து கொண்டிருக்கின்ற எங்களுக்கு இது பொருந்தும் என்ற நோக்கோடு பார்க்கும் தன்மை இருந்தது. இதனால் மக்கள் அதனை அமோகமாக வரவேற்றனர்.

'வில்லிசை பல நல்ல உபதேசங்களை வழங்கும் கலையாக விளங்கியது. அக் கருத்துக்களை மக்கள் நம்பி அவற்றின் மூலம் நல்ல உபதேசங்களைப் பெற்று வாழ்க்கையிலும் அன்பு, இரக்கம், நேர்மை என்பவற்றைக் கடைப்பிடிக்கும் நல்ல சமுதாயமாக வாழ்ந்தனர். ஆனால் இன்று நாம் நமது அரிய பெரிய கலைப்பொக்கிஷங்களை நாளாந்தம் இழந்து கொண்டிருக்கின்றோம். இன்றைய தலைமுறையினர் வில்லிசை என்றால் என்ன? எனக் கேட்கும் நிலைக்குத் தள்ளப்பட்டு வருகின்றனர். இறக்கும் வரையில் தனக்கென ஓர் வாசகர் கூட்டத்தைக் கொண்டிருந்த சின்னமணி ஐயாவின் இழப்பிற்குப் பின்னர் அவரது வில்லிசைக்குழுவின் பயணம் பற்றிய தேடலின் விளைவாக, கலைவாணர் வில்லிசைக்குழுவில் சின்னமணி ஐயாவுடன் பதினெட்டு வருடங்கள் ஒன்றாகப் பயணித்தவரும் யாழ். வைத்தீஸ்வரா கல்லூரியின் உடற்கல்வி ஆசிரியருமான நாகராஜா மதியழகன் கூறுகிறார்.

'கே.என். கணபதிப்பிள்ளை வில்லிசை என்பதற்கு வரைவிலக்கணம் கூறக்கூடிய வகையில் வில்லிசையை நிகழ்த்தியிருக்கின்றார். சுவிஸ், கனடா, சிங்கப்பூர், மலேஷியா எனப் பல நாடுகளிலும் சென்று ஆற்றுகையை நிகழ்த்தி வில்லிசையை வளர்த்துப் பல பட்டங்களைச் சூடிக் கொண்ட மாபெரும் கலைஞராக உலகம் பூராகவும் அறியப்பட்டவர். சின்னமணி ஐயாவின் ஊர்க் கோயிலான அச்சுவேலி உலவிக்குளம் பிள்ளையார் கோயிலில் 2013.07.12 அன்று அவருடைய அனுசரணையில் அவர் முன்னிலையில் அவர் சார்பாக அரங்கேற்றத்தை நிகழ்த்தி அதன் பிறகு கலைவாணர் சின்னமணியின் சிஷ்யர் என்கின்ற ரீதியில் கலைவாணர் வில்லிசைக் குழுவில் வில்லிசையை நிகழ்த்தி வருகின்றேன்.

அன்று வில்லிசை நீண்ட நேரம் இடம்பெற்றாலும் சின்னமணி ஐயாவின் கதை சொல்லும் முறையால் மக்கள் அடக்கமாக இருந்து சுவாரஸ்யமாக வில்லிசையைப் பார்ப்பார்கள். ஆனால் இன்று ஒரு வில்லிசை இரண்டு, ஒன்று, அரை மணித்தியாலங்கள் என குறுகிக் கொண்டே செல்கின்றது. இதற்குக் காரணம் எம் வாழ்க்கை முறை வெகுவாக மாறுபட்டுக்கொண்டிருப்பதே ஆகும்.

இலங்கையில் பல இனங்கள் இருந்தாலும் குறிப்பாக தமிழ் இனத்தைச் சார்ந்த நாம் இந்திய திரைப்படங்களுக்கும் தொடர் நாடகங்களுக்கும் அடிமைப்பட்டவர்களாக இருக்கின்றோம். இது முற்றிலும் உண்மையான கருத்து. ஏனென்றால் நாம் சிங்கள இன மக்களை எடுத்துப்பார்த்தால் அவர்கள் தம் கலைகளுக்கு மதிப்பளித்து மார்தட்டி சொல்லும் வகையில் தம் கலைத்துவங்களை வெளிப்படுத்தும் நிகழ்ச்சிகளை தொலைக் காட்சிகளில் போடுகின்றார்களே தவிர இந்திய திரைப்பட நாடகங்களுக்கு முன்னுரிமை அளிப்பதில்லை.

ஆனால் நம் ஆலயத் திருவிழாக்களில் இங்கே இருக்கின்ற கலைஞர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்கின்ற தன்மையை விடுத்து இந்தியக் கலைஞர்களுக்கு அதிகளவிலான பணத்தினை செலவழித்து இங்கே கொண்டு வந்து ஆற்றுகைப்படுத்துகின்ற நிலைமை காணப்படுகின்றது. இவை ஏதோ ஒரு வகையில் நம் கலைத்துவங்களை சிதைப்பனவாகவே அமைகின்றன. உள்நாட்டு யுத்தங்களினால் ஏற்பட்ட இடப்பெயர்வுகளும் நம் கலைகள் சிதறுண்டு போகக் காரணமாக அமைந்தன.

புலம்பெயர் நாடுகளில் இருக்கின்றவர்கள் தமது நிகழ்வுகளில் நமது பாரம்பரியக் கலை நிகழ்வுகளையும் உள்ளடக்கி வருவதோடு நமது கலைஞர்களுக்கும் அமோக வரவேற்பளிக்கின்றனர். ஆனால் இங்கே இருக்கின்ற எம்மால் அது ஏன் முடியவில்லை? இன்று நம் உறவினர்கள் தொலைக்காட்சியை ஒரு மணி நேரம் கூட நிறுத்தி விட்டு பிள்ளைகளின் கற்றலுக்காக நேரம் ஒதுக்கத் தயாராக இல்லை. அப்படியிருக்கையில் எவ்வாறு ஆலயங்களில் நிகழும் நம் நிகழ்விற்கு வருவார்கள் என்பது கேள்விக்குறியே!

இன்று நம் வாழ்க்கை முறை இயந்திரமயமாக்கப்பட்டுவிட்டது. பெரியளவிலான ஒரு விபரத்தை நேரம் கொடுத்துப் பார்க்க எவரும் தயாராக இல்லை. இந்நிலையில் நம் பிரதான நோக்கம் பணம் ஈட்டுவதாகவே இருக்கின்றது. இதனால் நம் அடுத்த சந்ததியினருக்கு எதைக் கொடுக்க வேண்டும்? நம் பாரம்பரிய வாழ்வியற்செய்திகளையும் பண்பாட்டுப் பெருமைகளையும் உணர்த்துவதற்குரிய ஆதாரங்களாக விளங்கும் வில்லிசை போன்ற நம் கலைத்துவங்களை எவ்வாறு அடுத்த சந்ததியினருக்குக் கொண்டு செல்வது? என்கின்ற சிந்தனை அற்றவர்களாக இருக்கின்றோம். கலைஞர்கள் மட்டும் கலைகளை வளர்த்திட முடியாது. பார்வையாளர்களாகிய நமது பாங்கும் மிக அவசியம். நாம் தொலைத்தவை சின்னமணி ஐயா போன்ற மாபெரும் கலைஞர்களை மட்டுமல்ல கலை ரசனை மிக்க பார்வையாளர்களையுமே!

துரைசிங்கம் பிரசாந்தினி
நான்காம் வருட மாணவி
ஊடகக்கற்கைகள்
யாழ்.பல்கலைக்கழகம்.

## உண்மையுடன் சேவையாற்றும் "வலம்புரி"

பத்தொன்பதாவது அகவையில் காலடி எடுத்து வைக்கும் "வலம்புரி" பத்திரிகை மேலும் நீடூழி காலம் எம் இல்லப் பிள்ளைகளும் பணிப்பாளர் குழுவும் இணைந்து பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம், எமது இல்லம் பற்றியும் இல்லப்பிள்ளைகள் பற்றியும் உண்மைத்தன்மையினையும் எமது அரும் பணியினையும் வெளிக்கொணரும் ஒரேயொரு தினசரிப் பத்திரிகை "வலம்புரி" என்பதனையும் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். வலம்புரியின் நடுநிலை தவறாத பண்புகள் பலராலும் பாராட்டப்படுகின்றது. நாமும் அதனை மகிழ்வுடன் ஏற்றுக்கொள்கின்றோம். கட்சி, பேதம் பாராமல் உள்ளதனை உள்ளவாறே சொல்லும் இவ்வதிசய பண்பு எல்லோராலும் பாராட்டப்படுகின்றது. நாமும் பாராட்டுகின்றோம். எனவே இவ் வலம்புரி பத்திரிகை பன்னெடுங் காலம் சிறப்புடன் செயலாற்ற எமது பிள்ளைகளும் நாமும் பிரார்த்திக்கின்றோம்.

பொன்.நித்தியானந்தம் மகாதேவா சுவாமிகள்
சிறுவர் இல்லம் ஜெயந்திநகர், கிளிநொச்சி.

## ஆதீன சமயப் பிரசாரகரின் வாழ்த்துச் செய்தி!



யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவருகின்ற பத்திரிகைகளில் வலம்புரிக்கு நிகர் வலம்புரியே! நல்ல பத்திரிகைக்கு இலக்கணமாக உண்மை, நேர்மை, அஞ்சாமை ஆகியனவற்றை அடிப்படையாகக் கொண்டு அழகுடன் வெளிவருகின்ற "வலம்புரி" நாளிதழ் இனி வருங்காலத்தில் புதுப்பொலிவுடன் திகழ்ந்து நம்முடைய கரங்களை அலங்கரிக்க வேண்டுமென்று எல்லாம் வல்ல நல்லைக் கந்தப் பெருமானை உள நலத்துடன் வேண்டுதல் செய்து பிரார்த்தித்து வாழ்த்தி மகிழ்கின்றோம். புதிய ஆண்டில் காலடி பதிக்கும் வன்னித்தமிழரின் வாழ்த்துப் பெற்ற "வலம்புரி" நலமுடன் திகழ இறையருளை நாடி திருவருளை முன் வைத்து வாழ்த்தி மகிழ்கின்றோம்.

யாழ்ப்பாணப் பத்திரிகைகளில் ஜனங்களின் மனங்களில் இடம்பிடித்து முன்னணியில் திகழும் தேசாபிமானப் பத்திரிகையான "வலம்புரி" நாளிதழ் இனிமேல் எல்லோரது உள்ளங்களிலும் நீங்காத இடம்பெற்று நவீன மயமாகி நலமுடன் திகழ வண்ணை வைத்தீஸ்வரன் பொற்கமல பாதம் பணிந்து வாழ்த்துகின்றோம். நாளும் பொழுதும் நலமுடன் திகழ இறையருளை நாடித் துதித்துத் திருவருளைப் பிரார்த்தித்து ஆசிகள் நல்கிப் பணிந்து வாழ்த்துகின்றோம். வலம்புரியானது பத்திரிகா தர்மத்துடன் நாதம் எழுப்பி ஒலிபரப்பட்டும்!

"நன்றே புரிந்து என்றும் இன்றுபோல் வாழ்க"!

இராசையா ஸ்ரீதரன்
ஆதீன சமயப் பிரசாரகர் "தெய்வத் தமிழர் சுடர்"

# தேயிலை இறக்குமதித் தடை விரைவில் நீங்கும் ரஷ்யாவுக்கான இலங்கைத் தூதுவர் நம்பிக்கை

(கொழும்பு)

இலங்கையின் தேயிலையை இறக்குமதி செய்வதற்கு ரஷ்யா விடுத்துள்ள தற்காலிகத் தடையை விரைவில் நீக்கிக் கொள்ள முடியும் என்று ரஷ்யாவுக்கான இலங்கைத் தூதுவர் சமன் வீரசிங்க தெரிவித்துள்ளார்.



இலங்கையில் இருந்து இறக்குமதியான தேயிலைத் தொகை ஒன்றில் வண்டு ஒன்று கண்டறியப்பட்டதால் இலங்கையில் இருந்து தேயிலை இறக்குமதிசெய்வதை தடைசெய்வதாக ரஷ்யா அறிவித்திருந்தது. இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (இ-8)

## மனோவிடம் பிறந்தநாள் பரிசு கோரினார் பிரதமர்

(கொழும்பு)

கொழும்பு மாநகர சபைக்கான தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதற்கு அமைச்சர் மனோகணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணி தீர்மானித்திருந்த போதிலும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிடுமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார்.

அமைச்சர் மனோ கணேசனின் பிறந்த தினம் கடந்த 17 ஆம் திகதியாகும். அன்று காலை மனோகணேசனுடன் தொலைபேசியில் உரையாடிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பிறந்த நாள் வாழ்த்துக்களைத் தெரிவித்ததுடன் தனக்கு பிறந்த நாள் பரிசு வழங்குமாறு அமைச்சரிடம் கோரியுள்ளார். உள்ளூராட்சித் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிடுவதற்கான சம்மதத்தை பிறந்த நாள் பரிசாக தனக்குத் தருமாறு பிரதமர் கோரியுள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இந்தக் கோரிக்கையை அடுத்து அன்றைய தினம் இரவு அமைச்சர் மனோ கணேசன் பிரதமரை சந்தித்து கலந்துரையாடியுள்ளார். கடந்த 18 ஆம் திகதி இரவும் மீண்டும் இவ்விடயம் குறித்து கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டணி அமைத்து போட்டியிடுவது குறித்து தமிழ் முற்போக்குக் கூட்டணி பேச்சுவார்த்தை நடத்தியிருந்தது. இதன்போது தொகுதிப் பங்கீடு விடயத்தில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் கோரிக்கைக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிநிதிகள் உரிய இணக்கப்பாட்டைத் தெரிவி த்திருக்கவில்லை. இதனால் இந்தப் பேச்சில் இழுபறி நிலை ஏற்பட்டிருந்தது.

இதனையடுத்து கொழும்பு மாநகர சபைக்கான தேர்தலில் தமிழ் முற்போக்குக் கூட்டணி ஜனநாயக மக்கள் முன்னணியின் சின்னமான ஏணிச் சின்னத்தில் தனித்து களமிறங்குவதற்கு முடிவு செய்திருந்தது. தனித்துப் போட்டியிடுவதற்கான ஆயத்தங்களை முன்னணியின் தலைவரும் அமைச்சருமான மனோ கணேசன் மேற்கொண்டிருந்தார்.

இந்த நிலையில்தான் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமைச்சர் மனோகணேசனுடன் தொடர்பு கொண்டு ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிட வருமாறு மீண்டும் அழைப்பு விடுத்திருக்கிறார். தனக்குப் பிறந்த நாள் பரிசு வழங்குமாறும் அவர் கோரியிருக்கின்றார்.

இதனையடுத்து ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிடுவது தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சுக்கள் தொடர்ந்து வருகின்றன. தொகுதிப் பங்கீட்டில் இணக்கம் காணப்பட்டால் தமிழ் முற்போக்குக் கூட்டணி கொழும்பில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிடும். இல்லையேல் தனித்து ஏணிச் சின்னத்தில் களமிறங்கும் என்று கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-8)

## ஒரு வகை வைரஸ் தொற்று ரஜரட்டை பல்கலைக்கழகத்தின் மிஹிந்தலை வளாகத்திற்கு பூட்டு

(கொழும்பு)

ஒரு வகை வைரஸ் காய்ச்சல் தொற்று காரணமாக ரஜரட்டை பல்கலைக்கழகத்தின் மிஹிந்தலை வளாகம் மூடப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் முதல் எதிர்வரும் 26 ஆம் திகதி வரை ரஜரட்டை பல்கலைக் கழகத்தின் மிஹிந்தலை வளாகத்தின் நான்கு பீடங்களும் தற்காலிகமாக மூடப்படுவதாக நிர்வாகம் மேலும் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் பல்கலைக்கழக விடுதிகளில் தங்கியிருக்கும் அனைத்து மாணவர்களும் நேற்று முன்தினம் மாலை 4 மணிக்கு முன்னர் அங்கிருந்து வெளியேறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (இ-8)

# அமெரிக்காவில் ரயில் தடம்புரள்வு

## 6 பேர் பலி; 100 பேர் படுகாயம்!



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் வோஷிங்டன் மாகாணத்தில் ஆம்ட்ராக் ரயில் பெட்டிகள் வீதியில் கவிழ்ந்து விழுந்ததால் 6 பேர் பலியாகியுள்ளதாகவும், 100 பேர் படுகாயமடைந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவின் வோஷிங்டன் மாகாணத்தில் ஆம்ட்ராக் ரயில்வே நிறுவனம் செயற்பட்டு வருகிறது. ஆம்ட்ராக் என்பது அமெரிக்காவில் பொது நிதியில் இயக்கப்படும் ஒரு ரயில்வே நிறுவனம்.

சியாட்டில் பகுதியில் இருந்து போர்ட்லாண்ட் பகுதிக்கு கடந்த 18 ஆம் திகதி ஆம்ட்ராக் ரயில் சென்று கொண்டிருந்தது. அந்த ரயிலில் 175 பயணிகள் மற்றும் 5 ஊழியர்களும் பயணம் செய்தனர்.

சியாட்டிலில் இருந்து புறப்பட்ட சிறிது தொலைவில் ஆம்ட்ராக் ரயில் ஒரு பாலத்தின் மீது சென்று கொண்டிருந்தது. அப்போது அந்த ரயில் திடீரென தடம்புரண்டது. இந்த விபத்தில் ரயிலின் 5 பெட்டிகள் தேசிய நெடுஞ்சாலையில் கவிழ்ந்து விழுந்தன. இதனால் அங்கு கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

தகவலறிந்து அங்கு மீட்புப் படையினர் விரைந்து சென்றனர். தடம்புரண்ட ரயில் பெட்டிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். போக்குவரத்து நெரிசலை சீர்செய்தனர்.

இதுகுறித்து அதிகாரிகள் கூறுகையில், ரயில் தடம்புரண்ட விபத்தில் 6 பேர் பலியாகியுள்ளதாக முதற்கட்டமாக தெரிய வந்துள்ளது. மேலும் படுகாயம் அடைந்து ரயில் பெட்டிகளில் சிக்கியுள்ளவர்களை மீட்டு அருகிலுள்ள வைத்தியசாலையில் சேர்த்து வருகிறோம். இதில் பலரது நிலைமை கவலைக்கிடமாகவுள்ளதால் பலி எண்ணிக்கை அதிகரிக்கும் என தெரிவித்துள்ளனர்.

விபத்து ஏற்படுவதற்கு முன்பு அந்த ரயில் மணிக்கு 130 கிலோ மீற்றர் வேகத்தில் சென்றதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (இ-8)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 140 | 110 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 120 | 80 | 70 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 400 | 400 | 300 |
| தக்காளி | 140 | 160 | 140 | 160 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 30 | 50 | 40 | 40 |
| கோவா | 120 | 160 | 140 | 120 | 120 |
| கரட் | 160 | 220 | 180 | 200 | 160 |
| பூசணி | 80 | 60 | 60 | 60 | 50 |
| புடோல் | 80 | 100 | 120 | 120 | 120 |
| வாழைக்காய் | 60 | 100 | 80 | 120 | 70 |
| சின்ன வெங்காயம் | 350 | 400 | 400 | 500 | 300 |
| பெரிய வெங்காயம் | 160 | 200 | 160 | 160 | 220 |
| பாகற்காய் | 250 | 400 | 200 | 300 | 250 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 120 | 160 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 | 80 | 80 | 50 |
| பயற்றங்காய் | 100 | 100 | 80 | 120 | 160 |
| லீக்ஸ் | 250 | 300 | 280 | 300 | 200 |
| பீற்றூட் | 150 | 200 | — | 200 | 120 |
| கறிமிளகாய் | 230 | 400 | 240 | 280 | 250 |
| முருங்கைக்காய் | — | — | — | 400 | — |
| போஞ்சி | 150 | 250 | 220 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 80 | 60 | 80 | 100 | 100 |
| கீரை - 1 பிடி | 50 | 50 | 100 | 50 | 30 |
| தேசிக்காய் | 80 | 30 | 60 | 80 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 100 | 80 | 75 | 100 |
| இராசவள்ளி | 250 | 400 | — | 300 | 500 |
| வெங்காயப்பூ | 350 | — | — | — | — |
| முள்ளங்கி | 120 | — | 120 | 120 | 100 |
| பொன்னாங்காணி | 30 | 50 | 50 | 40 | 30 |
| வல்லாரை | 20 | 20 | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | 80 | 50 | — | 100 | 80 |

> நம் தவறுகளை நாமே உணர்ந்து கொள்வதைவிட உயர்ந்த மனத் துணிவு வேறு கிடையாது.
> ~ ஸ்ரீ அன்னை

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## எமதருமை இளைஞர்களே! நீங்கள் மனம் வைத்தால்...

அன்புக்குரிய இளைஞர்களே! எங்கள் இனத்தின் எதிர்காலச் சிற்பிகளே! இந்த மடல் உங்களுக்கானது. உங்கள் சகோதரன் எழுதுவது.

நேற்றைய தினம் வலம்புரியின் 18ஆவது ஆண்டு நிறைவு. பலரும் தமது மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்திருந்தனர். பெரியவர்களின் ஆசியும் வாழ்த்தும் எங்களை வாழ வைக்கும் என்பது நிறுதிட்டமான உண்மை.

18 நாட்கள் நடந்த குருசேத்திரப் போரில் கௌரவர் பக்கம் வீஷ்மர் தலைமை தாங்கி நிற்கிறார். பண்டவர் சேனையின் தளபதி அருச்சுனன் போர்க்களத்தில் நிற்கும் வீஷ்மரிடம் சென்று அவர் பாதங்களைத் தொட்டு குருநாதா என்கிறான்.

அருச்சுனா! வெற்றி உனதாகட்டும் என்கிறார் வீஷ்மர். அருச்சுனன் போல துரியோதனனும் வீஷ்மர் போருக்குச் செல்லுமுன் அவர் பாதங்களைப் பற்றி குருநாதா! என்றிருப்பானாயின் துரியோதனா! உனக்கே வெற்றி கிடைக்கட்டும் என்று வீஷ்மர் வாழ்த்தியிருப்பார்.

என்ன செய்வது, என் படையின் தளபதி வீஷ்மர் நான் உத்தரவிட்டால் வீஷ்மர் போர்க்களம் செல்ல வேண்டும் என்பது துரியோதனனின் நினைப்பாக இருந்ததேயன்றி வீஷ்மர் மனம் வைத்தால்தான் போரில் வெற்றி கிடைக்கும் என்ற சங்கதியைத் துரியோதனன் முழுமையாக மறந்திருந்தான். அதனால் அவன் பெரியவர்களின் ஆசியைப் பெறுதல் என்பது பற்றி கிஞ்சித்தும் நினைத்திலன்.

எனவே பெரியவர்கள் இளைஞர்களை வாழ்த்த வேண்டும். பெரியவர்களை, முதியவர்களை இளைஞர்கள் எங்கு கண்டாலும் அவர்கள் மீது அன்பு செலுத்தி அவர்களுக்கு உதவி புரிந்து அவர்களின் ஆசியையும் வாழ்த்தையும் பெற்றுக் கொள்வது மிகவும் அவசியமானது.

இந்தப் பண்பாட்டை எங்கள் இளைஞர்கள் பின்பற்ற வேண்டும் என்பதும் அதற்கான தயார்படுத்தலைப் பாடசாலைகள் பழக்கிவிட வேண்டும் என்பதும் நம் தாழ்மையான கோரிக்கை.

இவை ஒருபுறம் இருக்க, நேற்றைய தினம் வலம்புரியை வாழ்த்திய பெரியவர்களில் வடமராட்சியைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி இளங்கோ அவர்கள் வலம்புரியிடம் ஒரு கோரிக்கையை முன்வைத்தார்.

அவரின் கோரிக்கை எங்கள் இளைஞர்களை ஆற்றுப்படுத்துங்கள், எங்கள் இளைஞர்கள் வாள் ஏந்தி நிற்பதைத் தடுத்து அவர்களை வழிப்படுத்துங்கள், அவர்கள் வாழ வேண்டும் என்பதாக அவரின் ஆதங்கம் இருந்தது.

அன்புக்குரிய இளைஞர்களே! இந்த உலகில் உங்கள் கண்கண்ட தெய்வங்கள் உங்கள் பெற்றோர்கள் என்பதை மறந்து விடாதீர்கள். நீங்கள் இல்லாத வாழ்வு அவர்களுக்கு இருள் மயமானது.

எனவே உங்கள் பெற்றோர்களின் வார்த்தைக்கு கட்டுப்படுங்கள். நட்பு என்பது மிகவும் அவசியமானது. நட்பின் பெருமை பற்றிப் பேசியவர்களுள் நம் தமிழ்ப் புலவன் வள்ளுவனை விட வேறு யாரும் முதன்மை பெற முடியாது.

நட்புப் பற்றிப் பேசிய வள்ளுவன் கூடா நட்பு என்ற அதிகாரத்தையும் தந்துள்ளார் என்பதை மறந்து விடாதீர்கள். உங்களோடு சேர்ந்து உங்கள் நண்பர்களையும் வழிப்படுத்துங்கள். கோழைத் தனத் தவிர்த்து உங்களை வழிமாற்றி, திசைமாற்றி பாழ்ங்கிணற்றில் வீழ்த்த நினைப்பவர்களின் வஞ்சகத்தை அறிந்து அவர்களை விட்டு விலகிச் செல்லுங்கள்.

கல்வியும் தொழில் முயற்சியும் ஆன்மீக சக்தியும் உங்களை வாழ வைக்கும் என்ற நினைப்போடு உங்கள் பயணத்தைத் தொடருங்கள். நீங்கள் மனது வைத்தால் வெற்றி உங்களுடையதாகும்.

# மாற்றத்தை ஏற்படுத்த வேண்டியதன் ஆரம்ப புள்ளியாக உள்ளூராட்சித் தேர்தல்

## சட்டத்தரணி சுகாஸ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசிய அரசியலிலே மாற்றத்தை ஏற்படுத்த வேண்டியதன் ஆரம்பப் புள்ளியாக இவ் உள்ளூராட்சி தேர்தலை பார்ப்பதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் வட்டுக்கோட்டை தொகுதி அமைப்பாளர் சட்டத்தரணி சுகாஸ் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் வலி. மேற்கு பிரதேச சபைக்கான வேட்புமனுவினை நேற்றைய தினம் தாக்கல் செய்த பின்னர் ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

2010ஆம் ஆண்டில் இருந்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியானது மாற்றத்திற்காக போராடி வருகின்றது என தெரிவித்துள்ள அவர், புதிய அரசியல் திருத்தம் கொண்டுவரப்படவுள்ள நிலையில் மாற்றத்தை ஏற்படுத்த ஆரம்பப் புள்ளியாக இதனைப் பார்க்கின்றோம்.

தமிழ் மக்களுக்கு துரோகம் செய்யும் தமிழ்த் தலைமைகளின் செயற்பாடு அத்துமீறி சென்று கொண்டிருக்கின்றது.

இந்நிலையில் இதற்கு மேலும் தமிழ் மக்கள் பொறுத்திருந்தால் தமிழ் மக்களை கடவுளாலும் காப்பாற்ற முடியாது.

அந்தவகையிலே வட்டுக்கோட்டை மண்ணானது வரலாற்று ரீதியான மாற்றத்தை ஏற்படுத்திய மண்ணாகும். தமிழீழ பிரகடனம் செய்த மண் ஆகும். ஆகவே தான் இந்த மாற்றமும் வட்டுக் கோட்டையில் இருந்து ஏற்படுத்தப்பட வேண்டும் என்றார்.(ம-4)

## மந்திகை பகுதியில் கொள்ளை

# சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவு

(கரணவாய்)

வடமராட்சி மந்திகைப் பகுதியில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டாவது சந்தேகநபர் கைது செய்யப்பட்டதுடன் அவரிடமிருந்த 20 ஆயிரம் ரூபாய் பணமும் மீட்கப்பட்டதாக பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த சனிக்கிழமை அதிகாலை 1.30 மணியளவில் மந்திகை – கொடிகாமம் வீதியில் உள்ள வீடு ஒன்றில் புகுந்த கொள்ளையர்கள் வயோதிபத் தம்பதியரின் கழுத்தில் வாளினை வைத்து அச்சுறுத்தி கொள்ளையிட்டுச் சென்றிருந்தனர்.

இது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸில் முறையிடப்பட்டிருந்தது.

இந்நிலையில் அன்று பிற்பகலே வல்வெட்டித்துறை பொலிஸாரால் இளவாலைப் பகுதியைச் சேர்ந்த நபர் கைது செய்யப்பட்டு அவரிடமிருந்த ஒரு சோடி தோடு மற்றும் 20 ஆயிரம் ரூபாய் பணம் என்பன மீட்கப்பட்டது.

தொடர்ந்து விசாரணையினை மேற்கொண்டு வந்த பருத்தித்துறை பொலிஸார் 19.12.2017 செவ்வாய்க்கிழமை மாலை துன்னாலைப் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவரைக் கைது செய்ததுடன் அவரிடமிருந்து 20 ஆயிரம் ரூபாய் பணத்தையும் மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட பணம் அவ் வீட்டில் கொள்ளையிடப்பட்டது என உறுதிப்படுத்தப்பட்டதாக பொலிஸார் கூறினர்.

இது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸாரால் தொடர்ந்தும் புலன் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கைது செய்யப்பட்ட நபரை நேற்று பருத்தித்துறை பதில் நீதிபதி பா.சுப்பிரமணியம் முன்னிலையில் முற்படுத்தப்பட்டபோது அவரை எதிர்வரும் 02.01.2018ஆம் திகதி வரைவிளக்கமறியலில்வைக்குமாறு உத்தரவிட்டார். (ம-60)

## புளொட்டின் முன்னாள் உறுப்பினர் ஜனவரி 2வரை விளக்கமறியலில்

(யாழ்ப்பாணம்)

துப்பாக்கிகள் உள்ளிட்ட ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்ட புளொட்டின் முன்னாள் உறுப்பினரை எதிர் வரும் ஜனவரி 2ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் சந்தேகநபரை பொலிஸார் நேற்று முற்படுத்தினர்.

அவருக்கு எதிராக குற்றவியல் சட்டத்தின் கீழ் முதல் அறிக்கையை பொலிஸார் தாக்கல் செய்தனர்.

விசாரணைகளை முன்னெடுத்த யாழ்ப்பாணம் நீதிமன்றப் பதில் நீதவான் வி.ரி.சிவலிங்கம், சந்தேக நபரை எதிர்வரும் ஜனவரி 2 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ம)

## தமிழர் விடுதலைக் கூட்டணி வவு.வில் வேட்புமனுத் தாக்கல்

தமிழர் விடுதலைக் கூட்டணி வவுனியாவில் நேற்று வேட்புமனுத் தாக்கல் செய்தது.

வவுனியாவில் உள்ளூராட்சி சபைகளில் வவுனியா நகரசபை, வவுனியா வடக்கு பிரதேச சபை, வெண்கல செட்டிகுளம் பிரதேச சபை என்பவற்றில் போட்டியிடுவதற்காகவே வவுனியா மாவட்ட செயலக தேர்தல் அலுவலகத்தில் இந்த வேட்புமனுவை தாக்கல் செய்தது.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வட மாகாண சபை உறுப்பினர் ம.தியாகராசா, இ.இந்திரராஜா மற்றும் வேட்பாளர்கள் எனப்பலரும் இதன்போது வருகை தந்தனர். (ம-250)

## தேங்காய்க்கான நிர்ணய விலை யாழ்ப்பாணத்திலும் நடைமுறை

(கொழும்பு)

தேங்காயின் நிர்ணய விலையான 75 ரூபாயுக்கு அதிகமாக அதனை விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ்ப்பாண அரச அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார்.

தேங்காயின் சில்லறை விலை 75 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டு அரச வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விலையைக்கு அதிகமாக உற்பத்தியாளரோ, இறக்குமதியாளரோ, பொதி செய்பவரோ அல்லது வியாபாரியோ விற்கவோ அல்லது காட்சிப்படுத்தவோ முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார். (ம)

## பொதுஜன பெரமுன கட்சி மன்னாரில் வேட்புமனு தாக்கல்

(மன்னார்)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மன்னார் மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக "சிறிலங்கா பொதுஜன பெரமுன" கட்சி நேற்று புதன்கிழமை மதியம் மன்னார் மாவட்டச் செயலகத்தில் வேட்பு மனுத்தாக்கல் செய்துள்ளது.

"சிறிலங்கா பொதுஜன பெரமுன" கட்சியின் வடமாகாணத்திற்கான அமைப்பாளரும், வடமத்திய மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சருமான எஸ். எம். ரஞ்சித் சமரகோன் தலைமையில் வேட்பு மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதன்போது மன்னார் நகர சபையின் முன்னாள் உறுப்பினர் எஸ்.டிலான், மன்னார் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் சிலுவை பீரிஸ் ஆகியோரும் சென்றிருந்தனர்.

வேட்பு மனுத்தாக்கல் செய்ய "சிறிலங்கா பொது ஜன பெரமுன" கட்சியின் முக்கியஸ்தர்கள் மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு வருகை தந்தபோது ஆதரவாளர்களும வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-4)

## மாவையின் மகனும் தேர்தலில்

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி தேர்தலில் மாவை சேனாதிராசாவின் புதல்வன் களமிறங்க உள்ளதாக தமிழரசுக் கட்சி தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராசாவின் மகன் கலையமுதன் போட்டியிடவுள்ளார். கடந்த காலத்தில் இந்தியாவில் தங்கி இருந்து கல்வி கற்று வந்த கலையமுதன் தற்போது நாடு திரும்பியுள்ளார்.

இவர் வலி.வடக்கு பிரதேச சபையில் போட்டியிடுகின்றார். வலி.வடக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் எஸ்.சுகிர்தன் மற்றும் முன்னாள் உப தவிசாளர் எஸ்.சஜீவன் ஆகியோரும் தமிழரசுக் கட்சி சார்பாக போட்டியிடுகின்றமை உறுதி செய்யப்பட்டு உள்ளதாக தமிழரசு கட்சி தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம)

# வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்

# பொது அறிவித்தல்-2018

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் எல்லைக்குள் வசிக்கும் பொதுமக்களும் மற்றும் வர்த்தக நிலைய உரிமையாளர்களும் அரச தனியார் நிறுவனங்களின் தலைவர்களும், எமது சபையால் நடைமுறைப்படுத்தப் படுகின்ற பின்வரும் நடைமுறைகளை பின்பற்றி சபையின் நிர்வாக நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி யுதவுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

| இல | விடயம் | அறிவித்தல் |
|---|---|---|
| 1. | ஆதன வரி செலுத்துதல் | 2018ஆம் ஆண்டிற்கான ஆதனவரியை மானிப்பாய் கிராமம் (ஆனைக்கோட்டை) மானிப்பாய் பட்டினம் (மானிப்பாய்). பண்டத்தரிப்பு கிராமம் (மாதகல்) பண்டத்தரிப்பு பட்டினம் (பண்டத்தரிப்பு) ஆகிய உப அலுவலகங்களில் செலுத்தி சபையின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு வரியிறுப்பாளர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். மேலும்<br>ஜனவரி 31ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துவோரிற்கு வருட மொத்த வரியில் 10% கழிவு வழங்கப்படும். ஒவ்வொரு காலாண்டிற்குமுரிய வரியை அந்த காலாண்டின் முதல் மாத முடிவிற்குள் செலுத்துவோரிற்கு காலாண்டு வரியில் 5% கழிவு வழங்கப்படும். |
| 2. | ஆதனப் பெயர் மாற்றம் செய்தல் | எமது சபை எல்லைக்குள் ஆதனங்களை கொள்வனவு செய்பவர்களும் ஏற்கனவே ஆதன உடமையினைக் கொண்டு எமது ஆதன இடாப்பில் பெயர்மாற்றத்தினை மேற்கொள்ளாதவர்களும் எமது உப அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு பெயர்மாற்றத்தினையும் ஆதனத்தில் பௌதீக மாற்றம் ஏற்படுத்தினால் ஆதனவகை மாற்றத்தினையும் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். |
| 3. | காணி உப பிரிவிடுதல் | எமது பிரதேச சபை எல்லைக்குள் அமைந்துள்ள ஆதனம் ஒன்றை துண்டங்களாக பிரிக்கும் போது எமது உபஅலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு உரிய ஆவணங்களை சமர்ப்பித்து காணி உப பிரிவிடுதலை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். |
| 4. | கட்டிட அனுமதி வழங்கல் | 1. பிரதேச சபையில் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து அனுமதி பெற்ற பின்னரே தங்கள் ஆதனத்தில் கட்டடங்கள், மதில்கள், முட்கம்பி வேலிகள், எல்லைத்தூண்கள், தொலைத்தொடர்பு கோபுரங்கள், மலசலகூடங்கள், குழாய்க் கிணறுகள் போன்றவற்றை அமைத்தல் அல்லது புதுப்பித்தல் அல்லது திருத்த வேலைகள் மேற்கொள்ளல் வேண்டும்<br>2.ஏற்கனவே அனுமதி பெற்று ஒரு வருட காலத்திற்குள் வேலை நிறைவேற்றாத பட்சத்தில் மேலும் கால நீடிப்பு அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டும்.<br>3.அனுமதி பெற்று கட்டடம் கட்டி முடிக்கப்பட்டமை தொடர்பாக அலுவலகத்திற்கு அறியத்தந்து குடியமர்வுச் சான்றிதழை பெற்றுக்கொள்ள வேண்டும்.<br>4. சபையின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் அரச, தனியார் கட்டடங்கள், மதில்கள், முட்கம்பி வேலிகள், எல்லைத்தூண்கள், தொலைத்தொடர்பு கோபுரங்கள், மலசலகூடங்கள், குழாய்க் கிணறுகள் என்பவற்றை அமைத்தல் அல்லது புதுப்பித்தல் அல்லது திருத்த வேலைகள் செய்தல் என்பன தண்டனைக்குரிய குற்றமாகும் |
| 5. | வீதி ஒழுங்கைப்பேணல் | எமது பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட அனைத்து வீதிகளின் (தரவேறுபாடின்றி) இருமருங்கிலும் எல்லை வேலி மற்றும் எல்லைச்சுவருக்கு வெளியே போக்குவரத்திற்கு இடையூறாக நாட்டப்பட்டுள்ள பூ மரக்கன்றுகள், மற்றும் புல்பூண்டுகள், அலங்கார சீமெந்துக்கட்டுக்கள் போன்றவற்றை அகற்றி துப்புரவாக வைத்திருக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.<br>அத்துடன் எமது பிரதேசத்தில் அதிகரித்த வாகனப்போக்குவரத்து காரணமாக நெரிசல்கள் அதிகரித்துள்ளது. எனவே விபத்தை தவிர்ப்பதன் நோக்கமாக வீதி ஒழுங்கைப்பேணும் சைகை குறியீட்டுப்பலகை முக்கிய இடங்களில் நிறுவப்பட்டுள்ளன. அவற்றை அனுசரித்து நடக்கும்படி பொதுமக்கள் தயவுடன் வேண்டப்படுகின்றனா். மீறுவோர் மீது பொலிசாரால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன். |
| 6. | வியாபார அனுமதிப் பத்திரம் -2017 | இப்பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர், நடமாடும் வாகன வியாபாரம், ஆட்டோத்தரிப்பிட அனுமதி மற்றும் எமது பிரதேசத்திற்குள் பொருள்களை விநியோகிப்போர் 2018 ஆம் ஆண்டிற்கான அனுமதிப்பத்திரத்தை பெறுவதற்கான விண்ணப்பப்படிவத்தை 2018ஆம் ஆண்டு ஜனவரி 31ஆம் திகதிக்குள் பெற்று அதனை பூரணப்படுத்தி உப அலுவலகங்களில் சமர்ப்பித்து உரிய கட்டணங்களை 31.03.2018ஆம் திகதிக்குள் செலுத்தி 2018ஆம் ஆண்டுக்குரிய வியாபார அனுமதி பத்திரத்தை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன் |
| 7. | துவிச்சக்கர வண்டி மற்றும் மிருக உரிமம் | 2018ஆம் ஆண்டிற்கான துவிச்சக்கரவண்டி மற்றும் மிருகங்களின் உரிமத்தை பங்குனிமாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். |
| 8. | சூழல் பாதுகாப்பு உரிமம் | மத்திய சுற்றாடல் அதிகார சபையின் 1980ஆம் ஆண்டின் 47ஆம் இலக்கத் தேசிய சூழல் பாதுகாப்பு சட்டத்தின் 26ஆம் பிரிவின் கீழ் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் அடிப்படையில் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் நிர்வாக பிரதேசத்தில் 1533/16 இலக்க 2008.01.22ஆம் திகதிய மற்றும் 1534 /18 இலக்க 2008.02.01 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானிப் பத்திரிகையில் விதந்துரைக்கப்பட்ட வியாபாரம் அல்லது தொழில்களுக்கு சூழல் பாதுகாப்பு உரிமம் வழங்கப்படுகின்ற பொறுப்பு எனக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆகவே சம்மந்தப்பட்டவர்கள் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் தலைமையலுவலகத்துடன் தொடர்பு கொண்டு சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்தினைப் பெற்றுக்கொள்ளவும், ஏற்கனவே உரிமத்தினைப் பெற்றுக்கொண்டவர்கள் உரிமம் காலாவதியாகியிருப்பின் அதனைப் புதுப்பிக்கவும் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். வலுவிலுள்ள சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் இல்லாமல் மேற்குறிப்பிடப்பட்ட தொழில்களை நடாத்தின் சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படுவதோடு தண்டப்பணமும் அறவிடப்படும் |
| 9. | படவரைஞர்களைப் பதிவு செய்தல் | 2018ஆம் ஆண்டு படவரைஞராக பதிவு செய்வதற்கு விரும்புவோரும், ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2018ஆம் ஆண்டு மார்ச் 31ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறும் புதுப்பித்துக்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றேன் மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் அறிந்து கொள்ள முடியும். |
| 10. | விளம்பரங்களை அமைத்தல் / காட்சிப்படுத்தல் | வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் நிர்வாக பிரிவிலுள்ள பொது வீதிகளின் இருமருங்கும் அத்துடன் வர்த்தக நிலையங்களின் முகப்புக்களிலும் பொருத்தப்படும் அல்லது காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்களுக்கான கட்டணத்தை 31.01.2018ஆம் திகதிக்கு முன் செலுத்தி சபையின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன. இவ்வாறு அனுமதி பெறப்படாத முகவர்கள் / நிறுவனங்கள் / வர்த்தக நிலைய உரிமையாளர்கள் போன்றோரது சகல விளம்பரங்களும் உரிய நிலையங்களிலிருந்து 01.02.2018ஆம் திகதிக்கு பின் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் |
| 11. | திண்மக் கழிவுகளை அகற்றுதல் | வீடுகள் வியாபார நிலையங்கள் அரச தனியார் நிறுவனங்கள் தமது ஆதனத்தில் நுளம்பு பெருகுவதற்கேதுவான சூழலை வைத்திருப்பது தண்டனைக்குரிய குற்றமாகும்/ கழிவுப்பொருட்களை பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட இடங்களில் அனுமதியின்றி கொட்டுதல் மற்றும் கொண்டு செல்லல் ஆகியன பொதுச்சுகாதாரத்தை கருத்திற்கொண்டு தடைசெய்யப்பட்டுள்ளது. எனவே அவற்றை தமது இடங்களிலேயே சூழலுக்குப் பாதிப்பற்ற வகையில் புதைத்தோ எரித்தோ சுத்தம் பேணுமாறு வேண்டப்படுகின்றீர்கள். அவ்வாறு அகற்றமுடியாதுள்ள கழிவுப்பொருட்களைத் தரம்பிரித்து. பிரதேசசபை உப அலுவலகங்களில் தொடர்பு கொண்டு அவற்றினை அகற்றிக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன் |
| 12. | நீர்வழங்கல் சேவை | பொதுமக்கள் மற்றும் வியாபார நிலையங்கள் அரச தனியார் நிறுவனங்கள் தமது விசேட நிகழ்வுகளிற்கு குடிநீர் தேவைப்படின் பிரதேச சபையில் கட்டணம் செலுத்தி குடிநீரைப் பெற்றுக்கொள்ள முடியும் |
| 13. | கனரக வாகன சேவை | மலக்கழிவு மற்றும் திரவக்கழிவுகள் அகற்றும் வாகனத்தின் (கலி பௌசர்) சேவை தேவைப்பட்டால் எமது உப அலுவலகங்களில் கட்டணம் செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும். வீதி உருளை வாடகைக்கு தேவைப்பட்டால் தலைமை அலுவலகத்தில் உரிய கட்டணம் செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும் |
| 14. | கலாசார மண்டபம் மற்றும்விளையாட்டு மைதானம் | பொதுமக்கள் மற்றும் வியாபார, அரச, தனியார் நிறுவனங்கள் தமது விசேட நிகழ்வுகளிற்கு பிரதேச சபையில் கட்டணம் செலுத்தி மண்டப வசதி மற்றும் விளையாட்டு மைதான இடவசதி என்பவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும் |
| 15. | பொதுப்பயன்பாட்டு சேவைகள் | எமது சபையினால் நிர்வகிக்கப்படும் நூலகங்கள், ஆயுர்வேத மருத்துவ நிலையங்கள் மற்றும் பாலர் பாடசாலை என்பன பொதுமக்கள் சேவையினை சிறப்பான முறையில் இலவசமாக வழங்கிவருகின்றன. எனவே அச்சேவைகளையும் முழுமையாக பெற்று பயனடையுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன் |
| 16. | மயானங்கள் | எமது பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட மயானங்களில் (இடுகாடு, சுடுகாடு) ஈமக்கிரியைகள் மேற்கொள்பவர்கள் எமது உப அலுவலங்களில் அனுமதி பெற்று ஈமக்கிரியைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். |

இவ் அறிவித்தல் தொடர்பான மேலதிக விபரங்கள், கட்டண விபரங்களை எமது உப அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம் என்பதையும் அறியத்தருகின்றேன்.

திரு. கு. சற்குணராசா,
செயலாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை
தொலைபேசி இல : 0213734341,0212255381

21.12.2017

(சி-770)

# பகிரங்க கேள்வி அறிவித்தல்-2018
# கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி

கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள சந்தைகள், இறைச்சிக்கடைகள் உள்ளிட்ட குத்தகை நிலையங்களை 2018.01.01-2018.12.31 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு விடுவதற்கான பகிரங்க கேள்விகள் கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக கோரப்படுகின்றன.

| விண்ணப்பப்படிவம் விநியோகிக்கப்படும் திகதி, நேரம் | பகிரங்க ஏலம் நடைபெறும் திகதியும், நேரமும். |
|---|---|
| திகதி:2017.12.21ஆம் திகதி முதல் 2017.12.26 ஆம் திகதி வரை, அலுவலக நாட்களில் மட்டும்<br>நேரம் : மு.ப.8.30 -பி.ப.3.00<br>இடம்:கரைச்சி பிரதேச சபை தலைமை அலுவலகம் | திகதி: 2017.12.27ஆம் திகதி, புதன்கிழமை<br>நேரம்: மு.ப.10.00 மணி<br>இடம்:கரைச்சி பிரதேச சபை மாநாட்டு மண்டபம். |

| இல | குத்தகை நிலையம் | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் (NBT நீங்கலாக, மீளளிக்கப்பட முடியாதது) | இழிவுக் கேள்வித் தொகை (NBT நீங்கலாக) |
|---|---|---|---|---|
| | சேவைச் சந்தை- கிளிநொச்சி. | | | |
| 01 | தராசுக்கொட்டகை - மீன் | 30,000.00 | 1,000.00 | 2,229,415.65 |
| | கிளிநகர்ப் பகுதி | | | |
| 01 | கரடிப்போக்கு சந்தியிலிருந்து டிப்போ சந்தி வரையான A.09 வீதி வாகனத் தரிப்பிடம் (முச்சக்கரவண்டி தரிப்பிடத்தை தவிர்த்து) | 10,000.00 | 1,000.00 | 405,000.00 |
| | பொதுச்சந்தை பரந்தன் | | | |
| 01 | மாட்டிறைச்சிக்கடை | 20,000.00 | 1,000.00 | 1,251,855.00 |
| | பொதுச்சந்தை வட்டக்கச்சி | | | |
| 01 | ஆட்டிறைச்சிக்கடை (இராமநாதபுரம்) | 10,000.00 | 1,000.00 | 81,000.00 |
| | பொதுச்சந்தை இரணைமடு | | | |
| 01 | தராசுக்கொட்டகை மீன், மரக்கறி, பழம், வெற்றிலை, பாக்கு, கருவாடு, முட்டை, துவிச்சக்கர வண்டி, மோட்டார் பாதுகாப்பு நிலையம் | 10,000.00 | 1,000.00 | 100,000.00 |
| 02 | மாட்டிறைச்சிக்கடை | 30,000.00 | 10,000.00 | 1,634,985.00 |
| | பொதுச்சந்தை உருத்திரபுரம் | | | |
| 01 | தராசுக்கொட்டகை மீன், மரக்கறி, பழம், வெற்றிலை, பாக்கு, கருவாடு, முட்டை | 10,000.00 | 1,000.00 | 50,000.00 |
| 02 | மாட்டிறைச்சிக்கடை (D.10) | 10,000.00 | 1,000.00 | 340,362.00 |
| 03 | கோழியிறைச்சிக்கடை (D.10) | 10,000.00 | 1,000.00 | 109,147.50 |
| | பொதுச்சந்தை தருமபுரம் | | | |
| 01 | தராசுக்கொட்டகை மீன், மரக்கறி, பழம், வெற்றிலை, பாக்கு, கருவாடு, முட்டை, துவிச்சக்கர வண்டி, மோட்டார் பாதுகாப்பு நிலையம் | 10,000.00 | 1,000.00 | 199,621.62 |
| 02 | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 417,879.00 |
| | கல்லாறு | | | |
| 01 | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 98,010.00 |
| | ஆனைவிழுந்தான் | | | |
| 01 | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 194,059.80 |
| | அக்கராயன் | | | |
| 01 | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 267,300.00 |

நிபந்தனைகள்.

1.விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் பகிரங்க ஏலத்திற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பதுடன் கேள்விதாரரின் பிரதிநிதியாக கலந்துகொள்பவர்கள் விண்ணப்பதாரரால் அனுமதிக்கப்பட்ட கடிதத்தினை தம்வசம் வைத்திருத்தல் கட்டாயமானதாகும்.

2.உரிய நேரத்தில் சமுகமளிக்காதவர்கள் கேள்வி கோரும் தகைமையற்றவர்களாக கருதப்படுவார்கள்.

3.கடந்தகாலக் கேள்விகள் மூலம் சபைக்கு நிலுவைகளை செலுத்த தவறியவர்களும், கறுப்புப்பட்டியலில் உள்ளவர்களும் குத்தகைக் கேள்விகளில் பங்குபற்றத் தகுதியற்றவர்கள்.

4.கேள்வியை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்பதற்கோ, நிராகரிப்பதற்கோ கேள்விச் சபைக்கு அதிகாரம் உண்டு.

5.கேள்விப் பத்திரம் பெற்றுக்கொள்ள வரும் போது தம் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் ஏற்றுக் கொள்ளத்தக்க ஆவணத்தின் நிழற்பிரதியினை (தேசிய அடையாள அட்டை அல்லது சாரதி அனுமதிப் பத்திரம்) கிராம சேவையாளர் மூலம் உண்மைப்பிரதி என சான்றுறுதிப்படுத்தி சமர்ப்பிப்பதுடன், கிராம சேவை யாளரால் வழங்கப்பட்ட வதிவிடத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழையும் சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

6.சித்தியடையும் கேள்விதாரர் கேள்வித் தொகையின் மூன்றில் ஒரு பகுதித்தொகையினை உடனடியாக செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும். குறித்த கேள்விதாரர் ஒப்பந்தத்திற்கு அமைவாக குத்தகை நிலையத்தை நடாத்தினால் குறித்த வைப்புத்தொகை புரட்டாதி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி மாதங்களின் குத்தகைப் பணமாக மாற்றம் செய்யப்படும்.

7.இறைச்சிக்கடைகள் மற்றும் சந்தைகள், குத்தகை நிலையங்கள் அனைத்தும் குத்தகைக்கு எடுப்பவ ராலேயே நடாத்தப்படல் வேண்டும். குத்தகைதாரர் தவிர்ந்த வேறு ஒருவரால் குத்தகை நிலையம் நடாத்தப் படின் உடனடியாக ஒப்பந்தம் இரத்துச் செய்யப்படுவதுடன் வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.

8.மாதாந்த குத்தகை கட்டணங்களை அம்மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துவது கட்டாயமா னதாகும். அக் கட்டணங்களில் எவற்றையாவது குறித்த கால எல்லைக்குள் கட்டத்தவறி அதன்பின் பத்து நாட்களுக்கு உட்பட்டு செலுத்தும் பட்சத்தில் கட்டுப்பணத்துடன் 10% தண்டப்பணத்தையும், காலதாமதம் பத்து நாட்களுக்கு மேற்படும் பட்சத்தில் 15% தண்டப்பணத்தையும் சேர்த்து செலுத்துதல் வேண்டும்.

9.தொடர்ச்சியாக இரு மாதங்கள் குத்தகைக் கட்டணத்தை செலுத்தத் தவறும் பட்சத்தில் எதுவித முன்ன றிவித்தலுமின்றி குத்தகை நிலையம் சபையால் பொறுப்பேற்கப்படும்.

10.இறைச்சிக்கடையினை குத்தகைக்கு எடுத்தவர் வெட்டப்பட்ட மாட்டிறைச்சியை பிரதேச சபை எல்லைக்கு அப்பால் எக்காரணம் கொண்டும் கொண்டுசெல்ல அனுமதிக்கப்பட மாட்டாது.

11.அனைத்து தராசுக்கொட்டகைகளுக்குமான வரி அறவீட்டினை மேற்கொள்ளும்போது தற்போது பாவ னையிலுள்ளவாறு 3% வரியினையே அறவிட முடியும். வரி வீதங்களின் அதிகரிப்பையோ, குறைப்பையோ சபையின் அனுமதியின்றி மேற்கொள்ள முடியாது.

12.கிளிநகர்ப்பகுதி வாகனத்தரிப்பிடக் கட்டண அறவீடு, ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகள் அனைத்தும் "2016.02.02ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிப் பத்திரிகையின் (அதி விஷேசமானது) பகுதி 2 இன்-பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் வாகனங்களை நிறுத்துதலை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல், கட்டுப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல்" தொடர்பான 1 தொடக்கம் 36 வரையான நியமத் துணைவிதிகளுக்கு கட்டுப்படும்.

13.ஆகக்குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களினது கேள்வி நிராகரிக்க ப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.

14.இந் நிபந்தனைகளுக்கு மேலதிகமாக தெரிவு செய்யப்பட்ட குத்தகை தாரர் சபையுடன் செய்துகொள்ளும் குத்தகை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட வேண்டிய பொறுப்புடையவராகிறார்.

கணேசன் கம்ஸநாதன்.
செயலாளரும் கேள்விச் சபைத் தலைவரும்,
கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி

(சி-769)

# தேர்தலில் செலவிடும் பணம் தொடர்பில் நிர்ணயம் செய்யப்படவில்லை
## பவ்ரல் அமைப்பு வலியுறுத்து

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் செலவிடக் கூடிய நிதி பற்றிய வரையறை இன்னமும் நிர்ணயம் செய்யப்படவில்லை என பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடை பெற்ற செய்தியாளர் சந்திப்பு ஒன்றின் போதே இந்த விடயத்தினை பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார்.

"தேர்தலில் நிற்கக்கூடிய வேட்பாளர் ஒருவருக்கோ அல்லது கட்சியொன்றுகோ தேர்தல் பிரசாரக்காலத்தில் செலவிடக்கூடிய நிதி இவ்வளவு தான் என இன்னமும் வரையறைகள் எதுவும் பிறப் பிக்கப்படவில்லை. இந்த நிலையில் வாக்காளர்கள் கட்சிகளாலும் வேட்பாளர்களாலும் பணம் கொடுத்து திசை மாற்றப்படலாம். அதாவது விலைக்கு வாங்கப்படலாம்.

தேர்தலின் போதான நிதிச் செலவிடுதல் தொடர்பில் ஜனாதிபதியிடம் யோசனை கள் முன்வைக்கப்பட்டுள்ளன" என அவர் மேலும் தெரிவித்தார்.

பவ்ரல் அமைப்பு இலங் கையில் இடம்பெறும் தேர்தல்கள் தொடர்பான சுயாதீன கண்காணிப்பினை மேற்கொள்ளும் அதிகாரமிக்க நிறுவனம் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## மகிந்த அணியின்
# வேட்பு மனு நிராகரிப்பு ஒருவருக்கு மாரடைப்பு!

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் (மகிந்த அணி) சார்பில் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனு நிராகரிக்கப்பட் டதன் காரணமாக மனமுடைந்து போன ஒருவர் நேற்று முன்தினம் மாரடைப்பால் மரணமானார்பாணந்துறை ஹிரன கல் துடுவ பிரதேச த்தை சேர்ந்த ஏ.பெட்டிகிரி ஆராச்சி லாகே தோன் நிமல் அஜந்த விஜேசேகர என்ற நபரே இவ் வாறு உயிரிழந்து ள்ளார். இதே வேளை பாணந் துறை வைத் தியசாலையில் சடலம் வைக் கப்பட்டிருந்த போது ஊடக வியலாளர்கள் எனக் கூறி சிலர் உடலை படம்பிடிக்க முயற்சித்த போது, வைத்தியசாலையில் ஏனைய அதிகாரிகள் அதனை தடுத்ததால், அங்கு பதற்றமான நிலைமை ஏற்பட்டுள்ளது.

மேலும், சம்பவம் குறி த்து பாணந்துறை தெற்கு பொலிஸார் விசாரணைகளை முன் னெடுத்து வருகி ன்றனர்.(இ-9)

# கசிப்பு உற்பத்தி நிலையம்...

முன்தினம் மாலை துன்னாலைப் பகுதியில் உள்ள ஓர் இடத்தினைப் பொலிஸார் முற்றுகையிட்டனர்.

இதன்போது கசிப்பு வடிப்பதற்கு தயாராக வைக்கப்பட்டிருந்த பெருமளவு கோடா நிலத்தில் ஊற்றி அழிக்கப்பட்டதுடன் உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் பொருட்களையும் மீட்டனர். (ம-60)

# மாற்றத்திற்காக தலைமை...

நேற்று கிளிநொச்சியில் உள்ளூராட்சி தேர்தலுக்கான வேட்பு மனுவை தாக்கல் செய்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (ம)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 2217603, 021 567 1532

## வீட்டுப் பணிப்பெண் தேவை

கொழும்பில் தங்கிநின்று வீட்டு வேலை செய்வதற்குப் பணிப் பெண் தேவை. (இ)

தொடர்பு:-0774609400

# அவசர அறிவித்தல்
# ஏல விற்பனை பிற்போடல்

பனை அபிவிருத்திச் சபையினால் மேற்கொள்ளப்படவிருந்த கீழ்வரும் ஏலவிற்பனைகள் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளன. இதன் புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

| இல | திகதி | இடம் | நேரம் |
|---|---|---|---|
| 01 | 2017.12.21 | பனை அபிவிருத்திச் சபை-வலந்தலைசந்தி காரைநகர் (VTAற்கு பின்புறம்) | 10.00 am to 12.30pm |
| 02 | 2017.12.22 | பனை அபிவிருத்திச் சபை-வைத்தியசாலை வீதி (சிங்கள மகா வித்தியாலயத்திற்கு முன்பாக) | 10.00 am to 12.30 pm |
| 03 | 2017.12.22 | பனை அபிவிருத்திச் சபை-சரசாலை தெற்கு சாவகச்சேரி (கனகம்புளியடி சந்தி) | 10.00 am to 12.30 pm |

தலைவர்
ஏல விற்பனை ஏற்பாட்டுக் குழு
பனை அபிவிருத்திச் சபை, யாழ்ப்பாணம். (சி-772)

எவரெஸ்ட் குமாரிக்கா
சந்தனாதி தைலம்



- நீண்ட கூந்தல் வளர்ச்சிக்கும்
- இளநரையை போக்கவும்
- பொடுகிலிருந்து நிவாரணம் பெறவும்
- கண் எரிச்சல், தலை வலியை நீக்கவும்
- ஞாபக சக்தியை அதிகரிக்கச் செய்யவும்
- ஏழு வகையான மூலிகைகள் உள் அடங்கிய சிறப்பு தைலம்

100 வீதம் இயற்கையானது

(கற்றாழை, வல்லாரை, நெல்லிக்காய், கரிசலாங் கண்ணி, கறிவேப்பிலை, பொன்னாங்காணி, அவுரி மற்றும் விற்றமின் E) (1394)

எல்லா மருந்தகங்களிலும் சாதாரண கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்

தயாரிப்பு:
எவரெஸ்ட் மருந்தகம்,
உசன், மிருசுவில்,
யாழ்ப்பாணம்.

ஏக விநியோகஸ்தர்
பிரமநாதன் & Co
என்.28, 26, பேரின்பநாயகம் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

கைபேசி எண்: 0776389356, 0777153571



இணையத்தள வடிவமைப்பாளர்கள் தேவை

ஆர்வமுடையவர்கள் தங்கள் சுய விபரக்கோவையை கீழ்க்காணும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும் (1805)

E-mail : itgreengrasshotel@gmail.com



விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்

(C-696)



UK-550*/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்*
DELIVERY IN 3 - 5 DAYS

V2 TRAVELS-0768226240
- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை



ALLIANCE FRANÇAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org (1878)

021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்



TVS
மானிப்பாயில் மாபெரும் வாகனச் சந்தை



- புதிய TVS மோட்டார் சைக்கிள் ஒன்றை சொந்தமாக்க வேண்டுமா? இதோ உங்களது கனவு நிறைவேற.
- உங்களிடம் உள்ள அனைத்து வகையான பழைய மோட்டார் சைக்கிள்களுக்கும் புதிய TVS மோட்டார் சைக்கிள்கள் பெற்றுக்கொள்ளலாம்.
- குறைந்த வட்டி வீதத்தில் லீசிங் வசதி செய்து தரப்படும்.

நத்தார் விசேட சலுகை 5000/- தொடக்கம்.

இடம் : மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய முன்புறம்
காலம் : இம்மாதம் 22,23ஆம் திகதிகளில் 9 மணி தொடக்கம் 5.30 வரை 24ஆம் திகதி 9 மணி தொடக்கம் 2.00 மணி வரை

(C-750)

தொடர்புகளுக்கு:
J.P Motors - Chankanai
0777585909,0212252225,
0775087251

Jaffna ஒட்டோமாட் - நல்லூர் TVS உடன் இணைந்து வழங்குகின்றது. நிபந்தனைக்கு உட்பட்டது.



CCTV
100% தொழில் சார் செயன்முறை பயிற்சிநெறி



CCTV துறையில் வல்லுனர் ஆவதற்கு இதோ ஓர் அரிய வாய்ப்பு

வேலைவாய்ப்பு உத்தரவாதம்*
Next Batch : 06- Jan-2018

Mobile Phone
Repairing Course



I Phones & Smart Phones
Hardware , Software and Unlocking

Next Batch start on 13-Jan-2018 (C-756)

- சகல கேள்விகளுக்கும் தெளிவான விளக்கம்.
- தனிப்பட்ட கவனிப்பு.
- சுயமாக வேலை செய்யும் அளவுக்கு பயிற்சியளிக்கப்படும்.

*10 மாணவர்களுக்கான அனுமதி மட்டுமே உள்ளதால். ஆசன முன்பதிவு செய்யவும்.

iCS EDUCATION
*77,மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(பெருமாள்கோவில் அருகாமையில்)
021-7306000, 076-7013060



விற்பனைக்கு

புதுக் குடியிருப்பு பிரதேச சபை முன்பாக 100 m தொலைவில் வீட்டுடன் காணி விற்பனைக் குண்டு. (C-771)

T.P:
077 042 7561



# NEW SCIENCE HALL

KANNATHIDDY — 2020 A/L கணித, உயிரியல் பிரிவு — JAFFNA

| தமிழ் மொழி மூலம் | ENGLISH MEDIUM |
|---|---|
| **PHYSICS** | **PHYSICS** |
| திரு.S.சோதிலிங்கம் - திரு.G.பிரபா<br>திரு.N.கபிலன் - திரு. K.செல்வன் | MR.S.SOTHILINGAM<br>MR.M.KUGANESWARAN |
| **CHEMISTRY** | **CHEMISTRY** |
| திரு.K.சிவத்திரன் - திரு.N.மகேஸ்வரன்<br>திரு.G.BENO - திரு. T.சுசாந்தன்<br>திரு.J.றஞ்சித்காந்த் | MR.N.MAHESWARAN<br>MR.G.BENO |
| **BIOLOGY** | **BIOLOGY** |
| எமது வழமையான ஆசிரியருடன்<br>திரு.T.கெங்காதரன் - திரு. K.இராகவன் | OUR USUAL TEACHER |
| **COM. MATHS** | **COM. MATHS** |
| திரு.P.செந்தில்நாதன் - திரு.S.சிவகரன் | MR.P.SENTHILNATHAN<br>MR.S.SIVAKARAN |

ஆரம்பம் - 23.12.2017 SATURDAY - 7.00 AM


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.12.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.